# உதயன்

சில இடங்களில் இன்று இடியுடன் கூடிய மழை

சுடர் 30 | கதிர் 321 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 26, செவ்வாய்க்கிழமை 13.10.2015


### நீதிபதி, அரச அதிபர் களத்தில் இறங்க இளைஞர்கள் இடமளிக்கக்கூடாது

யாழ். நீதிமன்றத் தாக்குதல் வழக்கின் தீர்ப்பில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்து

பக். 03

# சிறைகளில் தமிழ்க் கைதிகள் சாகும்வரை உணவு தவிர்ப்பு

## பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்குமாறு கோரி நேற்றுத் திட்டமிட்டவாறு போராட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 13

யாழ்ப்பாணம் உட்பட, நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் திட்டமிட்டவாறு நேற்றுச் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தைச் சிறைச்சாலைகளில் ஆரம்பித்துள்ளனர்.

நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தமக்குப் பொதுமன்னிப்பு வழங்கி உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளனர்.

எமது விடுதலைக்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். தற்போது வரையில் எவையுமே கருத்தில் கொள்ளப்படவில்லை. புதிய ஆட்சியாளர்களுக்கும் எமது விடுதலை தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்த போதும் தொடர்ந்தும் பாராமுகத்துடனேயே இருக்கிறார்கள். ஆகவே இறுதி முயற்சியாக உயிர்விடும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்கின்றோம் என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் நேற்றுக் காலை போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், மகசின் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் ஆணையாளர் புஸ்பகுமார அரசியல் கைதிகளுடன் பேச்சு நடத்தினார். என்ன காரணத்துக்காகப் போராட்டம் நடத்துகின்றீர்கள் என்று அவர் இதன் போது கேட்டுள்ளார்.

அதற்கு அரசியல் கைதிகள், பொது மன்னிப்பில் தம்மை விடுவிக்கக் கோரியே

பக்.24

### கைதிகள் விடுதலை கோரி கவனவீர்ப்பு

கொழும்பிலும், யாழிலும் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கொழும்பில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று, யாழ்ப்பாணத்திலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக, அரசியல் கைதிகளின் உறவினர்களாலேயே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பொதுமன்னிப்பு வழங்கித் தம்மை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிச் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தமிழ் அரசியல்

பக்.24

## விசாரணை வேண்டாம் விடுதலையே வேண்டும்

### வடக்கு முதல்வரின் கடிதம் ஏமாற்றமளிக்கிறது என்றும் தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 13

வழக்கு விசாரணையைக் கோரிப் போராட்டம் நடத்தவில்லை என்றும், பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யவேண்டும் எனக் கோரியே சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதிகள், வடக்கு முதலமைச்சர் ஜனாதிபதியிடம் வழக்கு விசாரணையை துரிதப்படுத்துமாறு கோரி அனுப்பியுள்ள கடிதம் தமக்கு ஏமாற்றமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் இவ்வாறான கருத்தைத் தம்மிடம் தெரிவித்ததாக கைதிகளின் உறவினர்கள் கூறினர்.


மிக நீண்டகாலம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், பொது மன்னிப்பின் கீழ் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுச் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட் டத்தை ஆரம்பித்திருந்தனர். இந்த விடயம் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில், முதலமைச்சரின் இந்தச்

பக்.24

## கைதிகள் உணவு தவிர்ப்பை கைவிட உறுதி வழங்குங்கள்

### மைத்திரிக்கு விக்கி கடிதம்



யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, அவர்களுடைய பிரச்சினைகளை இரக்கத்துடனும் - அனுதாபத்துடனும் அணுகப்படுகின்றது என்ற உத்தரவாதத்தை அவர்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் கோரியுள்ளார். அத்துடன் இந்த விவகாரம் குறித்த காலப்பகுதிக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்ற உறுதிமொழியை வழங்கி அவர்களது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் கோரியுள்ளார்.

பக்.24

### கைதை முன்னரே அறிந்திருந்தார் பிள்ளையான்



கொழும்பு, ஒக்.13

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தாம் கைது செய்யப்படவுள்ளதைக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும், சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்

பக்.24

## அரசியல் கைதிகள் எவருமே இல்லை

### கை விரிக்கிறது நீதி அமைச்சு



யாழ்ப்பாணம், ஒக். 13

நாடு முழுவதிலுமுள்ள சிறைச் சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள, தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான பொறுப்பு நீதி அமைச்சுக்கு உரியது அல்ல என்று தெரிவித்துள்ள நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச, அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து

பக்.24

### தென்னாபிரிக்கா பயணமாகிறது அரச உயர் குழு

கொழும்பு, ஒக்.13

இலங்கையில் இறுதிப் போரின் போது இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் பொறிமுறையின் ஒரு அங்கமான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பது தொடர்பாக ஆராய இலங்கை அரசின் உயர்மட்டக்குழுவொன்று அடுத்த வாரம் தென்னாபிரிக்கா செல்லவுள்ளது.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி ஒழிக்கப்பட்ட

பக்.24

## சமஷ்டித் தீர்வு குறித்து அரசு -சம்பந்தன் பேச்சு

கொழும்பு, ஒக்.13

தேசியப் பிரச்சினைக்குச் சமஷ்டி முறைத் தீர்வுத் திட்டம் தொடர்பில் அரசு தம்முடன் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர். சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எனினும் உத்தியோகபூர்வமாக இந்தப் பேச்சுக்கள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பல நாடுகளில் சமஷ்டி நிர்வாக முறையானது மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இலங்கையின் பார்வையில் சமஷ்டி என்கின்ற பதமானது சில பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. சமஷ்டி என்பது நீங்கள் பயப்படுவது போல் ஒன்றுமல்ல. இது முற்றிலும் சட்டரீதியாக அரசியல் யாப்பில் வரையப்பட்டு மேற்கொள்ளப்படும் ஒரு முறையாகும். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக எமது பேச்சுக்களின்போது முன்னுரிமைப் படுத்து வோம்.

இது தொடர்பாக அரசு என்னுடன் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடியுள்ளது. எனினும் உத்தியோகபூர்வமாக இந்தப் பேச்சுக்கள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை .

இலங்கை மீதான ஐ.நா தீர்மானத்தை அரசானது நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் முற்றுமுழுதாக நிறைவேற்றவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இந்தத் தீர்மானம் நாட்டில் நடைமுறைப்படுத்தப் படும்போது, இது தொடர்பில் நாங்கள் மிகவும் சாதகமான பங்களிப்பை மேற்கொள்வோம்.

இந்தத் தீர்மானத்தை அரசு

பக்.24

### ஏனிந்த வெப்பியாரம் மகிந்தவுக்கு?

பக். 17

## அமெரிக்கத் தீர்மானத்துக்கு 40 கல்விமான்கள் எதிர்ப்பு

### ஜனாதிபதி, பிரதமருக்குக் கடிதம்

கொழும்பு, ஒக்.13

ஐ.. நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட கல்விமான்கள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட முக்கிய தலைவர்களுக்குக் கூட்டாகக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அத்துடன் குறிப்பிட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதைக் கைவிடுமாறு அவர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் பல்கலைக்கழக முறையின் பொறுப்பு வாய்ந்த-கரிசனைக்குரிய கல்விமான்கள் என தங்களைக் குறிப்பிட்டுள்ள அவர்கள், குறிப்பிட்ட தீர்மானத்துக்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேசப் பொறிமுறைக்கும் தாங்கள் கடும் விருப்பமின்மையை வெளிப்படுத்துவதாகவும் கூறியுள்ளனர்.

குறிப்பிட்ட தீர்மானம் தமது சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு

பக்.24

### ஞானசாரரை கைது செய்க

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு, ஒக். 13

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட மூவரைக் கைது செய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்

பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்த ஆண்டின் இறுதிக்குள் மருந்துகள் விலை குறையும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.13
இந்த ஆண்டு இறுதிக்குள் மருந்து வகைகளின் விலைகள் 50 சதவீதத்தால் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய மருத்து வகைகள் சட்டத்தின் விதிகள் நடைமுறைக்கு வரும்பட்சத்தில் அதிகளவிலான மருந்துகளின் விலைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சட்டத்துக்கு அமைய மருந்துகளை விலைகொடுத்து வாங்குவோரைப் பாதுகாப்பது தொடர்பாக அதிகார சபை ஒன்று நிறுவப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சில மருந்துவகைகளில் 200 தொடக்கம் 300 சதவீதம் இலாபம் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. எதிர்காலத்தில் மருந்துகளை இறக்குமதி செய்வோருக்கு 75 சதவீதத்துக்கு மேற்பட்ட இலாபம் பெறுவதற்கு இடமளிக்காத சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(ற)



## குடிதண்ணீர் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.13
மாத்தறை பிரதான வீதியின் பல்லேமல்ல சந்தியில் குடி தண்ணீர்கோரி பிரதேச மக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட மோதலில் 7 பேர் காயமடைந்துள்ளனர். அதையடுத்து ஆறுபேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



புத்தளம் மாவட்டத்தின் மதுரங்குளி- தொடுவாய் பகுதியில் கசிப்புத் தயாரிக்கப் பயன்படும் உபகரணங்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முந்தல் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கசிப்புத் தயாரிப்புக்காக வைக்கப்பட்டிருந்த உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில், அவர்களை புத்தளம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ற)

## ஆயுதங்களுடன் 7 சந்தேக நபர்கள் மதவாச்சியில் கைது

கொழும்பு, ஒக்.13
பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 7 பேர் மதவாச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கைக்குண்டுகள், 6 கூர்மையான ஆயுதங்கள், 10 உலோகக் குழாய்கள், மற்றும் 6 போலி அடையாள அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன.

பணம் கொள்ளை, நகை கடத்தல் மற்றும் காசோலைகளில் ஊழல் சம்பவங்கள் பலவற்றில் இவர் கள் தொடர்புபட்டுள்ளனர் என்று விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் வழங்கிய தகவல்களுக்கமைய கொள்ளையடித்த பொருள்கள் மற்றும் பணத்தை எதிர்வரும் நாள்களில் மீட்கவுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ற)

## மேய்ந்து கொண்டிருந்த பசு மின்னல் தாக்கி இறந்தது

### மல்லாகத்தில் நேற்றுச் சம்பவம்

வலி.வடக்கு , ஒக்.13
மின்னல் தாக்கியதில் சுமார் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதி மிக்க பசு மாடு ஒன்று உயிரிழந்தது. குறித்த பசு கன்று ஈனும் நிலையில் இருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முற்பகல் 10.15 மணியளவில் மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

குறித்த பசு வயல் வெளியில் மேய்ந்து கொண்டிருந்தது என்றும் அப்போது மின்னல் தாக்கியதில் அது அந்த இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த வயல் வெளியைச் சுற்றி நெருக்கமான குடிமனைகள் காணப்படுகின்றன. எனினும் மின்னல் தாக்கத்தால் குறித்த குடிமனைகள் எவற்றிலும் பாதிப்புகள் ஏற்படவில்லை.(ற-86)

# 18 வயதுக்கு குறைந்த 600 பேர் ஓராண்டில் விபத்தில் உயிரிழப்பு

## அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.13
விபத்துக்களின் காரணமாக இலங்கையில் ஆண்டொன்றுக்கு 18 வயதுக்குக் குறைந்த 600 பேர் உயிரிழக்கின்றனர் என்று தெரிவித்தார் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன. ஆண்டொன்றில் 18 வயதுக்குக் குறைந்த 27 ஆயிரம் பேர் விபத்துக்களில் சிக்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அறிவூட்டல்கள் மூலம் இளவயதினர் விபத்துகளில் சிக்கிக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் பொலிஸாரும், சுகாதாரப் பிரிவினரும் ஒருங்கிணைந்து பெற்றோர்கள் மற்றும் சிறார்களுக்கு அறிவூட்டல்களை மேற்கொள்ள

> சிறார்கள் பாதுகாப்பற்றவர்கள். அவர்களை அந்தப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். இது தொடர்பாக கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

வேண்டியுள்ளது - என்றும் தெரிவித்துள்ளார்.

சிறார்கள் பாதுகாப்பற்றவர்கள். அவர்களை அந்தப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். இது தொடர்பாக கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். அடுத்த ஆண்டை அழகான வசந்தமாக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ற-22)

# நெடுந்தீவுச் சிறுமி கொலை வழக்கு: டி.என்.ஏ. அறிக்கை மன்றில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் - அது தொடர்பான மரபணுப் பரிசோ தனை அறிக்கை நீதிமன்றுக்குத் தற்போது கிடைத்துள்ளது. அத னைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் அந்த வழக்குத் தொடர்பில் சுருக்க முறையற்ற விசாரணை இடம்பெற்று வருகிறது.

நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குறித்த சிறுமி 2012 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்தார். சம்பவ தினம் சந்தைக்குச் சென்ற சிறுமி பின்னர் வீடு திரும்பவில்லை. அதன் பின்னர் வெற்றுக் காணி ஒன்றில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது-31) என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் பூரண உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சில வருடங்களின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனாலும் அவரைப் பிணை எடுக்க எவருமே முன்வரவில்லை. அதனால் அவர் 3 வருடங்களுக்கு மேலாக இன்னும் சிறையிலேயே உள்ளார்.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர் பரிசோதனைக்காக அவரது ரத்த மாதிரி பெறப்பட்டு மரபணுப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவற்றுடன் சிறுமியினது சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட சான்றுப் பொருள்களும் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அந்த அறிக்கையே நீதிமன்றுக் குத் தற்போது கிடைத்துள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ற-4)

# வீதியில் சண்டையிட்ட போதை இளைஞர்களுக்கு பொலிஸ் தர்ம அடி


வலி.வடக்கு, ஒக்.13
மது போதையில் வீதியில் பொதுமக்களுக்கு இடையூறாக சண்டையிட்டுக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் பொலிஸார் கொடுத்த அடி தாங்க முடியாது தலை தெறிக்க ஓடினர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏழாலை வடக்கு சிவகுரு கடையடியில் நடந்துள்ளது. இரு இளைஞர்கள் நிறைந்த போதையில் வீதியில் நின்று சண்டையிட்டுள்ளனர். காதால் கேட்க முடியாத [illegible] அவர்களது சண்டை நடந்துள்ளது. அதனால் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டு பெரும் அசௌகரியம் ஏற்பட்டது.

பொதுமக்களும் வழக்கம்போல் ஏதும் செய்ய முடியாத நிலையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இளைஞர்களின் கெட்ட நேரம் அந்த நேரம் வேறு பிரிவைச் சேர்ந்த பொலிஸார் கடமைக்குச் செல்வதற்காக அந்த வழியாக வந்துள்ளனர். அங்கு போதை இளைஞர்களின் சாகசங்களைப் பார்த்த அவர்கள் அவர்களுக்கு தகுந்த 'பரிசு' கொடுத்தனர். அதைத் தாங்க முடியாத இரு இளைஞர்களும் அங்கிருந்து தலை தெறிக்க ஓடி மறைந்துள்ளனர். (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் பிரதேசத்தில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. அதனால் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில், ஆறு பொலிஸ் அதிகாரிகளும் ஒரு ஆர்ப்பாட்டக்காரரும் காயமடைந்துள்ளனர்.
இதனையடுத்து பொலிஸாரைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஆறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள அதே வேளை, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற)

# நீதிபதி, அரச அதிபர் களத்தில் இறங்க இளைஞர்கள் இடமளிக்கக்கூடாது

## யாழ். நீதிமன்றத் தாக்குதல் வழக்கின் தீர்ப்பில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 13
வன்முறைகளில் அல்லது வன்செயல்களில் ஈடுபடுகின்ற குழுவினரை சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று பொலிஸார் அல்லது படையினரின் உதவி கொண்டு கலைப்பதற்கு சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு ரவுடித்தனத்தில் ஈடுபடும் இளைஞர்கள் இடமளிக்கக் கூடாது. - இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.
யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தியமை, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சம்பந்தப்பட்ட 18 வழக்குகளின் சந்தேக நபர்களுக்கான பிணை விசாரணையின் முடிவில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அளித்த தீர்ப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அளித்துள்ள தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வன்செயல்களில் யாரேனும் ஈடுபட்டால், சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று, அந்தக் கும்பலைக் கலைப்பதற்கு, மாவட்ட நீதிவானுக்கும் அரச அதிபருக்கும் குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவையின் 95 ஆம் பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று பொலிஸ் அத்தியட்சகரும் சம்பவ இடத்துக்குச் சென்று கட்டளை பிறப்பிக்க முடியும்.
இந்தச் சட்ட விதியின்படி, நிலைமைக்கு அமைய - தேவை ஏற்பட்டால் பொலிஸாரே கலகக்காரர்களை அல்லது வன்செயல் கும்பலைக் கலைப்பதற்கான கட்டளையைச் செயற்படுத்தும்படி உத்தரவிடுவதற்கு மாவட்ட நீதிபதிக்கும், அரச அதிபருக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தேவையேற்படின் இராணுவத்தை வரவழைத்து கட்டளையைச் செயற்படுத்தும்படி, நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
அவசியம் ஏற்படும் பட்சத்தில் பொதுமக்களுக்குக் கூட கட்டளை பிறப்பித்து வன்செயலாளரைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது கலைப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது.
நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது நீதிபதி மற்றும் அரச அதிபர்களால் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் நாட்டை விட்டு சென்றதன் பின்னர் மாவட்ட நீதிபதிகளும், அரச அதிபர்களும் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை. ஏனெனில் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம், பாதுகாப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந் தன. எனினும் மாவட்ட நீதிபதியாலும், அரச அதிபராலும் குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் 95 ஆம் பிரிவின் கீழ் - கலகம் ஏற்பட்டால், அல்லது வன்செயல்கள் ஏற்பட்டால், அவற்றில் ஈடுபட்டிருக்கும் கும்பல்களை, சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பொலிஸாருக்கு அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்கு கட்டளை பிறப்பித்து கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கான அதிகாரம் இருக்கின்றது.
ஆகவே, இவ்வாறு வன்செயல்களில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கான சட்டத்தை பயன்படுத்தும் நிலைக்கு மாவட்ட நீதிபதியையோ அல்லது அரச அதிபரையோ தள்ள வேண்டாம்.- என்றுள்ளது.
குறித்த வழக்கில் நீதிவான் மன்றால் பிணைமறுக்கப்பட்டவர்களில் 7 பேர் யாழ்மேல்நீதிமன்றில் மீளாய்வு விண்ணப்பம் செய்திருந்தனர். அவர்களில் 2 பேர் அவர்களுக்கு எதிரான 3 குற்றச்சாட்டுக்களுக்கும் 5 பேர் அவர்களுக்கெதிரான 3 வழக்குகளில் 2 வழக்குகளுக்கும் மீளாய்வு கேட்டு விண்ணப்பித் திருந்தனர். அவர்கள் கடும் நிபந்தனையில் விடுவிக்கப்பட்டனர்.
அதன்படி ஒவ்வொருவரும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியுடைய 2 ஆள் பிணைகளில் செல்ல அனுமதியளித்த மேல்நீதிமன்று, அவர்கள் வெளிநாடு செல்வதற்கு மறு அறிவித்தல்வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. அது பற்றி குடிவரவு குடியகல்வு பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும். மாத இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு சமுகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் விதித்துள்ளது. (ற-4)

## கடந்த 9 மாத காலத்துக்குள் 26 மலேரியா நோயாளர்கள்

### தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13
கடந்த 9 மாத காலத்துக்குள் இலங்கையில் 26 மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.
மலேரியா உயிர்கொல்லி நோயாகப் பரவுவதைத் தடுத்துள்ளபோதும் - வெளிநாடுகளில் இருந்து வருவோரால் மலேரியா நோய் இலங்கைக்குள் கொண்டு வரப்படு கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
மலேரியா காணப்படும் நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் இலங்கையர்கள் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், வெளிநாடுகளுக்கு செல்வோர் அதற்கு முன்னர் மலேரியா நோய் தொடர்பில் வழங்கப்படும் மருந்துகளை கட்டாயமாக உட்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-22)

## பாம்புகளால் தீண்டப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

*தென்மராட்சியில் அண்மையில் பெய்த மழையை அடுத்து*

சாவகச்சேரி, ஒக்.13
அண்மையில் பெய்த மழையை அடுத்து தென்மராட்சிப் பகுதியில் பாம்புகளால் தீண்டப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.
பாம்புகளால் தீண்டப்பட்டு சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை மழையை அடுத்ததான நாள்களில் அதிகரித்துள்ளது என்று சாவகச்சேரி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
இரு தினங்களில் மட்டும் மூவர் பாம்புகளால் தீண்டப்பட்டுள்ளனர். கெற்பெலியைச் சேர்ந்த ரங்கநாதன் பாலகுமார் (வயது -17), மீசாலையைச் சேர்ந்த சதீஸ்குமார் சியாம்சன் (வயது -18), பாலாவியைச் சேர்ந்த அழகரத்தினம் நித்தியானந்தன் (வயது -26) ஆகியோரே பாம்பு தீண்டிய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெறுகின்றனர்.
குறித்த மூவரும் வயல் வேலை மற்றும் தோட்ட வேலையில் ஈடுபட்டபோது பாம்புகளால் தீண்டப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை, காலபோக நெற்செய்கைக்காக வயலில் வரம்பு கட்டிய குடும்பஸ்தர் பாம்பால் கடியுண்டு மூன்று தினங்களின் பின்னர் வயல் வரம்பில் சடலமாக மீட்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பூநகரி தம்பிராய் வயல் பகுதியில் நடந்துள்ளது.
கடந்த வியாழக்கிழமை வயலுக்கு வரம்பு கட்டிக் கொண்டிருந்த வேளையில் பாம்பு கடித்துள்ளது. கடித்த பாம்பை அடித்துக் கொன்ற இவர் பாம்பை மண்வெட்டியில் சுற்றிக் கொண்டு வீடு நோக்கி வந்துள்ளார்.
நீண்ட தூரம் நடக்கமுடியாத நிலையில் இடைவழியில் மயங்கி வீழந்து உதவி கிடைக்காததால் அவர் சாவடைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.
இவரது குடும்பத்தினர் ஜெய புரத்துக்குச் சென்றிருந்ததால் எவரும் தேடவில்லை என்றும் சனிக்கிழமை ஜெயபுரத்திலிருந்து வந்த குடும்பத்தினர் வந்தபோதே அவர் மூன்று தினங்களாக வீட்டுக்கு வரவில்லையென்ற தகவல் கிடைத்துள்ளது.
அதையடுத்து அவரைத் தேடிச் சென்ற வேளையில் சடலம் வரம்பின் மீது காணப்பட்டதையடுத்து பூநகரி பொலிஸாரால் மீட்கப்பட்டது .
பூநகரி தம்பிராயைச் சேர்ந்த கந்தையா தவராசா ( [illegible] ) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தையே சாவடைந்தவராவார். (ற-9)

## இரணை இலுப்பைக்குளம் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



மன்னார். ஒக்.13
மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரணை இலுப்பைக் குளம் கிராமத்திற்குச் செல்லும் 10 கிலோமீற் றர் பிரதான வீதியை புனரமைக்கும் பணிகள் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் சுமார் 2.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் குறித்த புனரமைப்பு பணிகள் கடந்தச னிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட் டுள்ளன.
குறித்த நிகழ்வில், தட்சனா மருதமடு பங்குத்தந்தை, மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்திய சோதி, வீதி அபிவிருத்தி திணைக்கள [illegible] பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன், முள்ளிக்குளம் கிராம உத்தியோகத்தர் மற்றும் அங்குள்ள கிராம மட்ட அமைப்புக்கள் என்பன கலந்துகொண்டு குறித்த வீதி புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தனர். (ற)

## நீதிமன்று முன்பாக 200 மீற்றருக்குள் நிகழ்வுகளுக்கு தடை

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தினுள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் முன்பாகவுள்ள வீதியை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கும் யாழ்.மேல்நீதிமன்று தடை விதித்துள்ளது.
நீதிமன்றப் பாதுகாப்புக் கருதி இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல், நீதிமன்றம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் சிறைச்சாலை வாகனம் தாக்கப்பட்டி ருந்தது. இந்நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவி வழங்குவதற்கு நிதி சேகரிக்க முடிவு

## இலங்கை இந்து மாமன்ற அமைப்புகளினதும், ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவிகள் வழங்குவதற்காக நிதி சேகரிப்பு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை இந்து மாமன்ற அமைப்புகளினதும், ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவிகள் கிடைப்பதில்லை. இதுதவிர வெளிநாட்டிலிருந்து நிதி உதவி அனுப்பப்படுகின்றது என்று கூறப்பட்டாலும் அது உரிய முறையில் அரசியல், கைதிகளுக்கு நிவாரணமாக கிடைக்கிறதா?, நிதிகள் கிடைத்தாலும் இவை அரசியல் கைதிகளினுடைய சட்ட உதவிகளுக்காக பாவிக்கப்படுகின்றதா? என்ற சந்தேகங்கள் எழும்பியுள்ளன.

இந்தக் குறைபாட்டை போக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றத்துக்கும் வடமாகாண முதல்வருக்கும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனடிப்படையில் மேற்குறித்த சட்ட உதவியை முறையாக நிர்வகித்து கைதிகளுக்கு உதவ ஒரு நிதியம் அமைக்கப்பட வேண்டும் என்று வடமாகாண முதல்வரை இந்து மாமன்றம் கேட்டிருக்கிறது. அந்த நிதியம் நிறுவப்படும் வரையில் இந்தச் சட்ட நடவடிக்கைக்கு உதவுபவர்களிடமிருந்து நிதி சேகரிக்கப்படவுள்ளதுடன், இந்து மாமன்றமும் இணைந்து அரசியற் கைதிகளுக்குச் சட்ட உதவி வழங்கத் தீர்மானித்திருக்கிறது.

வடமாகாண முதல்வரால் ஒரு நிதியம் நிறுவப்பட்டால் இந்து மாமன்றத்தால். சேகரிக்கப்பட்ட பணம் குறித்த நிதியத்துக்கு மாற்றம் செய்யப்படும். முதற்கட்டமாக சிவஸ்ரீ சந்திரா ஐயா ரகுபதி சர்மா மேன்முறையீடு செய்யவும் சிவஸ்ரீ ஸ்ரீஸ் கந்த சர்மா ஆகியோருக்கு சட்ட உதவி வழங்கவும் இந்து மாமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த பணிக்கு நிதியுதவி செய்ய விரும்புபவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் தொடர்பு கொள்ள முடியும் – என்றுள்ளது.
(ற-ரி5)

# குறைபாடுகளை நீக்காது விட்டால் பதவியிலிருந்து பயனேதுமில்லை

## விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார் வவுனியா இ.போ.ச. சாலை முகாமையாளர்

வவுனியா, ஒக்.13
வவுனியா சாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாது போனால் பதவியில் இருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை.- இவ்வாறு தெரிவித்தார் வவுனியா இ.போ.சாலை முகாமையாளர் ஏச். ஏம்.ஜே. டீ. சோயாஸ்.

வவுனியா இலங்கை போக்குவரத்துச்சாலையில்ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் சாலையை பொறுப்பேற்றதன் பின்னர் ஒரு நாளைக்கு இரண்டு இலட்சம் வரையும் வருமானம் கிடைத்துள்ளது. சேவையாளரின் ஒத்துழைப்புடனேயே இவ்வாறான வருமான அதிகரிப்பை மேற்கொள்ள முடிந்துள்ளது. வவுனியா சாலையில் மொத்தம் 62 பஸ்கள் சேவையிலுள்ளன. அதில் 10 பஸ்கள் செயற்பட முடியாத நிலையில் உள்ளன என்று அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 52 பஸ்கள் மாத்திரமே உள்ளன. 42 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. பழைய பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது சிரமமான காரியமாகவுள்ளது. குறைந்தது இரண்டு வருடத்துக்கு ஒரு தடவையாவது ஐந்து பஸ்கள் புதியவையாக சாலைக்கு வரவேண்டும். – என்று அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2015 இல 17 இலங்கை போக்குவரத்துச் சபை சுற்று நிருபத்திற்கு அமைய 2015.10.12 ஆம் திகதிக்கு பிறகு பிரதிக்கடமையிலிருக்கும் ஊழியர்கள் அனைவரையும் தத்தமது பழைய கடமைக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ய வேலை வழங்கப்பட மாட்டாது தற்போது சாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 206 ஆக உள்ளது. ஆனால் எமக்கு மேலதிகமாக 56 ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். பதில் கடமை புரிவோர் 12 பேர் தற்போது உள்ளனர். அவர்களையும் நிறுத்த வேண்டும். இவ்வாறு சுற்று நிருபத்தில் கூறப்பட்ட விடயங்களை மேற்கொண்டால் எமது சாலையை முன்னேற்ற முடியாது. அதே சமயம் இவ்வாறான சுற்று நிருபங்கள் மூலம் எனது சேவையைத் திறம்பட செய்ய முடியாது.

இப்படியான இக்கட்டான நிலையில் நான் பணிபுரிவதைவிட நான் எனது பதவியிலிருந்து விலகுவது உகந்தது. இது தொடர்பில் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் தமது பதவிலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை. – என்றார். (ற)

## துர்க்கா தேவி ஆலயத்தில் நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 13
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நவராத்திரி விழா நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ள நவராத்திரி விழாவின் பூசைகள் ஒன்பது தினமும் மாலை 4 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் நிறைவடையவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள விஜய தசமி விழாவின் பூசைகள் அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5மணிக்கு மாவை முருகன் எழுந்தருளி வந்து துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் வாழை வெட்டு நடைபெறும். பின் விசேட தீபாராதனைகளுடன் அர்ச்சனைகள் நடைபெறும் எனவும் இரவு 7 மணிக்கு மாவைக் கந்தனின் அலங்கார பவனி ஆரம்பமாகி இரவு 7.30 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் நவராத்திரி விழா நிறைவடையவுள்ளது என்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

# கடற்படை வசமிருந்த வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிப்பு



யாழ்பாணம், ஒக். 13
கீரிமலை நகுலேஸ்வரத்தில் கடற்படையினர் வசம் இருந்த வீடு மற்றும் காணிகள் என்பன நேற்று உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் ஏற்கனவே சில வீடுகள் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் எஞ்சியிருந்த வீடுகளும் உரிமையாளர்களிடம் கடற்படையினரால் கையளிக்கப்பட்டுள்ளன.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியேயும், பாதுகாப்புத் தரப்பினரால் காணிகள் – வீடுகள் என்பன கையகப்படுத்தப்பட்டிருந்தன. கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரால் 3 ஏக்கர் வரையிலான தனியார் காணி பிடித்து வைக்கப்பட்டிருந்தது. அந்தக் காணிகளை சுவீகரிப்பதற்காக சுவீகரிப்பு அறிவித்தல்களும் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர், சமாதி சிலை மற்றும் அதற்கு அருகிலிருந்து வீடு என்பன கடற்படையினரால் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய இரண்டு காணிகள் மற்றும் வீடு என்பன நேற்று உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் காணி உரிமையாளர்கள் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் க.சிறிமோகனன், வலி.வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
(ற-5)

# நவராத்திரியின் 9 தினங்களை நல்லொழுக்க தினங்களாக்குக

## வீணாகான குருபீடத்தினர் வேண்டுகோள்

இன்று ஆரம்பமாகியுள்ள நவராத்திரி விழாவின் ஒன்பது தினங்களும் ஆன்மிக நல்லொழுக்க திருநாள்களாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளன என்று வீணாகான குருபீடத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நன்றாக இருந்த தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகளைப் போரினால் பெரும்பாலும் இழந்து விட்டோம். பண்பாட்டுப் பிறழ்வுக்கு தீர்வு காண எம்மை வல்லமை உடையவர்களாக மாற்றவேண்டும். இல்லை எனில் ஒரு தலை முறையை இழக்க நேரிடும். அதனால் அவர்களின் வாழ்வைச் சீர்குலைத்த பாவம் எம்மையே வந்து சேரும்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் நவராத்திரி விழா நிறைவடையும் 21 ஆம் திகதி புதன்கிழமை வரை ஆன்மிக நல்லொழுக்க தினங்களாகப் பிரகடனப்படுத்தி தொண்டாற்ற அனைவரையும் அழைக்கின்றோம்.

சமூகத்தின் ஒவ்வொரு அமைப்பும் இந்த பிரகடனத்துக்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.- என்றுள்ளது. (ற-ரி5)

## உளவியல் கண்காட்சி

யாழ்ப்பாணம் , ஒக் .13
உளநல தினத்தை முன்னிட்டு , யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மெய்யியல், உளவியல் துறையினரால், உளவியல் கண்காட்சி நடைபெறவுள்ளது. நாளை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை ,காலை 9 மணி தொடக்கம் மாலை 3மணிவரை யாழ் பல்கலைக்கழகத்தின் , புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியிலும், புதிய பரீட்சை மண்டபத்திலும் இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் உளவியல் பிரிவு தலைவர் கலாநிதி . கே . கஜவிந்தன் நிகழ்விற்கு தலைமை தாங்கவுள்ளார். பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அனைவரையும் கண்காட்சியில் கலந்துகொண்டு, பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.
(ற-ரி4)

# மனு கொடுக்க வந்த முல்லை. வலய ஆசிரியர்கள் காலை முதல் மாலை வரை காத்திருந்து ஏமாற்றம்

## பொறுப்பு வாய்ந்த அலுவலர் எவரும் சந்திக்க மறுத்தனர் எனக் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஒக்.13
முல்லைத்தீவுக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த – யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் மறுக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவுடன் கல்வி அமைச்சரின் அலுவலகம் முன்பாகக் காத்திருந்தபோதும் அவர்களை பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் எவரும் சந்திக்க மறுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனால் காலை முதல் மாலை வரை 33 ஆசிரியர்கள் கல்வி அமைச்சரின் செயலாளரது அலுவலகம் முன்பாகக் காத்துக் கிடந்தனர்.

கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர் எனப் பலரும் அலுவலகத்துக்கு வந்து சென்றபோதும் குறித்த ஆசிரியர் பக்கம் எவரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்று தெரி[illegible].

முல்லைத்தீவு கல்வி [illegible] கடந்த 6 ஆண்டுகளாகக் கடமையாற்றியுள்ளோம். இப்போது யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்தபோது இடமாற்றம் மறுக்கப்பட்டுள்ளது என்று வேதனையோடு கூறினர் அங்கு காத்திருந்து களைத்துப் போயிருந்த ஆசிரியர்கள்.


[illegible] என்ற கோரிக்கை மனுவுடன் நேற்று ஒருநாள் விடுமுறை எடுத்து நாங்கள் அனைவரும் வந்திருந்தோம். ஆனால் இங்கு எமது கோரிக்கையை ஆராயவோ – அல்லது எமது மனுவைப் பெற்றுக் கொள்ளவோ பொறுப்பு வாய்ந்த அலுவலர் எவரும் வரவில்லை – என்றும் அவர்கள் விசனத்தோடு தெரிவித்தனர்.

நாங்கள் அலுவலக வளாகத்தில் இன்று (நேற்று) காலை முதல் கால்கடுக்கக் காத்திருக்கின்றோம். மாலை வரை எவருமே எமது பிரச்சினை என்னவென்று கேட்கவில்லை. செயலாளர், மாகாணப் பணிப்பாளர் எனப் பலரும் வந்து சென்றனர். ஆயினும் எவரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. எம்முடன் பேசுவதற்கே மறுத்துவிட்டனர். – என்று ஆசிரியர்கள் விரக்தியாகத் தெரிவித்தனர். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் விடுவிப்பை இனியும் தாமதிக்க வேண்டாம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக்.13

சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை இனியும் தாமதிக்காது அவர்களை விடுவிக்க ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் நேற்று முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் அவர்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்குகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு, மெகஸின், சீ.ஆர்.பி அநுராதபுரம், தும்பறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய சிறைகளில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 250 க்கும் அதிகமான அரசியல் கைதிகள் இன்று முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தொடர்ச்சியாகப் பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் குறித்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அந்த அரசுக்குப் பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்த நிலையில் ஆர்ப்பாட்டங்கள் மூலமாகவும் அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்தோம்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் சமூக அமைப்புக்கள் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மேற்கொண்ட சகல போராட்டங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கியதோடு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர்களும் அவற்றில் கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தோம். ஆனால் மகிந்த அரசு மௌனம் காத்தது. அந்த நிலையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், காணாமல் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் நிலை குறித்து மக்கள் தொடர்ச்சியாகத் தற்போதைய ஜனாதிபதியிடம் முறையிட்டு வருகின் றனர். ஆனாலும் எவ்வித பலனும் இல்லை. அரசியல் கைதிகளின் பிள்ளைகள் கடுமையான மன அழுத்தத்தில் உள்ளதோடு அவர்களின் குடும்பம் சோகத்திலும் ஆழ்ந்துள்ளது. அவர்களின் விடுதலைக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இதனால் பொறுமை இழந்த அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்த நிலையில் அவர்களின்போராட்டத்துக்குத்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முழு ஆதரவை வழங்குவதுடன், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அரசுக்கு மீண்டும் அழுத்தம் கொடுக்கவுள்ளது. – என்றார். (ற)

# டுபாய் வங்கியில் என் பணம் இல்லை

## மறுக்கின்றார் நாமல்

கொழும்பு, ஒக்.13

டுபாயிலுள்ள பிரபல வங்கி யொன்றில் தாம் இரகசியக் கணக்கைப் பேணி வருவதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டில் எந்தவித உண்மையுமில்லை யென்றும், இது தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் அவப் பெயரை ஏற்படுத்தும் செயலெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் தலைவரொருவரின் மகன் டுபாய் வங்



கியில் 650 மில்லியன் அமெரிக்க டொலரைப் பதுக்கி வைத்துள்ளார் என்றும் குறித்த பணத்தை அரசுடைமையாக்கும் முயற்சியில் அரசு செயற்பட்டு வருகின்றது என்றும் அண்மையில் ஊடகங்களில் பரவலாகச் செய்திகள் வெளிவந்தன.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட போதே நாமல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

டுபாய் வங்கியில் நாமல் பெருந்தொகைப் பணத்தை வைப்புச் செய்துள்ளார் என்று வங்கியின் அதிகாரியே தமக்குத் தெரிவித்தார் என்று அண்மையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் புதிய அரசு கையேற்றதன் பின்னர் டுபாய் வங்கியிலிருந்து சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர் உக்ரேனிலுள்ள வங்கிக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் குறித்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள நாமல், தமக்குச் சேறுபூசும் வகையில் இவ்வாறான விடயங்கள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

# தேர்த்திருவிழாவை நடத்த அனுமதி வழங்க வேண்டும்

## பொலிஸ்மா அதிபரிடம் பொதுபல சேனா கோரிக்கை

கொழும்பு, ஒக்.13

கொழும்பு 13, பாபர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவை நடத்த அனுமதிக்க வேண்டுமென்று பொதுபல சேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது என்று அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி ஆரம்பமான குறித்த ஆலயத்தின் தேர்த் திருவிழா, ஆலய நிர்வாகத்தினருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆலயத்துக்கோ ஆலய நிர்வாகத்துக்கோ இதுவரை எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆலயத்துக்கு அருகில் பள்ளிவாசல் காணப்படுவதால் குறித்த தேர்த்திருவிழாவை நடத்த முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்று குறிப்பிட்ட திலந்த விதானகே, இதுகுறித்து முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவில்லையென அமைச்சர் மனோ கணேசன் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஆலயத்துக்கும் நிர்வாகத்துக்கும் பாதுகாப்பு வழங்குமாறும், திருவிழாவை நடத்த ஆவன செய்துகொடுக்கப்பட வேண்டு மெனவும் பொலிஸ்மா அதிபருக் குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று திலந்த விதானகே மேலும் தெரிவித்துள் ளார். (ற)



'வன ரோபா' தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கும் முகமாக நடைபெற்ற தேசிய நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் கொத்மலையில் இடம் பெற்றது. (ற)

# பிரதமராகும் கனவு வீரவன்ஸவுக்கு; அதனாலேயே குழப்பம் செய்கிறார்

## பிரதி வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.13

பிரதமராகும் கனவுடனேயே நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றார் என்று பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விமல் வீரவன்ச எல்லாக் காலங்களிலும் எவருடைய தோளிலேனும் ஏறியே அரசியல் செய்து வருகின்றார். பிரதமராகும் கனவு அவருக்கும் இருக்கும்.

அதற்குத் தேவையான முயற்சிகளில் ஒன்றாகவே தற்போதுஅவர் நாடாளுமன்றில் குழப்பங்களை விளைவித்து வருவதனைக் கருத வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியில் இருந்த காலத்தில் ஜே.வி.பி. 'லேபிளில்' பிரபல்யம் அடைந்து பின்னர் அந்தக் கட்சியைக் காலால் உதைத்து விட்டு வெளியேறினார்.

பின்னர் மகிந்தவின் கரத்தைப் பலப்படுத்துவதாகத் தெரிவித்து அவரின் தோள் மீது ஏறி அரசியல் செய்தார். எப்போதும் விமல் வீரவன்சவுக்கு தனக்கு என ஓர் அரசியல் நிலைப்பாடு இருக்கவில்லை.

தற்போது அவ்வாறான ஒரு தனி நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் விமல் வீரவன்ச ஈடுபட்டுள்ளார். இது வரை அத்தகையதொரு நிலைப்பாடு இருக்கவில்லை என உணர்ந்து கொண்ட விமல் தற்போது அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

எனினும், துரதிர்ஷ்டவசமாக விமல் வீரவன்சவை மக்கள் ஒரு கோமாளியாகவே அடையாளம் கண்டுள்ளனர். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்புரிமையும் விமல் வீரவன்ச இழக்கும் நிலைமையே காணப்படுகின்றது.- என்று கூறியுள்ளார். (ற)

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்படா

## அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படமாட்டாது என உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் எவ்வித மாற்றங்களும் கிடையாது.

தேர்தல் நடைபெறும் காலம் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் அறிவித்துள்ளனர். அதன் அடிப்படையில் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும்.

தொகுதிவாரி அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்குத் தேவையான எல்லை நிர்ணயப் பணிகள் மார்ச் மாதத்திற்கு முன்னதாகப் பூர்த்தியாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தத் தேவையான முழுப் பலத்தையும் வழங்க எமது அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படும். – என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பரின் உதவியைப் பெற்று மகிழ்வீர்கள். எதிர்கால முன்னேற்றம் குறித்துச் சிந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். சுப விருப்பத்தில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**இடபம்:** எவரிடமும் நிதானத்துடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பாதுகாப்புக் குறைந்த இடங்களுக்குச் செல்வது கூடாது. மனைவியின் செயற்பாட்டால் நிம்மதி உண்டாகும்.

**மிதுனம்:** உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும் தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகத்தை பின்பற்றுவது நல்லது. மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**கடகம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கைவந்து சேரும். உறவினர் வழியில் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நடக்கும்.

**சிங்கம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் தேவையறிந்து அவற்றைப் பூர்த்தி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும் இலா பம் கூடும்.

**கன்னி:** எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும். நண் பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் கிட்டும். பெண்கள் வெகு நாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவர்.

**துலாம்:** மனக் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். தொழில், வியாபாரத்தில் நடைமுறைச் செலவு கூடும்; இலாபம் சுமார். உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

**விருச்சிகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனில் ஆர்வம் காட்டுவர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபடுவர்.

**தனுசு :** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும்; லாபம் கூடும். புதிதாகச் சொத்து வாங்க யோகம் உண்டு. அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**மகரம்:** எவரிடமும் விவாதத்தில் ஈடுபடுவது கூடாது. தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தை கடைபிடிப்பர். புத்திரரின் செயற்பாடு மனதுக்கு மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** குடும்ப நலனுக்காக பொறுப்புடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவர். உணவு விடயத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**மீனம்:** எதிரியும் கூட வலிய வந்து நட்புப் பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் அதிக வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். பிள்ளைகளின் செயல்பாடு பெருமை அளிக்கும்.



## சொந்தக் குரலில் பேசிய நயன்தாரா!!

தமிழ்ச் சினிமாவில் பத்தாண்டுகளுக்கு மேல் முதல் நிலை நாயகியாகத் திகழும் நயன்தாரா இதுவரை தமிழ்ப் படங்களில் சொந்தக் குரலில் பேசி நடித்ததில்லை. அந்தக் குறையைத் தற்போது தாம் நடித்துள்ள நானும் ரவுடிதான் படத்தின்மூலம் போக்கியுள்ளார். விக்னேஷ் சிவன் இயக்கத்தில் விஜய் சேதுபதி ஜோடியாக நயன்தாரா நடித்துள்ள படம் – 'நானும் ரவுடி தான்'. அனிருத் இசையமைத்துள்ள இந்தப் படத்தை தனுஷ் தயாரித்துள்ளார். விரைவில் வெளிவரவுள்ள இந்தப் படத்தில்தான் நயன்தாரா சொந்தக் குரலில் பேசியுள்ளார். இதுவரை தமிழில் பல படங்கள் நடித்துள்ள நயன்தாரா எந்தவொரு படத்துக்கும் தனது சொந்தக் குரலைப் பயன்படுத்தியதில்லை. ஆனால் முதல்முறையாக நானும் ரவுடி தான் படத்துக்குச் சொந்தக் குரலில் பேசியுள்ளார்.

அவர் இந்தப் படத்துக்கும் டப்பிங் குரலைப் பயன்படுத்தவே விரும்பினார். ஆனால் இயக்குநர் விக்னேஷ் சிவன் வற்புறுத்திக் கேட்டதால் சொந்தக் குரலில் பேசியுள்ளாராம். சமீபத்தில் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ள நானும் ரவுடி தான் படத்தின் முன்னோட்டக்காட்சிகளில் இடம்பெற்றுள்ளது நயன்தாராவின் சொந்தக் குரல்தான்!

## ஆணாக மாறிய பெண்





மூன்று வருடங்களாக திருநங்கை ஒருவர் தான் பெண்ணுக்கானதோற்ற இயல்புகள் இருந்து ஆணாக மாறுவதை தினம்தினம் செல்பீ எடுத்து தமது உருமாற்றத்தை' ஆவணப் படுத்தி உள்ளார். 17 வயதில் தன்னை செல்பீ எடுக்கத் தொடங்கிய ஜேமீ ரேயின்ஸ் 18 வயது முதல் முழு மையாக ஆணாக மாறுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள ஆரம்பித்துள்ளார்..!

இதற்காக மிகவும் நுட்பமான மாற்றங்களை, தன் முகத்தில் தொடர்ச்சியாக செய்து கொண்டார். இதனால் அவருடைய முகம் மெல்ல மெல்ல ஆணாக மாறத்தொடங்கியது, முக்கியமாக அவர் முகத்தின் அமைப்பு நீளமாகவும் குறைவான சதைப் பற்றுள்ளதாகவும் மாறியது. பின்னர் அவருக்கு முகத்தில் முடிகள் முளைக்க ஆரம்பித்ததுடன், மூன்று ஆண்டுகளுக்கு பின்பு நன்கு தாடி, மீசை வளர்ந்து முழு ஆணாக மாறியுள்ளார் ஜேமீ ரேயின்ஸ். மேலும் மூன்று ஆண்டுகளில் அவர் தாம் எடுத்த சுமார் 1400 செல்பிக்களை, கேர்ள் டு மென் என்ற குறும்படமாக உருவாக்கி உள்ளமையும் குறிப் பிடத்தக்கது. இவரின் குறும்படமானது, பிரபல சேனல் 4 இன் தயாரிப்பாளரை மிகவும் கவர்ந்துள்ளது என்பதுடன், 'பார்ன் இன் ராண்ங் பாடி' என்ற பெயரில் விரைவில் இவரின் செல்பீக்களை கொண்டு ஆவணப்படம் ஒன்றும் உருவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்
ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்

மோடி அரசு 950 கோடி ரூபா கடனைத் தள்ளுபடி செய்த ஏழை விவசாயி இவர்தான்
சுட்டெரிக்கும் கடும் வெய்யிலில் வியர்வை சிந்தி .....
கால் வயிறு கஞ்சியோடு .....
விவசாயம் செய்து கொண்டு இருந்தபொழுது எடுத்த படம்



### பேஸ் புக்கில் பிடித்தவை...



பொருள்களில் கவனம் தேவைதான்
அதற்காக இப்படியா...?



ஆண்களை விட புத்திசாலிகள் யாருமில்லை
பெண்களை விட பொறுமைசாலிகள்
யாருமில்லை.அவர்கள் காதலில் விழும்வரை

லைக் வாங்க என்னென்ன கூத்து
நடக்குது பாருங்க...





தம்பி... ஸ்ரோங்கா... ஒரு... டீ... போடு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாக்கடலில் இடிதாங்கி அமைக்க மீனவர்கள் சார்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ்.குடாக்கடலில் மீனவர்களின் பாதுகாப்புக் கருதி இடிதாங்கியை அவசரமாக அமைத்துத் தருமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.மழை காலங்களில் ஏற்படும் இடி மின்னல்களில் இருந்து மீனவர்களின் உயிரைக் காப்பாற்றும் முகமாக இடிதாங்கிகளை அமைப்பது மிக முக்கியமானது.

குறிப்பாக குடாக்கடலில் இதுவரைக்கும் இடிதாங்கி அமைக்கப் படாததால் மழை காலங்களில் ஏற்படும் இடி மின்னல்களுக்கு மத்தியில்மிகவும்ஆபத்தானசூழலிலேயே மத்தியிலேயே மீனவர்கள் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடு பட்டு வருகின்றனர்.கடந்த வாரத்திலும் குருநகர்ப்பகுதியை சேர்ந்த மீனவர் ஒருவர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் மின்னலுடன் கூடிய இடி தாக்கி உயிரிழந்தார். மீனவர்களை இந்த இடிமின்னல்களில் இருந்து காப் பாற்றிக்கொள்ள இடி தாங்கியை அமைப்பது மிகவும் முக்கியமானது என்றும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்து யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணாவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, குடாக் கடலில் மழை காலங்களில் ஏற்படும் இடி மின்னல்களில் இருந்து மீனவர்களின் பாதுகாப்பு தொடர்பாக இடி தாங் கிகள் அமைப்பதுதொடர்பானகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் கடற்றொழில்அமைச்சும்இந்தஇடிதாங்கியை அமைப்பது தொடர்பான நடவடிக் கையை மேற்கொண்டு வருகின்றது எனத் தெரிவித்தார். (ஐ–17)

## கணினி மற்றும் ஆங்கில அறிவு இன்றைய காலத்தின் தேவை

அச்சுவேலி, ஒக்.13
கணினிமற்றும்ஆங்கிலஅறிவு மாணவர்கள்,ஆசிரியர்கள் அனைவருக்கும் மிகமிக அவசியம். இந்த இரண்டு துறைகளிலும் தேர்ச்சி பெற்றஆற்றல்உள்ளவர்கள்கற்றல் – கற்பித்தலில் சிறந்து விளங்குவதோடு தமது எதிர்கால வாழ்க்கையிலும் மேல்நிலை பெறலாம். இவ்வாறு மாணிக்கவாசகர் திருவாசகம் தெரிவித்தார். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் அத்தியார் நினைவு தினமும் கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் கல்லூரிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டலண்டன்வாழ்பிரமுகரும் கல்லூரியின் பழைய மாணவனுவமானதிருவாசகம்மேலும்தெரிவிக்கும் போது: இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த போர்த்துக்கீசர் தொடக்கம் ஆங்கிலேயர் வரை தமது சமயத்தை பரப்ப வேண்டும். தமது ஆட்சியின் நிர்வாகத்தை சுதேசிகளை பயன்படுத்தி நிர்வாகம் செய்யவேண்டும்என்றநோக்கோடு பாடசாலைகளை நிறுவி சமயக்கல்வியோடு இணைந்த நிலையில் கல்வியைப் போதித்தனர். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சியில் நிலவிய இறுக்கமான கட்டுப்பாடுகள் ஆங்கிலேயரது ஆட்சியின்பிற்பகுதியில் தளர்த்தப்பட்டமையினால் உள்ளூர் பிரமுகர்கள் கல்விக் கூடங்களை நிறுவி இந்து சமயத்தையும் கல்வியையும் வளர்ப்பதற்கு முற்பட்டனர். அந்த வகையில் ஆறுமுக நாவலர் நீர்வேலி சிவசங்கரபண்டிதர்போன்றவர்கள் உட்பட பலர் இந்து சமயத்தை, கல்வியை வளர்க்க தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்போடு பயன்படுத்தினர். உள்ளூரில் கல்விக் கூடங்களை நிறுவி கல்வியைப் போதித்தனர்.

தொழிற்புரட்சியில் உலகியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் போன்று இன்று நடைபெற்றுவரும் கணினி யுகப்புரட்சி பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட அனைவரும் கணினி அறிவும் ஆங்கில அறிவும் உள்ளவர்களாகத் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதன்மூலம் கற்றல் – கற்பித்தலில் மேல்நிலை பெறுவதோடு தமது வாழ்க்கை நிலையையும் மேல்நிலைப்படுத்த முடியும் – எனத் தெரிவித்தார். (ஐ–11)

## தேசிய வாசிப்பு மாத போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, சாவகச்சேரி பிரதேச சபையின்கைதடிபொது நூலகம்,வாசகர்களுக்கான செயற்றிட்டங்களை இந்த மாதம் முழுவதும் நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்த செயற்றிட்டத்தில் கைதடி பிரதேச முன்பள்ளி மாணவர்களினால் ஆக்கப்பட்ட சஞ்சிகைகள், சிறுநூல்கள் போன்றவற்றையும் பொம்மைகள், படங்கள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றையும் சிறுவர் பகுதியில் காட்சிப்படுத்தவுள்ளதுடன், மாணவர்களிடையே பல போட்டி நிகழ்வுக ளையும், நடமாடும் நூலக சேவை, புதிய நூல்களின் கண்காட்சி, தேசிய வாசிப்பு மாத சின்னம் அறிவித்தல், வாசிப்பைத் தூண்டும் துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல், சிறுவர்களுக்கான வீடியோ நிகழ்வுகள் காட்சிப்படுத்தல், நூல்கள் அன்பளிப்புப் பெறுதல் உள்ளிட்ட பல நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. எனவே இந்தச் செயற்றிட்டங்களில் மாணவர்கள், வாசகர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ–288)

## குடும்பப் பெண்ணுக்கு சீர்திருத்தக் கட்டளை

யாழ்ப்பாணம்,ஒக்.13
நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை செலுத்தத் தவறிய 5 பிள்ளைகளின் தாயாரை 3 மாத காலங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துன்னாலை தக்குச்சம்பாதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் இளந் தாய் ஒருவர் 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு,உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடா மற்றும் அதற்கான உபகரணங்கள் என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறைநீதிமன்றில்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த பெண்ணுக்கு 5 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் 10ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறும் நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையில்வறுமைகாரணமாக குறித்த பெண்ணால் தண்டப் பணத்தை செலுத்த முடி யா ததை அடுத்து சமுதாய சீர்திருத்த அதிகாரியால் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து அவரை 3 மாதங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். இதேவேளை இதுவரை மூன்று பெண்கள் உட்பட 53 பேர் இவ்வாறு சமுதாய சீர்திருத்தத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ–108)

## குறுநாவல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.13
வல்வெட்டித்துறை மானங்கனை இளங்கதிர் கலா மன்றத்தின் அனுசரணையில் பிறேம் எழுதிய – காய்ந்துபோகாதஇரத்தக்கறைகள் எனும் குறுநாவல் வெளியீட்டு விழா, எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி உதயன் பணிமனை கேட்போர் கூட மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத் தர் ப.சர்மிலன், பருத்தித்துறை பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி ரே.செல்வ சுகுணா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ–422)

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.13
வலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் ஜே.வி.சி. 21/சி, சி/ 301 எனும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த அளவெட்டி மேற்கு சனசமூக நிலையத்தின் பெயரை அளவெட்டிமுதலியவேள்சனசமூக நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்வதற்கு பொதுச்சபைக்கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என சனசமூக நிலையத்தின் செயலாளர் வை. அஜந்தன் தெரிவித்துள்ளார். அத்துடன் வலிகாமம் வடக்கு பிரதேசசபையுடன் இணைந்து டெங்கு நுளம்பு ஒழிப்புச் சிரமதா னம் போன்ற சமூக நலன் சார்ந்த பணிகளிலும் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ–ரி,6)

## தேசியவாசிப்பு மாத பொது அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.13
ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலைதீவு பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசகர்களுக்கான பொது அறிவுப் போட்டியொன்று எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குபொதுநூலகமண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. எனவே பங்குபற்றஆர்வமுள்ளவாசகர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு நூலக சமூகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ)

## குடாநாட்டில் கத்தரிக்காய், முருங்கை விலைச்சரிவால் விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13
யாழ். குடாநாட்டில்கத்தரிக்காய் மற்றும்கறிமுருங்கையின்விளைச்சல் அதிகரித்துள்ளதால் இந்த மாவட்டத்தின் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதையகாலநிலைக்குஏற்றவாறு கத்தரி மற்றும் முருங்கை என்பன அதிகளவு விளைச்சலை விவசாயிகளுக்கு ஈட்டிக் கொடுத்துள்ளன. அத்துடன் வன்னிப்பிரதேசங்களில் இருந்தும் வியாபாரிகளால் தினமும் பெருமளவில் கத்தரிக்காய், முருங்கைக்காய் போன்றவை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன. இவை தாராளமாகக் குடாநாட்டுச் சந்தைக்கு வந்து சேர்வதால் இவற்றின் விலை திடீரெனச் சரிந்துள்ளன. திருநெல்வேலிச் சந்தையில் ஒருகிலோ கத்தரிக்காய் 30 ரூபாவாகவும், முருங்கைக்காய் ஒரு கிலோ 70 ரூபாவாகவும் விற் பனை செய்யப்பட்டன.

இவற்றின் திடீர் விலைச் சரிவால் முருங்கை, கத்தரிச் செய்கையா ளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.(ஐ–17)

## புதிய நிர்வாகத் தெரிவு

அச்சுவேலி,ஒக்.13
அச்சுவேலிதெற்குகிராமஅபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் புதியநிர்வாகசபைதெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் தலைவராக மா.ஞானலிங்கம், உப தலைவராக சி.இராசேந்திரம், செயலாளராக சி.விஜிதரன், உபசெயலாளராக அ.கமலேஸ்வரன்,பொருளாளராக க.குகநேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ–11)

## சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள் இந்த வருடம் வவுனியாவில்

141 ஆவது சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள் இந்த வருடம் வவுனியாவில் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில், வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் இரட்ணசிங்கம் தலைமையில் இந்த அஞ்சல் தின நிகழ்வு இடம்பெறும். மத்திய அஞ்சல்மா அதிபர் ரோகண அபயரட்ண நிகழ்வின் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். இந்த அஞ்சல் தின நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த தபால் துறையைச் சேர்ந்த பணி யாளர்கள், அதிகாரிகள் கலந்து கொள்வர். அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற தபால் பணியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். அத்துடன் தபாலகங்களில்பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் சிறந்த [illegible] உத்தியோகத்தர்கள் போ[illegible] கௌரவிக்கும் நிகழ்வும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது. (ஐ–17)

## சர்வதேச கை கழுவுதல் தினம்

சாவகச்சேரி,ஒக்.13
சர்வதேச கை கழுவுதல் தினத்தை நாளை மறுதினம் அனைத்துப் பாடசாலைகளிலும் அனுஷ்டிக்க சுகாதாரப் பகுதியினரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [illegible] அனைத்துப் பாடசாலைகள் முன் பள்ளிகள் போன்ற இடங்களில் கை கழுவுதல் தொடர்பான விழிப் புணர்வு செயற்பாடுகள் சுகாதாரத் திணைக்கள அலுவலர்களால் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், முன் பள்ளிகள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு தமக்கு அறிவிக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர் (ஐ–9)

## சரஸ்வதி சிலை திரைநீக்கம்

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் நிறுவப்பட்ட சரஸ்வதி சிலை திரைநீக்கம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாணசபைஉறுப்பினர்கேசவன்சயந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டுசரஸ்வதி சிலையை திரைநீக்கம் செய்யவுள்ளார். நிகழ்வில் சிறப்புவிருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சைவ சமய பாட ஆசிரிய ஆலோ சகர் செல்வி இ.இராமலிங்கமும், கௌரவ விருந்தினராக வரணிவைத்தியசாலைமருத்துவர் வி.ஆறுமுகமும் கலந்துகொள்வர். (ஐ–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் போட்டி முடிவுகள்

கரவெட்டி.ஒக்.13

கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் கரவெட்டிக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினப் போட்டிகளின் முடிவுகள்:

**முதியோர் தினப்போட்டி முடிவுகள்:**

**பேச்சு– கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – ச.தனுஷ்கா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – ஆ.தர்சினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – நி.ஹரினி (கரணவாய் மகா வித்தியாலயம்).

**மத்திய பிரிவு**

முதலாமிடம் – ர.ஆர்த்திகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – சி.தனுசன் (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), மூன்றாமிடம் – பே.பவித்திரா (வதிரி திருஇருதயக் கல்லூரி)

**மேற்பிரிவு**

முதலாமிடம் – ச.பாமதி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – இ.நிரூபா (விக்கினேஸ்வராக் கல்லூரி), மூன்றாமிடம் – செ.சிந்தூரி (ஞானாசாரியார் கல்லூரி)

**கட்டுரை கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – ததுவாரகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – வி.கஸ்தூரி (கரணவாய் மகா வித்தியாலயம்), மூன்றாமிடம்–சு.தக்ஷா(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**மத்திய பிரிவு**

முதலாமிடம் – த.விருஷா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – இ.சாத்வீகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – ஜெ.ஜெனோ சிகா (கரணவாய்பொன்னம்பல வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

முதலாமிடம் –ச.ஜெபிக்கா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் –ஜே.ஜெனிஷாயினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – வி.பிரியங்கா (ஞானாசாரியார் கல்லூரி)

**கவிதை– கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – கோ.தேனுகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – சி.நிரோஜி (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), மூன்றாமிடம் – வி.கேமிதா (கரணவாய் மகா வித்தியாலயம்)

**மத்தியபிரிவு**

முதலாமிடம் – கு.மிதுல்லா (இமையாணன் அ.த.க.பாடசாலை), இரண்டாமிடம் – ம.சாரங்கன் (வதிரி திருஇருதயக் கல்லூரி), மூன்றாமிடம் – சு.ஜெனிற்றா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவு**

முதலாமிடம் – பு.பிரியந்தி (விக்கினேஸ்வராக் கல்லூரி), இரண்டாமிடம – கௌ.தமிழ்நிலா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – ப.தரங்கினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**சிறுவர்தினப் போட்டி முடிவுகள்:**

**கவிதை– கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – வி.திருமகள் (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – வ.ஜெயதர்சி (வதிரி திரு இருதயக் கல்லூரி), மூன்றாமிடம்–உ.ஆர்நிகன்(உடுப்பிட்டிஅ.மிகல்லூரி)

**மத்திய பிரிவு**

முதலாமிடம் – ர.கீர்த்திகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – நா.சுமாலினி (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), மூன்றாமிடம் – சி.லக்சிகா (ஞானாசாரியார் கல்லூரி)

**மேற்பிரிவு**

முதலாமிடம் – ந.காயத்ரி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – ச.சங்கவி (நெல்லியடி மத்திய கல்லூரி), மூன்றாமிடம் – இசுபாஷினி (உடுப்பிட்டி அ.மி கல்லூரி)

**கட்டுரை–ஆரம்பப்பிரிவு**

முதலாமிடம் – ர.சங்கீர்த்தனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – ர.திவ்யாஞ்சன் (உடுப்பிட்டி அ.மி கல்லூரி), மூன்றாமிடம் – ர.ஆரணி (ஞானாசாரியார் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – ஜெ.விதுஷிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – ந.கஜேந்திரா (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), மூன்றாமிடம் – ர.சங்கவி (நெல்லியடி மத்திய கல்லூரி)

**மத்திய பிரிவு**

முதலாமிடம் – ஆ.நிருத்திகா (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), இரண்டாமிடம் – சி.திலக்சனா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – பி.கேதாரணி (நெல்லியடி மத்திய கல்லூரி), வி.அருள்ராஜ் (கரணவாய் மகா வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

முதலாமிடம் – ச.வசந்தனா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – உ.நிருந்தா (உடுப்பிட்டி அ.மி கல்லூரி), மூன்றாமிடம் – வ.பிரியங்கா (ஞானாசாரியார் கல்லூரி)

**மாற்றுவலுவுடையோர் தினப் போட்டி முடிவுகள்**

**கவிதை–கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – ம.துவாரகன் (வதிரி திருஇருதயக் கல்லூரி), இரண்டாமிடம் – சு.தக்ஷா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – உ.நித்திலா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**மத்திய பிரிவு**

முதலாமிடம் – த.சோபியா (வதிரி திருஇருதயக் கல்லூரி), இரண்டாமிடம் – யோ.நிருஷிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – ஸ்ரீ.ஜஸ்மிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவு**

முதலாமிடம் – இ.கோபிகா (நெல்லியடி மத்திய கல்லூரி),இரண்டாமிடம் – சு.சிவப்பிரியா (விக்கினேஸ்வராக் கல்லூரி), மூன்றாமிடம் – சி.லக்ஷலா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**கட்டுரை– கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – ப.அனுசியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – சே.சதுர்ஸ்திகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – சி.மதிவதனா (வதிரி திருஇருதயக் கல்லூரி)

**மத்திய பிரிவு**

முதலாமிடம் – ம.லலிதாம்பிகை (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – கே.ரகுராஜ் (விக்கினேஷ்வராக் கல்லூரி), மூன்றாமிடம் – து.பவித்திரா (கம்பர்மலை வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

முதலாமிடம் – க.தயானி (விக்கினேஸ்வராக் கல்லூரி),இரண்டாமிடம் – ஜெ.அபிநயா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – ஸ்ரீ.தேனுஜா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**பேச்சு–கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் – ஆ.தர்சினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – து.தயாபரன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – ர.கலைவாணன் (இமையாணன் அ.த.க.பாடசாலை)

**மத்தியபிரிவு**

முதலாமிடம் – சி.இந்துஜா (கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்), இரண்டாமிடம் – ர.ஆர்த்திகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் – அ.அபிநயா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவு**

முதலாமிடம் – இ.செயகுலேந்திரன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் – சி.நிதர்சனா (விக்கினேஸ்வராக் கல்லூரி)

(ஐ–10)


## மரண அறிவித்தல்

### கணபதி முருகுப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியருமான கணபதி முருகுப்பிள்ளை நேற்று (12.10.2015) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி தம்பதியினரின் பாசமிகு மகனும், சிவசம்பு தம்பதியினரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சோதியின் அன்புச் சகோதரனும், பகீரதன், சியாமளா, யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்தரூபன் (இலங்கை வங்கி - சாவல்கட்டு), ரூபன், வசந்தலீலா, ஜெயமணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரியங்கா (யூனியன் வங்கி - சுன்னாகம்), துவாரகா (செலான் வங்கி - நெல்லியடி), சுபாங்கி, வித்தகி, சாருகா, நிஸ்மியா, ஜெயக்குமார், ரதீஸ்குமார், றஜீவ்குமார், நதீஸ்குமார் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், பத்மநாதன், இராசலிங்கம், இன்பநாயகி மற்றும் நேசமலர், தர்மலிங்கம், விமலநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

சூராவத்தை சுன்னாகம். (65542.11.16)

## மரண அறிவித்தல்

### திருமதி. செல்வராணி அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் சந்தி சாவகச்சேரி மற்றும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி .செல்வராணி அந்தோனிப்பிள்ளை 12.10.2015 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : திரு. திருமதி. திருக்குமார்
5 ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி,
உடுவில்.

(65945.12.16)

## மரண அறிவித்தல்

### சலமோன் அருளானந்தம் டேவிட்

(காந்திய தலைவர், காந்தியகம்,வவுனியா)



கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி விசேட தேவைக்குட்பட்டோர் வலையமைப்பு இல. 88, மகாத்மா வீதி ,ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சியை வதி விடமாகவும் கொண்ட எஸ்.ஏ. டேவிட் ஐயா அவர் கள் 11.10.2015 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் அருளானந்தம் - மரியப்பிள்ளை அருளானந்தம் தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை (செல்லத்துரை- மன்னார்) மற்றும் கிறிஸ்தோப்பர்(கனடா) காலஞ்சென்றவர்களான சிசிலியா யோசப், லூர்த்தம்மா மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.10.2015 புதன்கிழமை கிளிநொச்சி விசேட தேவைக்குட்பட்டோர் வலையமைப்பு எனும் நிறுவனத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றதன் பின்னர் கிளிநொச்சி புனித திரேசம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவிதத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: அருட் சகோதரி
ஹெலன் ஜோசவ்
தொடர்பு : 077 8317536
ஏ.சி. டானியல்

கிளிநொச்சி


# முல்லைத்தீவு மாவட்டத்துக்கான கணக்காய்வு அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான மாவட்ட உள்ளகக் கணக்காய்வு அலுவலகம் அண்மையில் மாங்குளம் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திருமதி எஸ்.சுரேஜினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் செல்வி ஆர்.எஸ்.துரைராஜாவும், முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந. சிறிஸ்கந்தராஜாவும் இணைந்து அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட மாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலராக எஸ்.சுரேந்திரன் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

(ஐ–288)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்தும் அச்சத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள்

முல்லைத்தீவு, ஒக்.13

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியேறிய பின்பும் நிம்மதியாக அச்சமின்றி வாழவும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியவில்லை என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். மீள்குடியேற்றப்பட்டு 6 வருடங்கள் கடந்தும் சில காணிகளில் மீள்குடியேற குடும்பங்கள் வராததால் அந்தக் காணிகள் செய்கையின்றிக் காணப்படுகின்றன. இதனால் அந் தக் காணிகள் யானை, குரங்கு, பன்றி போன்ற காட்டு மிருகங்களால் அழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, அச்சமின்றி வாழவும் முடியாதுள்ளது. சிலருடைய காணிகள் துப்புரவு செய்யப்பட்டுள்ள போதிலும் குடியமர எவரும் வரவில்லை. எனவே இந்தக் காணி உரிமையாளர்கள் உடன் குடியேறவும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அந்தக் காணிகளை வேறு நபர்களுக்கு வழங்கவேண்டும் எனவும் அயலில் குடியமர்ந்துள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-500)

## முல்லையில் கால்நடைகள் தொல்லை

முல்லைத்தீவு,ஒக்.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகள் கட்டாக் காலிகளாக அவிழ்த்து விடப்பட்டுள்ளதால் விளை பயிர்கள் நாசமாக்கப்படுவதுடன், கட்டாக்காலிகள் வீதிகளில் அலைந்து திரிவதால் வாகனங்களுக்குள் சிக்கி விபத்துக்களும் ஏற்படுகின்றன. குறிப்பாக இரவு நேரத்தில் கால்நடைகள் பட்டிகளில் அடைக்கப்படாததால், வயல்களில் பயிர்களை அழிவு செய்யும் அதே வேளை, பொது இடங்களில் குறிப்பாக ஆலய வீதிகளிலும் போக்குவரத்து வீதிகளிலும் படுத்துறங்குவதால் ஆலயச் சூழல் மாசடைவது மட்டுமல்லாது வீதிகளில் வாகனங்களைச் செலுத்த முடியாதுள்ள நிலையும் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்துமாறு அறிவித்தல்கள் விடப்பட்டும் பண்ணையாளர்களின் அசமந்தப் போக்கால் அழிவுகளும், ஆபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன. எனவே பொலிஸார் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு கால் நடைகளைக் கட்டுப்படுத்தி உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-500)


**வேலையாள்கள் தேவை**

நல்லூரில் அமைந்துள்ள பிரபலமான எமது விற்பனை நிலையத்திற்கு பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 357 3004

**CBR விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள CBR 250CC HONDA மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

தொடர்பு :077 558 9228 (64857)(12.15)

**மணமகள் தேவை**

பிறந்த திகதி - 01.07.1980, பிறப்பிடம் புலோலி, உயர்குடும்பத்தவர். பதவிபொறியியலாளர் (சிவில்), கிரகபாவம் - 63 இவருக்கு ஏற்ற மணமகள் தேவை. மருத்துவம், பொறியியல், கணினி - பல்கலைக்கழகப் பட்டதாரி விரும்பத்தக்கது. புறோக்கர் தொடர்புகள் ஏற்கப்படமாட்டாது.

(63542) (14.16) தொடர்பு: 077 502 5180

**வேலை வாய்ப்புக்கள்**

நீங்கள் (18 - 28) வயதிற்கு உட்பட்ட O/L & A/L பயின்றவராயின் எமது International கம்பனியில் நீங்களும் பணிபுரியலாம்.

- முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டத்தினருக்கு முன்னுரிமை.
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
077 798 1471, 077 230 2795 (65538)(14.16)

கொழும்புத்துறை

**சென் றொசாறியன் சன சமூக நிலைய**

**45ஆவது ஆண்டு விழா**

மேற்படி ஆண்டு விழாவையொட்டி எதிர்வரும் 17ஆம் திகதி யாழ. மாவட்ட மட்டத்திலான ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி நடைபெறவுள்ளது. பங்குபெற விரும்பும் வீரர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்

பதிவுகளுக்கு:-

தனு எலக்ரிக்கல்ஸ்
பிரதான வீதி, வஸ்தியன் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.0775434795(வினோத்)

எஸ்.யேசுதாஸ்
077 918 1390
நிலைய நிர்வாகத்தினர்.

(65548)(10.17)

**காணி வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளிக்கு அருகில் நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம் 6 அறைகள், நவீன வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 0229 762 (65921)(12.15)

**வீடு வளவு விற்பனைக்கு**

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரம் பிரதான வீதிக் கண்மையில் 10 நிமிடத்தில் யாழ் நகரை அடையக்கூடிய தூரத்தில் நன்னீர்க்கிணறு, பயன்தரு மரங்களுடன் கூடிய திருத்தம் செய்யப்பட்டதும் புதிதாக இணைக்கப்பட்டதும் மாபிள் பதிக்கப்பட்ட 5பரப்பில் அமைந்துள்ள அழகிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை 32 இலட்சம் ரூபா.

தொடர்பு: 021 205 4016 (65531)(14.16)




**Vacancies for TraineeAssociates –Jaffna branch**

KPMG is a global network of professional firmsproviding Audit,Tax and Advisory services. We operate in 156 countries and have 152, 000 people working in member firms around the world.
The independent member firms of the KPMG network are affiliated with KPMG International Cooperative ("KPMG International") a Swiss entity.

The local member firm in Sri Lanka was established in 1897 and presently is one of the largest professional service firms. The firmis also an ACCA approved platinum category employer for trainee and professional development.

The ideal candidate should be:
- Registered students of CA Sri Lanka, ACCA or CIMA;
- Students with excellent written and spoken English and aCredit for English Language and Mathematics at O/L's;
- Able to demonstrate leadership and networking skills;
- Below 25 years of age as at 1st November2015.

**Special consideration will be given for participation in sportsand extracurricular activities.**

Those who meet the specified criteria should send application letter with CV and e-mail to: mmayuran@kpmg.com on or before 18th October 2015.

APPROVED EMPLOYER ACCA PLATINUM

(C/18770) (10.17)

**திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்**

**Kids park Pre-School & Day Care campus**

**528, Palaly Road, Thirunelvelly.**



**புதிய அனுமதிகள் - 2016 -**

களிமண் பிசைவிலிருந்து கணினி கற்கை வரை கற்றல். முத்தோர், இளையோர் ஒருங்கிணைந்த கற்றல், உபகரணங்கள் செயற்பாடுகளுடன் கூடிய கற்றல்

2+ விளையாட்டு குழுமுறையியல் | 3+ மொண்டிசோறி, புறோபல் முறையியல்கள் | 4+ முன்பள்ளி நவீன சர்வதேச முறையியல்கள்

- சிறார்கள் விரும்பும் வேடிக்கை வினோத கற்றல்-கற்பித்தல் முறையியல்கள். பெற்றோர்களுக்கான வழிகாட்டல்கள்.
- தாய்மொழி, சகோதரமொழி, சர்வதேச மொழித் தேர்ச்சிகள் - விசேட தகவல்தொழிநுட்ப சாதனங்கள் மூலம்.
- சுதந்திரமான மிகப்பாதுகாப்பான சூழலில் பிரமாண்டமான விளையாட்டுப் பூங்கா அனுபவங்கள்.
- நவீன கற்றல் வட்ட கற்கைகள்- நாடகம், இசையும் அசைவும், முன்கணிதம், சுற்றாடல், சமயம், சித்திரம்.
- வேலைக்குச் செல்லும் பெற்றோர்களுக்கு உதவும் குழந்தைகள் காப்பகம் காலை 7.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை
- முன்பள்ளி ஆசிரிய அம்மாக்களின் அன்பான அரவணைப்பு - கற்று - உண்டு - உறவாடி - துயில் - அனைத்து வசதிகள்.
- மாலை நேரம் பரத நாட்டியம், கர்நாடக சங்கீத, சித்திர ஆக்கத்திறன் விசேட வகுப்புக்கள்.
- சனி, ஞாயிறு இங்கிலாந்து முறையிலமைந்த "ELOCUTION CLASS" நடைபெறுகின்றன.
- அனேக பெற்றோர் மாணவர்களின் வேண்டுகோள்களுக்கிணங்க ஆங்கில இலக்கியம் ( English Literature ) மாலை 6 மணியின் பின்னர் விசேட குழுமுறைக் கற்பித்தல் ஆங்கில விரிவுரையாளர்களால்.

**சேவை நோக்கு!**
**தகுதியானவர்களால் தரமான கல்வி!**

விஜயதசமி அன்று காலை
புதியவர்களை
அனுமதிப்பதற்கான நிகழ்வுகள் நடைபெறும்.

ஆலோசகர் :
பாலசுப்பிரமணியம் தனபாலன்
BA(cey). PGDM(Merit),
M.Phil in Pre School Education,
Dip in Guidance & Counseling (Distinction),
Vert.in Vocational Guidance (Singapore),
Cert.in Tourism (India).
நிபுணத்துவ ஆலோசகர்,
சமய விழுமியப்பிரிவு
கல்வியமைச்சு - பத்தரமுல்ல.

தொடர்புகளுக்கு:
திருமதி கர்ணி தனபாலன் (பணிப்பாளர்)
Dip. in Pre School Education (Distinction)
Cert. in Child Development,
Dip. in Guidance Counseling (1st Class)

(65550)(10.17)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்பட இருக்கும் கலாசார மத்திய நிலையத்தில் இசை, நடனம், சித்திரம், நாடகம், தவில், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

கலாசார மற்றும் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம் 2016 ஆம் ஆண்டு திறமை மேம்பாட்டு நிகழ்ச்சிக்காக இந்தக் கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது. அதற்காக சண்டிலிப்பாய் பிரதேசத்தில் வசிக்கும் குறித்த பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிவரங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி-6)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

**குடத்தனை அ.த.க.வித்தியாலயம்**
சே.வபிதாஸ்- 167, ம.கிருஷ்ணா -167, ஜெ.ஜென்சியா-157.

**மாரீசன்கூடல் றோ.கத.க பாடசாலை**
கா.மேரிசுஜந்தா-158, ச.கிருஜிகன்-154

**திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்**
செ.ரோசியா-174, வி.ரோஜிகா-172, அ.யூட்பிரிதர்சன்-168, மு.ஆராணி-158, வி.சுஜாத்- 156, பி.அஸ்வியா-153.

**பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்**
ஜெ.மதுசலா- 186, ச.மதுஷன்-182, வி.கீர்த்திகன்-177, சி.அபிலாஸ்-176, சு.தினேஷ்-172, ர.சந்தோஷ்-171, சௌ.தவரூபன்-169, ஜொ.அரிஸ் ஜெலன்-169, சா.ஜனார்த்தன்-168, வ.தாருண்யா-166.

**வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம்**
கு.தனோஜன் -180, ச.கனுஸ்ரிகா -173, சி.தமிழினி -170, த.பங்கயன் -164 ,ஜி.மஜனிகா -158, க.மதுமிதா-157 லோ.லபீசனா- 155.

**கரணவாய் தாமோதர வித்தியாலயம்**
ச.பிரணவி- 167, சி.டிலக்சிகா -16, ஜெ.வர்சா -163, ப.ஷாளினி -162,ர.மதுசன் -158, செ.கபீஷன் -154.

**மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்**
பி.டனிஷா 181,ஜெ.துவாரகா- 166, வ.சரோணியா- 157, ஜெ.துவாரகன்- 156.

**மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை**
கணேசமூர்த்தி டிலக்சிகா - 156.

**உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்**
நடேசபிள்ளை ஹரிகரன் - 170, விநாசித்தம்பி பிருந்துவி- 158.

**நுணாவில் அ.த.க.பாடசாலை**
சுபாஸ்கரன் தேனுசன் - 167, ஜெயக்குமார் லிபிசா-167,கிரிவேல் சாகித்தியன் - 165.

**சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை**
ஆ.விசாகன்-178,சி.சாருகா 178,சி.கிருசன்-176,சு.அருணன் - 174,சி.நிலக்சன் - 173, பா.சேதுராம்- 171, ரா.அபி ராம் - 170, அ.நர்த்தகி 169, கோ.திலக்சிதா - 169 க.டோஜிகா 167,பி.அபிராம் - 166, சி.மோகனவாணி 166, ர.டிலக்ஷன் - 165, தி.கர்சனா 164, ம.மதுரா 163, நி.விநோசா 162, சி.திதோஜனன்- 161, சு.ஆர்த்திகா 161, நி.சானுஜன் - 160, ந.கவினயா 160, பா.சதுர்ஷன் - 159, க.சிவசன் - 159, அ.அஜனிகா 159, ஞா.லபீசன் - 156, ஜெ.ஜெரோந்தனா 156, மு.ரக்சனா 154, மு.ஆகீஸ் - 153, ஜெ.சியாமளன் - 153.

**கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**
ச.சஹானா 183, கௌ. தேனுஹர்சன் - 179, தி.திருவேரகன் - 177, சி.டர்மிகா 177, ந.தரிணிகா 177, ர.ஜதுசிகா - 175, கு. பிரவீன் - 175, ஜெ.துஷ்யந்தன்- 174, கு.பவோஜன்-173, சு. பிரியன்ஷா 173, த.மாதங்கி- 172, பு.விதுஷனா - 172, கா. வேந்தினி 172, ர.மிதுன் - 170, க.கிசோலினி - 170, க.அஸ்வினி- 170, க. வாகீசன் - 170, ந.நிருத்திகன் - 169,அ.அஷ்வினி- 168,ச.யதுசன் - 166, அ.ஜெயதாரணி - 166,கி. பிரணவி - 164, பு.பிரவீனா -164,கு.டினோஜன்- 163,சி.மானஷா - 162, ர.கஜந்தன்- 162, ஜெ.துஸ்யந் - 162, சு.யதுஷன் - 162, சு.நிதுஜா - 161, வ.வானுசன் - 161,இ.தரணிகா - 160, க. மாதங்கன் - 160, பு.கிருஷாந் - 160, செ.தசலோஜிதன் - 160, ப.ஜித்தேஸ் - 158, ர.சங்கீத சர்மா - 158, அ.லக்சனா- 157, க.டர்மினி -157, த.சரண்யா - 157, ச. அஸ்வின் சர்மா 156, பி.தனாமிகா -156,க.டிலக்சனா -156,க.டதுஷிகா -156,ரா.பிரவீன்-156, ந.கேசவன் - 156, ல.விஷோபன் - 155, ச.சந் தோஷ் - 155, ர.ரஜிந்- 155, தெ.கவிதரன்- 155, ம.ஷாயித் தியா - 155 , வ. டஷ்வீனா - 154, கோ.தீபிகன் - 154, ஞா.அபிநயா-154,அ.புவிதன் -154,மை.அனுஷன்-153, ஜெ.ஆர்த்தி - 153, வி.லக்ஷிகன் - 153, பு.கனிஷா - 153.

**கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை**
கிருஸ்ணகுமார். பிருந்தனன் 155, யோகநாதன் பாலகணன் 165, ராஜ்குமார் திபிராஜ் 175, மெரீசன் மக்சிமஸ் 168, றேமன்ஸ் ரியூட்ஸ் நேசன் 153.

**கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை**
மு.சுஜானி 153.

**மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை**
ர.திலக்ஸன் - 188, பி.கீர்த்திகன் - 183, ச.கிருஷன் - 180, சி.டிக்ஸனா -175, க.கீர்த்திகா - 175 சு.யதுர்சிகா 174, கு.சர்மிகா - 173, சி.பரணிதன் - 170, ந.கஜீவன் - 167, சி.சுவிக்ஸன் - 166, கு.நிலோஜினி - 165, பி.சயந்திகா - 164, செ.திருசன் - 164 ச.பிரியந்தன் -163, செ.அனோசிகன் -162, உ.தஜிந்தினி - 161, கு.திலக்ஸியா - 161, ப.ஜனுசன் - 156, ந.பிரியந்தி - 156, ம.வாணிதன், - 155, ஷம.கவிதரன் -155, கு.சுவேதன் - 153, ர.மாதினி, - 153.

**நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி**
ப.விஷ்ணுஜன் - 168 , ஜெ.பிஷாடனசர்மா - 164, மு.பிருந்திகா -164.

**மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம்**
தேவவினோதன் கஜீவனா - 158. (ஐ-9,10,17,422,131)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
இலட்சுமி சின்னத்தம்பி



தோற்றம்
15.02.1941

மறைவு
13.09.2015

கடந்த 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்திய அமரர் இலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர்அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அன்னையைப்போல் பராமரித்த யாழ் போதனாவைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் Dr.சு.ரவிராஜ் அவர்களுக்கும், வைத்தியநிபுணர் Dr.அ.அஜினி அவர்களுக்கும், அவசரசிகிச்சைப்பிரிவு வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் ஊழியர்களுக்கும், விடுதி இல 23A வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.10.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்திற்கு அருகிலுள்ள பொன்செல்வமகால் திருமணமண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராசவீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
குடும்பத்தினர்.
(65211) (14,15)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



நிஜமானது
07
.
11
.
1994

நிழலானது
13
.
10
.
2012

**விஜயச்சந்திரன் டினேஸ்**
(சென்ஜோன்ஸ் கல்லூரி 2013 வர்த்தகப்பிரிவு மாணவன்)

*எம் செல்ல மகன் டினே*
எம்மை விட்டு பிரிந்து மூன்று ஆண்டுகள் வெகுவிரைவில் சென்றுவிட்டதையா
மூன்று ஆண்டுகளல்ல முப்பது ஆண்டுகள் சென்றாலும்
உமை மறக்க யாரும் இல்லை இவ்வுலகில்
சிறுவயதினிலே சிரத்தையுடன் நீ கற்று
சிறந்த அறிவாற்றல் கொண்டவனாய் வாழ்ந்தாயடா
கறையற்ற கபடமற்ற உன் வாழ்வை போற்றிடவே
பல மனிதர் வாழ்ந்திடுவர் இப் பாரினிலே
எண்ணிலடங்கும் எம் இதயத்துடிப்பினிலே ஏனோ ?
எண்ணிலடங்காத உன் ஞாபகங்கள் மகனே
உனை சுமந்த வலியை விட உன் பிரிவால் சுமக்கும் வலியை அறிவாயோடா?
ஒரே ஒரு மகனாய் நீ ஜனனம் ஆகி சுஒரான்பது வருடங்கள் இளைஞன் ஆகி
எத்தனை வடிவத்தில் உனை பார்க்க நினைத்தும் எதுவுமற்ற வெற்றுக்கூடாய்
ஏமாற்றத்துடன் நிற்கின்றோமையா?
டினே நீர் கடந்து போன இடமெல்லாம் ஆண்டவருடைய வார்த்தையை
எடுத்துரைத்து சத்தியப்படி வாழ வேண்டுமென்று எத்தனை பேருக்கு வழிகாட்டி
நீர் ஆண்டவன் சமூகம் கடந்து சென்றுவிட்டாயையா?
இம்மண்ணில் உம்மை பிரிந்தாலும் விண்ணில் உம்மைக் காண்போம்
என்ற நம்பிக்கையில் மிகுதி நாள்களைக் கழிப்போம்.
நீங்காத நினைவாய் என்றும் எம் உள்ளத்தில் உள்ளாய் மகனே.

**கிறிஸ்து எனக்கு ஜீவன்**
**சாவு எனக்கு ஆதாயம்** (பிலிப்பியர் 1- 21)

38/46, சிவன்புது வீதி,
மனல்தறை லேன், கந்தர் மடம்.
என்றும் உன் நினைவுகளுடன்
பெற்றோர்.
(14,16,17)

# நவராத்திரி விழா

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து தினமும் மாலை 4 மணிக்கு விசேட அபிசேகம் இடம் பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு மானம்பூ நிகழ்வு இடம்பெறும். (ஐ-9)

# கல்விக் கண்காட்சி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி யாழ்ப்பாணம் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் ஆதரவுடன் நடத்தும் முப்பரிமாண நூலகம் சான்றாதாரக் கல்விக் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜே.எ.ஜேசுதாசன் தலைமையில் நடைபெறும் இந்தக்கல்விக்கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் அலகு பீடாதிபதி பேராசிரியர் வி.மிகுந்தன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வியியற்கல்லூரி விரிவுரையாளரும் வாழ்வக நிறுவனத் தலைவருமான ஆ.ரவீந்திரனும், கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் எஸ். சந்திரராசாவும் கலந்துகொள்வர். கண்காட்சி ஒழுங்கமைப்பும் அறிமுகமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பிரதம நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-86)

## பதினெட்டாவது ஆண்டு நினைவலைகள்

அமரர் **நமசிவாயம் நடராசா**
திதி:- பிரதமை



அன்னைமடியில்
17.01.1923

அம்மன் அடியில்
02.10.1997

அல்லும் பகலும் பிள்ளைகளின்
உயர்ச்சிக்காக
அயராது உழைத்த ஐயாவே
நவராத்திரி ஆரம்பம்
உங்கள் நினைவுதினம்
அம்மன் பாதமலரில் உங்கள்
ஆத்மா சாந்திபெற
அம்பாளையே
வேண்டித் துதிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி !சாந்தி!

அன்பு மனைவி,
பிள்ளைகள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள் ,
பூட்டப்பிள்ளைகள்

"நிர்மலகிரி"
ஐயனார் கோயிலடி
கல்வயல் சாவகச்சேரி

## இருபத்திநான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **ஞானம்மா இம்மானுவேல்**

தோற்றம்
17★03★1935

மறைவு
13★10★1991



அன்பும் பாசமும் நிறைந்து விளங்கிய
எங்கள் அன்பான அம்மாவே உங்களை
நாம் என்றென்றும் மறவோம்.

க.நவரத்தினம்-மைத்துனர்
56/14, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
என்றும் மறவாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
(65547)(10,17)

# இரு வேறு விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஒக்.13




வீதியில் தமது நண்பரது மோட்டார் சைக்கிளில் சாகசம் காட்டிய 17 வயது சிறுவன் வீதியோர தென்னை மரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது.

பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் குறித்த சிறுவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளில் குரங்கு பாய்ந்ததில் அதில் பயணித்த பெண் அலுவலர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் உசன் விடத்தற்பளை வீதியில் இடம்பெற்றது.

காயமடைந்த அலுவலர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீல நிறத்தில் ஒளிரும் புளூட்டோ

நாம் வாழும் பூமியைப் போன்றே புளூட்டோவிலும் நீல வானம் மற்றும் உறைந்த பனிக்கட்டி இருப்பது போன்ற புகைப்படம் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் விண்வெளி ஆய்வுக் கழகமான நாசா, விண்ணில் புளூட்டோ போன்ற கிரகங்களை ஆய்வு செய்ய 'நியூ ஹாரிசன்' என்ற விண்கலத்தை கடந்த 2006 ஆம் ஆண்டு அனுப்பியது. இந்த நிலையில் புளூட்டோவில் நீலவானம் மற்றும் உறைந்த பனிக்கட்டி இருப்பது போன்ற புகைப்படத்தை விண்க்லம் தற்போது எடுத்து அனுப்பியுள்ளது. இதுகுறித்து இந்தத் திட்டத்தில் பங்கேற்ற விஞ்ஞானிகள் குழு கூறுகையில், சூரிய குடும்பத்தில் நெப்ட்யூன் கிரகத்துக்கு அப்பால், ஏராளமான வால் நட்சத்திரங்கள், எரிகற்கள், பனிக்கட்டித் துகள்கள் உள்ளன.

அந்தப்பகுதியில் உள்ள புளூட்டோ கிரகத்தில் வானம் நீல நிறத்தில் தென்படுவதை நியூஹாரிசன் விண்கலம் முதன் முதலாக படம் எடுத்து அனுப்பியுள்ளது. பொதுவாக அந்தப் பகுதியில் பனிக்கட்டி துகள்கள், சாம்பல் அல்லது சிவப்பு நிறத்தில் தான் காணப்படும். ஆனால் அவை நீல நிறத்தில் ஒளிர்வது தான் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும் புளூட்டோவில் எடுக்கப்பட்ட படங்களில், நீர் உறைந்த நிலையில் காணப்படும் பகுதிகள் செந்நிறத்தில் பிரகாசிக்கின்றன. இதுவும் ஆச்சரியமான விடயம் தான் எனத் தெரிவித்துள்ளனர்.

# தொழில்நுட்ப உலகில் மற்றுமொரு புரட்சி

பொதுவாக கமராக்களில் படம் பிடிப்பதற்காக ஒரு வில்லை மட்டுமே பயன்படுத்தப்படும். ஆனால் வரலாற்றில் முதன் முறையாக 16 வில்லைகளைக் கொண்ட கமரா ஒன்று அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ளது. குறைந்த வெளிச்சம் உள்ள போதிலும் துல்லியமாக புகைப்படம் எடுக்கக்கூடிய இந்தக் கமரா, 52 மெகா பிக்சல்களை உடைய புகைப்படங்களை உருவாக்க வல்லது. இதன் விலை, ஆயிரத்து 699 அமெரிக்க டொலர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனோன் நிறுவனம் கடந்த மாதம் 120 மெகாபிக்சல்களை உடைய கமராவை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவிப்பு வெளியிட்டிருந்த நிலையில் இந்தப் கமரா தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் இவற்றுக்கிடையில் விற்பனையில் பலத்த போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## புத்தம் புதிய லப்டொப்



உலகத்தரம்வாய்ந்த கணினிச் சாதனங்களை வடிவமைத்து அறிமுகம் செய்யும் டெல் நிறுவனம் டெல் எக்பி எஸ் 15 முடிவிலி எட்ஜ எனும் புதிய மடிக்கணினியை அறிமுகம் செய்யவுள்ளது. இன்டெல் நிறுவனத்தின் ஆறாவது தலைமுறை செயலியான ஒன் கோர் ஸ்ரைல்லாக் இனைக் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. 15.6 அங்குல வளைந்த திரையைக் கொண்டுள்ளதுடன், இதன் தடிப்பமானது 0.67 அங்குலமாகக் காணப்படுகின்றது. இவை தவிர பிரதான நினைவகமாக 8ஜிபி ரம், சேமிப்பு நினைவகமாக 500ஜிபி வன்வட்டு என்பவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது. இதன் விலை ஆயிரம் டொலர்கள் ஆகக் காணப்படுகின்றது.

# முகத்துவாரம் கடற்பகுதியில் மின்குமிழ் ஒளிரவில்லை

## இரவில் கடற்றொழிலாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ். குருநகர் முகத்துவாரம் கடற்பகுதியில் உள்ள வெளிச்ச வீட்டின் உச்சியில் உள்ள மின்குமிழ் பழுதடைந்துள்ளதால் இரவில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த வெளிச்சவீடு அண்மையில் துறைமுகங்கள் அதிகார சபையால் புனரமைக்கப்பட்டது. வெளிச்சவீடு புனரமைக்கப்பட்டு அதற்கான ஒளி வசதியும் ஏற்படுத்தப்பட்டது. தற்போது வெளிச்சவீட்டில் ஒளி வசதி இயங்காது பழுதடைந்துள்ளது.

இந்த ஒளி வசதியை மீளவும் ஏற்படுத்தித் தருமாறு இரவில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது மாரி காலம் ஆரம்பித்துள்ளதால் கடற்பகுதி முழுமையாக இரவில் இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. இதன் காரணத்தால் கடலின் திசைகளை அறிவதற்கான மற்றும் தொழிலில் ஈடுபட வசதியான இந்த வெளிச்ச வீட்டின் ஒளி வசதியை மீள ஏற்படுத்தித் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. கடந்தகால போரினால் முழுமையாக சேதமடைந்த இந்த வெளிச்ச வீடு மீனவர்களின் கோரிக்கையை அடுத்தே மீளப்புனரமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

# முள்ளிக்குளம்- இரணை இலுப்பைக்குளம் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிப்பு




மன்னார்,ஒக்.13

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் சுமார் 2.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இரணை இலுப்பைக்குளம் கிராமத்துக்குச் செல்லும் 10 கிலோமீற்றர் பிரதான வீதியை புனரமைக்கும் பணிகள் கடந்த சனிக்கிழமை வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரனால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. முள்ளிக்குளம் கிராமத்தில் உள்ள புனித தெரேசா ஆலயத் திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. குறித்த திருவிழாவில் கலந்து கொண்ட நிலையில் அமைச்சர் புனரமைப்புப்பணியை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வுக்கு தட்சனா மருதமடு பங்குத்தந்தை, மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி, வீதி அபிவிருத்தித் திணைக்கள மன்னார், வவுனியா மாவட்ட பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன், முள்ளிக்குளம் கிராம உத்தியோகத்தர் மற்றும் அங்குள்ள கிராம மட்ட அமைப்பினர் என பலர் கலந்துகொண்டு குறித்த வீதி புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-56)

## கோடா வைத்திருந்த பெண்ணுக்கு அபராதம் விதிப்பு

மாங்குளம்,ஒக்.13

கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டுள்ளது. துன்னாலை சக்குச் சம்பா பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய குறித்த பெண் கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். பருத்தித்துறை நீதிமன்றில் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப் பட்ட வழக்கில் நீதிவான் மா.கணேசராசாவினால் 10 ஆயிரம் ரூபா அபராதமும் அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப் பட்டது. (ஐ-422)

## வெளவால் எச்சங்களால் மாசடையும் பாடசாலையின் குடிதண்ணீர்க் கிணறு

முல்லைத்தீவு,ஒக்.13

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கிணறு சிறார்களின் பாதுகாப்புக் கருதி மேற்பக்கம் மூடப்பட்டுள்ளதால் அங்கு வெளவால்கள் குடிகொண்டு அவற்றின் எச்சங்களால் குடிதண்ணீர் மாசடைவதாகப் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையின் கிணறு திறந்த நிலையில் இருந்ததால் மாணவர்கள் அதில் தண்ணீர் எடுக்கும் போது ஆபத்துக்கள் ஏற்படலாம் எனக்கருதி மேற்பக்கம் சிமெந்து போட்டு மூடப்பட்டுள்ளது. நீர் அள்ளும் [illegible] டும் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் அதன் ஊடாக வெளவால்கள் உட் செல்வதால் நீர் மாசடைகின்றது.

இதனையே மாணவர்கள் குடிதண்ணீராகப் பயன்படுத்தும்போது நோய்கள் ஏற்படலாம் என அஞ்சுகிறோம். இதனைக் கல்விச் சமூகம் உடன் கவனமெடுத்து அதனை உடைத்து மேலே வலை போன்ற கம்பிகளைப் போட்டுப் பாதுகாப்பு ஏற்படுத்தலாம் என பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாடசாலை நிர்வாகம் கவனத்தில் எடுத்து கல்வி அமைச்சின் ஊடாக குறித்த பாடசாலைக்கு சுத்தமான குடிதண்ணீர்க் கிணறை [illegible] நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பெற்றோர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-500)

## நவராத்திரி உற்சவம் இன்று

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரம் கண்ணகியம்மன் ஆலயத்தில் நவராத்திரி உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக் கிழமை வரை பூசை வழிபாடுகள் இடம்பெறும். இறுதி நாளன்று கண்ணகியம்மன் சங்கரத்தை இலுப்பையடி ஞானவைரவர் ஆலயத்துக்கு எழுந்தருளி வீதியுலா வந்து மானம்பூ வன்னி வாழை வெட்டு வைபவமும் இடம்பெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 650 பலஸ்தீனியர்கள் இம்மாதம் கைது

காஸா, ஒக்.13

இஸ்ரேலியப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஜெருசலேமின் மேற்குக்கரை மற்றும் கிழக்கு அல்குவாட் பகுதியில் இந்த மாதத்தில் மட்டும் 650 பலஸ்தீனியர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஜெருசலேமினின் மேற்குக்கரை மற்றும் கிழக்கு அல் குவாட் பகுதி களில் இஸ்ரேலிய படையினருக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே தொடர்ச்சியான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில் இஸ்ரேலியப் படையினரால் மேற்கொள்ளப் பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது 650 பலஸ்தீனியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேலிய பாதுகாப்புத் தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தினரின் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக் கப் பட்டுள்ளது. (ற)

# இஸ்ரேலின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்படும்

## அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாஹு தெரிவிப்பு



ஜெருசலேம், ஒக்.13

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் துக்கும் இடையே மோதல்கள் அதிகரித்து வரும் நிலையில், இஸ்ரேலில் தமது பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்று அந்நாட்டு பிரதமர் பென்ஜமின் நெதன்யாஹு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:-

இஸ்ரேல், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் இடம்பெற்று வரும் பல பகுதிகளுக்கு நடுவில் உள்ளது. அதனால் எமக்குப் பெரும் சவால்கள் இருக்கின்றன.

தற்பொழுது ஜெருசலேமிலும் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தற்பொழுது நாம் ஜெருசலேம் எல்லையில் எமது பெருந்தொகையான படையினரை நிறுத்தி வைத்துள்ளோம். தேவைப்பட்டால் எதிர்வரும் காலங்களில் அத்தொகையை இன்னும் அதிகரிப்போம் . - என்று அவர் தெரிவித்தார்.

ஜெருசலேம் பகுதியில் மேற்கொள்ளப்படும் பலஸ்தீனியர்களின் நடவடிக்கைகள் எமக்கு திருப்தியின்மையை ஏற்படுத்துகின்றன என்றும் அவர் தெரிவித்திருந்தார். (ற)

# பல தசாப்தங்கள… கியூபாவில் அமெ…

நியூயோர்க், ஒக்.13

அமெரிக்காவுக்கும் - கியூபாவுக்கும் இடையே கடந்த 54 ஆண்டுகளாக காணப்பட்ட பனிப்போர் இப்போது சமரசத் துக்கு வந்துள்ளது.

இரு நாடுகளிலும் குறித்த நாடுகளின் தூதரகங்கள் திறக்கப்பட் டுள்ள நிலையில் அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையிலான நல்லுறவை வலுப்படுத் தும் விதத்திலான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக பல தசாப் தங்களுக்குப் பின்னர், அமெரிக்காவின் பயணிகள் விமானம்



ஆப்கனின் காபூல்…
தரையிறங்கும்போ…
தெரிவிக்கப்பட்டது.

# நீண்ட தூர இலக்கைத் தாக்கும் ஏவுகணைச் சோதனை வெற்றி

## ஈரான் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



தெஹ்ரான், ஒக்.13

நீண்ட தூரத்தில் உள்ள இலக்குகளைத் துல்லியமான முறையில் தாக்கக் கூடிய புதிய ஏவுகணை ஒன்றை ஈரான் வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

எமது நாட்டின் பாதுகாப்பை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் இந்த ஏவுகணையைச் சோதனை செய்துள்ளோம். சோதனை வெற்றிகரமான முறையில் நடந்தமை மகிழ்ச்சியைத் தருகின்றது - என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

இவ்வாறு ஏவுகணைச் சோதனை நடத்துவதற்கு நாடுகள் எவற்றினது அனுமதியையும் நாம் பெற வேண்டியதில்லை. இஸ்லாமியக் குடியரசில் எமது பலம் மேலோங்கியுள்ளது என்பதை மீண்டும் நிரூபித்துள்ளோம். இது எமது நாட்டின் பாதுகாப்புச் சார்ந்த பிரச்சினையாகும். - என்றார்.

1992 ஆம் ஆண்டு முதல் ஈரான் உள்நாட்டு ராணுவ உற்பத்தித் தொழிலில் குறிப்பிடத்தக்க நிலையை அடைந்துள்ளது. ஏவுகணைகள், டாங்கிகள் மற்றும் ஒளி நீர்மூழ்கிக் கப்பல்கள் உற்பத்தி போன்றவற்றில் போதுமான உற்பத்திகளை மேற் கொள்ளுகின்றது.

இது வரை இஸ்லாமிய குடியரசின் 2 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கும் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டிருந்தது. ஈரானினதும், அமெரிக்காவினதும் ஏவுகணைகளை விடவும் இஸ்லாமியக் குடியரசின் ஏவுகணையே அதி கூடிய தூர ஏவுகணையாக கணிக்கப் பட்டுள்ளது. (ற-ரி4)

# மருத்துவமனை தாக்குதலில் உயிரிழந்தோருக்கு இழப்பீடு

## அமெரிக்கா அறிவிப்பு

காபூல், ஒக்.13

ஆப்கனில் குண்டுஸ் நகரில் எம்.எஸ்.எஃப் மருத்துமனை மீது நடத்தப்பட்ட அமெரிக்காவின் விமானத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது.

அமெரிக்கா அழைக்கின்ற அனுதாபக் கொடுப்பனவு எனக் கூறப்படும் இந்தக் கொடுப்பனவு இந்தத் தாக்குதலின் போது, காயப்பட்டவர்களுக்கும் வழங்கப்படும் எனவும் மருத்துவமனையை புனரமைப்பதற்கும் நிதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மூன்றாம் திகதி நடத்தப்பட்ட இந்த விமானத் தாக்குதலில் 10 நோயாளர்களும், மருத்துவத் தொண்டர் அமைப்பின் பணியாளர்கள் 12 பேரும் உயிரிழந்தனர்.

இருப்பினும், 30க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கும் நோயாளிகளுக்கும் என்ன ஆனது என்று தெரியவில்லை என எம்.எஸ். எஃப் சர்வதேச மருத்துவ தொண்டு நிறுவனம் கூறியுள்ளது.

இந்த விமானத் தாக்குதல் தவறுதலாக நடத்தப்பட்டது என அமெரிக்கத் தரப்பு கூறியிருந்தது. (ற)

# ஐ.எஸ். தலைவர் அபுபக்கர் ஈரானின் தாக்குதலில் சாவு!

கொழும்பு, ஒக்.13

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் தலைவர் அபுபக்கர் கொல்லப் பட்டுள்ளார் என்று ஈராக்கிய பாதுகாப்பு துறை அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்குலக நாடுகளுக்கு சவால் விடும் வகையிலான தீவிரவாத நடவடிக்கைகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தனர். இதனைத் தொடர்ந்து ஐ.எஸ் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை பல உலக நாடுகள் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்றன.



இந்த நிலையில் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் தலைவர் அபுபக்கர் பயணித்த வாகனத் தொடரணியின் மீது ஈராக் வான்படையினரால் மேற்கொள்ளப்பட்ட வான்தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன்போது குறித்த வாகனத் தொடரணியில் பயணித்த மேலும் சில முக்கிய உறுப்பினர்கள் உயிரிழந்திருக்கலாம் என ஈராக் கிய பாதுகாப்புப் படையினரால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

எனினும், குறித்த செய்தியை ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு இதுவரையில் உறுதி செய்யவில்லை எனவும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...களின் பின்னர் அமெ. விமானம்

ஒன்று கடந்த சனிக்கிழமை கியூபாவில் தரையிறங்கியது. இந்த விமானம் கியூபாவின் கிழக்கு ஹவானாவில் உள்ள வரதேரோ விமானத் தளத்தில் தரையிறங்கியது என்றும் அதில் 28 சுற்றுலாப் பயணிகள் பயணித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கியூபாவின் விமானப் போக்குவரத்து அமைப்பின் தலைவர் எர்னஸ்ரோ அட்லம் இதுகுறித்துத் தெரிவிக்கையில்,
கியூபா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான விமானப் போக்குவரத்துத் தொடர்பான கூட்டு ஒப்பந்தங்கள் சில ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ளன - எனத் தெரிவித்துள்ளார். (ற)




மத்திய ஆபிரிக்காவில் மியம்போ வுட்லாண்ட் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 200 வருடங்கள் பழைமை வாய்ந்த கறையான் புற்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. பொதுவாகவே கறையான்கள் புற்றுக்களை உருவாக்கும் ஆற்றல் கொண்டவை. 15 மீற்றர் அகலமும் , 10 மீற்றர் உயரம் வரையும் புற்றுகளை அமைக் கக் கூடியவை.இது போன்ற பழைமையான சில கறையான் புற்றுக்கள் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. தற்போது அவை பாதுகாக்கப்படும் படிமங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் கால அளவு குறித்த ஆய்வுகள் கார்பன் 14 டேடிங் எனும் புதிய தொழில்நுட்ப உதவியுடன் ஆய்வாளர்களினால் கணிக்கப்பட்டது. (ற-ரி4)



... காபூல் நகரில் இடம்பெற்ற ஹெலி விபத்தில் நேட்டோ பணியாளர்கள் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். இங்கிலாந்தின் பூமா ரக ஹெலியொன்று ...கும்போதே அது விபத்துக்குள்ளானது. இது ஒரு தற்செயலான விபத்து. இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று ...பட்டது. உயிரிழந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ற-ரி4)

## சுமாத்திராவில் ஹெலி மாயம்



சமோசர், ஒக்.13

ஐந்து பேருடன் சென்ற இந்தோனேசிய ஹெலிகொப்டர் ஒன்று சுமத்திரா தீவுக்கருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காணாமற்போயுள்ளது.
உள்ளூர் நேரப்படி பி.ப. 12.20 மணியளவில் சுமாத்திராவின் சமோசர் தீவிலிருந்து மெடான் சிட்டி குவாலாநாமு விமான நிலையத்துக்குச்சென்றுகொண்டிருந்த அந்த ஹெலிகொப்டர் பறக்க ஆரம்பித்து ஒரு மணி நேரத்துக் குப் பின்னர் திடீரென விமா னகட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.
குறித்த ஹெலிகொப்டரில் ஒரு விமானி, ஒரு பொறியியலாளர் மற்றும் 3 பயணிகளும் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குவாலாநாமு விமான நிலையத்தில் தரையிறங்க 10 நிமிடங்களே இருந்த நிலையில் இந்தக் ஹெலிகொப்டர் மாயமாகியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன
மாயமாகிய ஹெலிகொப்டர் ஒற்றை இயந்திரம் கொண்ட யூரோகாப்டர் ஈ.சி.-130 என்ற அடையாளம் கொண்டதெனத் தெரிவிக்கப்படுகின்றது.
அந்த ஹெலிகொப்டர் ... டி. பெனர்பன்கன் அங்காசா எனும் நிறுவனத்துக்கு சொந்தமானது எனவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.
தற்போது குறித்த ஹெலிகொப்ரரை தேடும் முயற்சியில் மீட்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சுமாத்திராவில் தற்போது கடும் காட்டுத் தீயால் பெரும் புகை மண்டலம் சூழ்ந்துள்ளது. தெளிவற்ற கால நிலை காரணமாக ஹெலி விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படு... (ற)



அமெரிக்காவின் கொலம்பியா மாகாணத்தில் அல்டா குவஜிரா பிரதேசம் கடும் வறட்சியைச் சந்தித்துள்ளது. 2 லட்சம் வெயூ இன மக்கள் வசிக்கும் இந்தப் பிரதேசத்தில், நீருக்காக பலதூரம் பயணம் செய்து நீரைப் பெற[illegible] நிலை ஏற்பட்டுள்ளது. மழை வீழ்ச்சி குறைவான இந்தப் பிரதேசத்[illegible] சேமித்து வைத்து உபயோகிக்கும் வாழ்க்கை முறையை கொண்ட இவர்கள் மழையின்மையால் மிகக்கொடிய வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.(ற-ரி4)

## உடலை தீயிட்டு எரிக்கும்போது எனது சேமிப்பையும் எரியுங்கள்

### மகன்களால் கைவிடப்பட்ட சீன முதியவரின் இறுதி ஆசை

பீஜிங், ஒக்.13

தான் இறந்த பின்னர் தனது சேமிப்புப் பணத்தையும் தன்னுடன் சேர்த்து எரிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார் சீன முதியவர் ஒருவர். அதையடுத்து அவர் இறந்ததும் அவரது உடலுடன் சேர்த்து அவரது சேமிப்புப் பணமான ரூபா 21 லட்சமும் தீயிட்டு எரிக்கப்பட்டது.
சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஜியாங்க் மாகாணத்தைச் சேர்ந்தவர் தாவோ. விவசாயியான அவர் 10 ஆண்டுகளுக்கு முன்னர் தனது விவசாய நிலங்களை தனது இரு மகன்களுக்கும் பிரித்துக் கொடுத்துள்ளார். அதன் [illegible] இருந்து வெளியேறி [illegible] தொடங்கினார்.
அவரது முதுமைப் பருவத்தில் அவரைப் பராமரிக்க இரு மகன்களும் மறுத்துவிட்டனர். அதனால் வீதியில் குப்பை பொறுக்கித் தனது வாழ்க்கையை ஓட்டிவந்தார் தாவோ.
மகன்களின் செயலால் மனமுடைந்துபோன தாவோ. அதனால் தான் சேமித்து வைத்துள்ள பணத்தை மகன்களுக்குக் கொடுக்கக் கூடாது என்றும் - தான் இறந்த பின்னர் பணத்தைத் தனது உடலுடன் சேர்த்து எரித்துவிட வேண்டும் என்றும் தாபோ தனது உயிலில் குறிப்பிட்டிருந்தார்.
அதையடுத்து அவர் இறந்த பின்னர் அவரது கடைசி ஆசைப்படி அவரது சேமிப்பான ரூபா 21 லட்சம் அவரது உடலுடன் சேர்த்து எரிக்கப்பட்டது.
தாவோ இறந்து ஒருமாதம் கடந்துள்ள நிலையில் இடுகாட்டில் பணிபுரியும் பணியாளர் ஒருவர் மூலம் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமபிரான் சீதையையும் அரசாட்சியையும் பெற்று வாழ வழிகாட்டிய நவராத்திரி விரதம்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

லலிதாசகஷ்ரநாமத்தில்முதல்நாமமே ஸ்ரீ மாத் ரேநம என்பதாகும். அன்னையை வணங்குவது, போற்றுவது, ஆராதிப்பது ஜீவனுடைய கடமையாகும். தாய்மையை உணராத ஜீவன் எங்குமில்லை. மாத் ருதேவா பவ, தாயைத் தெய்வமாக எண்ண வேண்டும்.

மானுடர்கள் இந்த பிறவிக்குக் கிடைத்த தாயைத் தெய்வமாக வணங்க வேண்டும் என்றால், எல்லா ஜென்மத்துக்கும் எல்லா உலகங்களுக்கும் தாயாகிய பராசக்தியை தாயாக வணங்க வேண்டியது நமது கடமையல்லவா? அம்பிகையைத் தாயாக எண்ணி வணங்குவதால் இறைவனை நெருக்கத்துடனும், உரிமையுடனும் கொண்டாட இயலுகிறது.

மானிடப் பிறவியிலுள்ள தாய், கருணையோடும், அன்போடும், பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் இருப்பவளாக இருக்கையில், அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியான அன்னை பராசக்தி எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் கற்பனை செய்து கொள்ள வேண்டும்.

தாயைக்காண உருகும் பிள்ளையைப்போல், அன்னை பராச்தியின் அனுக்கிரகத்தை நாம் எப்பொழுது பெறுவோம் என்று நாம் மனங் கனிந்து உருகிப் பிரார்த்திக்க வேண் டும்.

உலகமானது சக்தி, செல்வம், அறிவு என்று மூன்றுவித சக்திகளின் அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்த மூன்றையும் தரும் தெய்வங்களாக (மலைமகள், அலைமகள், கலைமகள்) அதாவது துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதியாக நாம் வழிபடுகிறோம்.

அன்னை பராசக்தியை அணிமா, மஹிமா முதலிய எட்டு வகை அம்சமாகப் பிரித்து அவைகளை அஷ்டமா சக்திகள் என்று குறிப்பிடுவார்கள். அதைப்போல், திருமகளுக்கு எட்டுவகை சக்திகள் உண்டு. அவைகள் தனலக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி,



விஜய லக்ஷ்மி, ஐஸ்வரிய லக்ஷ்மி, ஆதி லக்ஷ்மி என்று பெயர் பெறுகின்றன. ஒவ்வொரு லக்ஷ்மியும் ஒவ்வொரு சக்தியை நமக்கு அளிக்கிறாள்.

தேவி உபாசகர்கள் பராசக்தியை ஆறு அம்சங்களாக பாகுபாடு செய்து வழிபடுகிறார்கள். பிரபஞ்ச இயக்கத்துக்கு இவை ஆதார சக்தியாக விளங்குகின்றன. இவை முறையே பராசக்தி, ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, குண்டலினி சக்தி, மாத்ரு சக்தி என்பனவாகும்.

தேவி ஆக்கத்தில் வேதம், சக்தியை வாக் என்று குறிப்பிடுகிறது. காண்பது, கேட்பது, முகருவது எல்லாமே சக்தியின் இயக்கங்கள் தாம் என்று பராசக்தியே கூறுகிறாள்.

ஒவ்வொரு வருடத்திலும் ஆறு ருதுக்களின் ஆரம்பத்தை நவராத்திரியாக வழிபடுவது வழக்கம். இவைகளில் வசந்த நவராத்திரியும், சாரதா நவராத்திரியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

புரட்டாதி மாதம் சுக்ல பட்சத்தில் வருவது தான் சாரதா நவராத்திரி. புரட்டாதி சுக்ல பட்சத்தில் முதல் நாளன்று ஹஸ்த நட்சத்திரம் கூடும் நாள். அந்த நாள் தேவி பூஜைக்கு உகந்த நாள். முதல் மூன்று தினங்கள் துர்க்கைக்கும், மத்தியிலுள்ள மூன்று தினங்கள் லக்ஷ்மிக்கும், முடிவிலுள்ள மூன்று தினங்கள் சரஸ்வதிக்கும் ஆக நவராத்திரியில் முப்பெரும் சக்திகளும் வழிபாட்டுக்குரியவர்கள்.

இந்த ஒன்பது நாள்களும் முறையே மகேஸ்வரி, கௌமாரி, வராஹி, மகாலக்ஷ்மி, வைஷ்ணவி, இந்திராணி, மஹா சரஸ்வதி, நராசிம்மி, சாமுண்டி ஆகிய வடிவில் ஆராதிக்கப்படுகிறார்கள்.

நவராத்திரி விரதத்தை அனுசரித்த பின்பே ஸ்ரீராமபிரான் சீதையையும், அரசாட்சியையும் பெற்று வாழ்ந்ததாக இராமயணம் கூறுகிறது. நவராத்திரி ஒன்பது தினங்களும் அம்பிகையை வழிபட இயலாவிட்டாலும் பத்திரகாளி தோன்றிய எட்டாம் நாளான அஷ்டமியன்று தேவியை வழிபட்டாலும் போதுமானது.

நவராத்திரியின் முதல் நாள் மதுனகடபரை அழித்த அம்பிகையைக் குமரியாகவும், இரண்டாம்நாள்மகிஷாசுரனின்சேனைகளை வதம் செய்யப் புறப்பட்ட மகிஷாசுரவதம் செய்த தேவியை மகிஷத்தின் சிரசில் வீற்றிருக்கும் கோலத்தில் சூலத்துடனும், நான்காம் நாள் ஜெயலக்ஷ்மியாக வெற்றி வடிவத்திலும், ஐந்தாம் நாள் அம்மன் நிசும்பனின் தூதுவன் சொல்வதைக் கேட்கும் பாவனையிலும், ஆறாம் நாள் சர்பாசனத்தில் சண்டி தேவி அமர்ந்திருக்கும் திருக்கோலத்திலும், ஏழாம் நாள் சண்டமுண்ட வதைக்குப் பின்னர் பொன்னாசனத்தில் அமர்ந்து யாழ் மீட்டும் கோலத்திலும், எட்டாம் நாள் ரக்தபீஜனை அழித்ததற்குப் பின் கருணை மிக்கத் தோற்றத்துடன் காட்சியளிப்பவளாகவும், ஒன்பதாம் நாளன்று வில், அம்பு, அங்குசம், பாசம் தரித்த கோலத்திலும் அம்பிகையை வழிபடுதல் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

பத்தாம் நாளன்று அம்பிகை இலிங்கத்தைப் பூசித்து சிவசக்தி ஐக்கிய ரூபினியாகக் காட்சி அளிக்கிறாள்.

நவராத்திரி ஒன்பது தினங்களும் குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, மோஹினி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா என்ற பெயர்களில் பத்து வயதுக்குட்பட்ட அழகிய கன்னியர்களை துர்க்கையின் வடிவமாகப் பாவித்து வழிபடுவார்கள்.

இவ்வாறு ஒன்பது நாள்களுக்குப் பின்னர் ஸ்ரீ அம்பிகையின் வெற்றியைக் குறிக்கும் வண்ணம் விஜயதசமியாகக் கொண் டாடுகிறோம். இந்த நாள்களில் வித்தியாரம்பமும், புதுத் தொழில்கள் துவங்குவதும் நடைபெறும். இந்த நவராத்திரியானது சக்தி வழிபாட்டில் முக்கியமாகக் கருதப்படுகிறது.

இத்தகு நவராத்திரி விழா தத்துவார்த்த சிந்தனைகளைத் தருவதோடு, சகல ஐஸ்வரியச் சிறப்புக்களையும் பெருக்குகின்றது. நாமும் நல்லவர்களாக, வல்லவர்களாக வாழ சக்தி விரதமெனப் போற்றப்படும் நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து வாழ்வோமாக.

---

# ஒருமைப் பாட்டை விளக்கும் நவராத்திரிப் பண்டிகை

இ.குமாரசாமிசர்மா

தேவியை விசேடமாக வழிபட்டு நாம்ஈடேறுவதற்காகியபுண்ணிய காலம் நவராத்திரியாகும்.

புரட்டாதி மாதத்துப் பூர்வபக்க பிரதமைத் திதி முதலாகவுள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி எனவும் பத்தாம் நாள் விஜயதசமி எனவும் சொல்லப்படும்.

சக்தியின் திருநாமங்கள் பல பெயர்களால் அழைக்கப்படும். உமாதேவி, காமாட்சி, சிவகாமசுந்தரி, மீனாட்சி, விசாலாட்சி, லக்ஷ்மி, சரஸ்வதி, காயத்திரி, சாவித்திரி, துர்க்கை, காளி, புவனேஸ்வரி, வாலாம்பிகை, பெரியநாயகி, மனோன்மணி, பர்வதவர்த்தினி, தையல்நாயகி, இராஜராஜேஸ்வரி, வீரலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, தனலக்ஷ்மி முதலான அனந்தத் திருநாமங்களைப்பெற்று ஆத்ம கோடிகளுக்கு அருள் புரிகின்றவள்.

ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு உடல் வலிமையும், வாழ்க்கைக்குத் தேவையான செல்வமும் அறிவு வளமும் மிகவும் அவசியம். அதனை வெளிப்படுத்த உடல் வலிமையின் சக்தியாக ஸ்ரீதுர்க்காதேவியையும், வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தை நல்கவல்ல சக்தியாக ஸ்ரீமஹாலக்ஷ்மியையும், அறிவையும் ஆற்றலையும் தரவல்ல கல்வியின் தேவதையாக ஸ்ரீசரஸ்வதி தேவியையும் நாம் வழிபட்டு அந்தத் தேவியரின் அருள் பெற்று வலிமை, செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே நவராத்திரி எனப்படும்.

ஒன்பது இராத்திரிகளில் முதல் மூன்று இரவுகள் ஸ்ரீதுர்க்காதேவியையும், அடுத்த மூன்று இரவுகள் ஸ்ரீமகாலக்ஷமிதேவியையும், கடைசி மூன்று இரவுகள் ஸ்ரீசரஸ்வதிதேவியையும் ஆராதித்து பெறற்கரிய இந்தச் செல்வங்களைப்பெற வழி வகுத்துத் தரும் ஓர் அற்புதமான பண்டிகைதான் நவராத்திரி.

எளிய முறையில் பக்தியோடு ஆராதிக்க வேண்டும் என்பதான இந்த ஆராதனை ஒரு பண்டிகையாக மாறி அதற்கு ஒரு சமூக அந்தஸ்தும் பொது வாழ்க்கைத் தொடர்பும் ஏற்படக் காரணமாயிற்று.

அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தி, அதனைப் பகிர்ந்து கொள்ள நண்பர்களையும் உறவினர்களையும் தத்தம் வீட்டுக்கு அழைத்து தாங்கள் வைத்திருக்கும் பொம்மைக் கொலுவைப் பார்க்கும்படி செய்து, உபசரித்து அனுப்புவது நவராத்திரிப் பண்டிகையின் ஓர் அம்சமாக மாறியது. தனிப்பட்டவர்களின் வீட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த இந்தப் பண்டிகை பின்னர் சமூக அளவில் மதிப்புப் பெற்று துர்க்கா பூசை எனும் பெயர் பெற்றது.

பொது இடங்களில் ஆதிபராசக்தியை துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி வடிவில் அமைத்து அலங்கரித்து நித்திய ஆராதனை செய்து பொதுமக்கள் கலந்துகொண்டு பொதுப் பிரார்த்தனை [illegible] இந்தப் பண்டிகை [illegible] முன்னர் இந்தப் பண்டிகையில் மக்களின் தெய்வீக ஈடுபாடும், பக்தியும் ஆன்மிக ஒருமைப்பாடும், எளிமையுமே காணப்பட்டன. சமீப காலத்தில் ஆடம்பர நோக்கங்களும், விளம்பர நோக்கங்களும், வியாபார நோக்கங்களும் இதில் பிரதிபலிக்க ஆரம்பித்து விட்டன.



முதல் மூன்று நாள்களும் வெற்றியை வேண்டி துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று நாள்களும் செல்வத்தை வேண்டி லக்ஷ்மி தேவியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதி தேவியையும் வழிபடல் வேண்டும். ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூசை எனப்படும். ஒவ்வொருவரும் தமது முயற்சிக்கு ஆதாரமான பொருள்களாக ஆயுத வகைகள், புத்தகங்கள், இரத்தினம், பொன் முதலிய வற்றை வைத்து வழிபடுவர். பத்தாம் நாள் விஜயதசமி எனப்படும். அன்று ஏடு தொடக்குதல் முதலான வித்தியாரம்பங்கள் தொடங்கும். மேலும் மகி [illegible] வாழை வெட்டுதல், மானம்பூ [illegible] இந்த நாள் கூறப்படும். நவராத்திரி நாள்களில் கொலு வைக்கப்படுகின்ற பழக்கம் உண்டு. படைப்புக் கடவுளாகிய பிரம்ம தேவருக்கு நடந்த சகல ஆபத்துக்களையும் போக்கி முன்படைத்தது போலவே மேலும் படைத்தல் தொழிலை நடத்த அருட்தேவியை நடுவே வைத்து அருட்சக்தியைச் சுற்றி இந்த உலகப்பொருளை எல்லாம் அழகு பெற வைத்து, உலகில் வாழ அருள்புரிந்த ஆதி சக்தியை வணங்குவதையே அது குறிக்கின்றது.

இந்தப் புண்ணிய தினத்தில் எவரும் தேவியை வணங்கத் தவறமாட்டார்கள். ஆலயங்கள், வித்தியாலயங்கள், மடாலயங்கள், வீடுகள் முதலாக எங்கும் வழிபாடு நடைபெறும்.

ஆசிரியர்கள் பல வகை விருத்தங்கள், பாடல்கள், கோலாட்டங்கள் என்பவற்றை மாண வர் களுக்கு பயிற்றுவிப்பர். பெரியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களை மகிழ்வித்து சன்மானம் பெறுவர். எமது நாட்டில் இந்து மக்கள் யாவரும் ஒருமைப்பாட்டை விளக்கும் ஓர் அற்புதப் பண்டிகையாக நவராத்திரியைக் கொண்டாடி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஸ்தூரியார் வீதியில் வீதி ஒழுங்கு பேணப்படுமா?

நான் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தேன். அது ஒரு வழிப்பாதை. ஆகையால் வீதியின் வடக்குத் திசையிலிருந்து தெற்குநோக்கி வாகனங்கள் செல் வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே நான் பஸ் நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்ததால் எனக்குப் பின்புறமாக வாகனங்கள் வராது என்ற நம்பிக்கையில் முன்புறமாக வந்த வாகனங்களை அவதானித்தவாறு சென்று கொண்டிருந்தேன்.

அப்போது நான் சிறிதும் எதிர்பார்க்காதவாறு எனக்குப் பின்புறமாகப் பெரிய இரைச்சலுடன் பெரிய தனியார் மினிபஸ் ஒன்று என்னை உரசியவாறு சென்றது. நான் சிறிது கவனக்குறைவாக இருந்திருந்தால் அந்த பஸ் என்னை மோதித் தள்ளியிருக்கும். பின்னர் அந்த பஸ், பஸ் நிலையப் பகுதிக்குச் செல்வது தெரிந்தது. இத்தனைக்கும் பொலிஸார் எவரையும் அந்தப் பகுதியில் காணமுடியவில்லை.

நகரின் முக்கிய வீதியொன்றில் அந்த பஸ்ஸின் சாரதி வீதி ஒழுங்குகளை மீறியமை பாரதூரமான தொரு குற்றம் என்பதுடன் பொது மக்களுக்குச் சேதத்தை ஏற்படுத்திவிடக்கூடியதொரு செயலுமாகும். பொலிஸார் நகரத்தின் முக்கியமான இந்த வீதியில் தரித்து நின்று வீதி ஒழுங்குகளைக் கவனிப்பது அவசியமாகும்.

மேலும் வழக்கமாகவே இந்த வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் செல்பவர்கள் வீதி ஒழுங்குகளை மீறிச் செயற்படுவதைக் காணமுடிகின்றது. அதிலும் பொலிஸார் அங்கு இல்லை என்பதை அறிந்து கொண்டதும் வீதி ஒழுங்குகளை எவ்வித அச்சமும் இல்லாமல் அவர்கள் மீறுவதைக் காண முடிகின்றது. இதனால் அந்த வீதியில் செல்பவர்கள் தான் சிரமப்பட நேர்கிறது.

ஆகவே உரிய வீதி ஒழுங்குகளைப் பொலிஸார் நிலைநாட்ட வேண்டும் என்பதே பொதுமக்களின் வேண்டுகோளாகும்.

*சுஜித்,யாழ்ப்பாணம்.*

# மக்களின் தலைகளில் சுமை வேண்டாம்

சமையல் எரிவாயு உட்பட முக்கியமான பாவனைப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமென அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. காரணங்களைக் கூறுவது எவருக்குமே எளிதான விடயம் தான். அதிலும் நாட்டை ஆளுகின்ற அரசு தாராளமாகவே காரணங்களைக் கூற முடியும். ஆனால் மக்கள் அவற் றையெல்லாம் ஏற்றுக் கொள்வார்களா? என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை.

மைத்திரி ரணில் இணைந்த அரசு அமைந்தபோது மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நில்வியது. முன்னைய அரசின் காலத்தில் பெருமளவு ஊழல், மோசடிகள் இடம் பெற்றதால் மக்களின் தலை களில் சுமைகள் சுமத் தப்பட்டதாகவும், தற் போது நேர்மையான நல்லாட்சி நடப்பதால் எல்லாமே சரியாகி விடுமெனவும் அரசின் சார்பில் தெரிவிக்கப்பட் டது. ஆனால் இப்போது கதை வேறுமாதிரியாக வெளிவருகின்றது.




முதலில் மக்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைப்பது தொடர்பிலேயே அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் நிதிக் கொள்கைகளும் வகுக்கப்படல் வேண்டும். அதைவிடுத்து மக்களைப் பொருளாதாரச் சுமைக்குள் தள்ளிவிட்டு நல்லாட்சி நடத்துவதாகக் கூறுவது வெறும் ஏமாற்று வேலை.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை மிகவும் கீழ் மட்டத்துக்கு இறங்கியுள்ளதால் எமது நாட்டிலும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும். ஆனால் இதற்கு எதிர்மாறாக முதலில் எரிவாயுவின் விலையை அதிகரிக்கப் போவதாகக் கூறுவது எந்த வகையில் நியாயம் என்பது தெரியவில்லை.


அரசு வீணான ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கப் போவதாகக் கூறுகின்றது. ஆனால் மிகப்பெரிய அமைச்சரவையொன்று இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினமே நாட்டை அதல பாதாளத்தில் தள்ளி விடுவதற்குப் போதுமானது. இந்த நிலையில் சாதாரண மக்களின் வாழ்வில் எவ்வாறு ஒளி பிறக்கும்?

இனிவரும் நாள்கள் பொது மக்களைப் பொறுத் தவரையில் சிரமமானதாகவே இருக்கப்போகின்றன. இதற்கான ஆரம்ப அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன.

இந்த அரசு பொதுமக்களின் மடியில் கைவைக்குமாயின் மகிந்தவுக்கு ஏற்பட்ட கதிதான் இவர்களுக்கும் ஏற்படும்.

*ஆ.சந்திரன்,அராலி*

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# இராணுவ கௌரவம் பேணப்படல் அவசியம்

கிளிநொச்சி, விசுவமடுப் பகுதியில் 2010 ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் திகதி இடம்பெற்ற கூட்டுப் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் நான்கு இராணுவத்தினருக்கு 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ். மேல்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. 27 வயது நிரம்பிய இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவரைப் பாலியல் வன்புணர்வு செய்தனர் என்றும் 37 வயது நிரம்பிய ஐந்து பிள்ளைகளின் தாயார் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்றும் குற்றம்சாட்டி விசுவமடு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின்போது நான்காவது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் இல்லாமலேயே வழக்கு விசாரணை நடைபெற்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனால் தீர்ப்பு வழங்கப்பட்டுள் ளது.

மிருசுவிலில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் எட்டுப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கில் கடந்த ஜூன் மாதம் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த அகதிகளான இவர்கள், இராணுவத்தில் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தமது வீடுவாசல்களைப் பார்வையிடச் சென்ற சமயம் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். ஐந்து இராணுவத்தினருக்கு எதிராக இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டது. எனினும் போதிய சாட்சியம் இல்லாததால் ஏனைய நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர். ஒருவர் மட்டும் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

தற்பொழுது மூன்று மாதங்கள் கடந்து யாழ். மேல்நீதிமன்றத்தால் நான்கு சிப்பாய்களுக்கு 25 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பாலியல் வன்புணர்வுக்கு 20 வருடக் கடூழியச் சிறையும், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு 5 வருடக் கடூழியச் சிறையும் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோருக்கான ரூ.5 லட்சம் நஷ்டஈட்டைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 5 வருடக் கடூழியச் சிறையை அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு தீர்ப்புகளும் எதிர்காலத்தில் இப்படியான கொடூரமான சம்பவங்களில் இராணுவம் ஈடுபடாதிருப்பதற்கு நல்ல பாடமாக அமையவேண்டும். முன்னைய ஆட்சியாளர்களால் சட்டத்துக்குப் புறம்பாக வழங்கப்பட்ட தண்டனை விலக்கைப் பயன்படுத்தி இராணுவத்தினர் இப்படியான கொலைகள், பாலியல் வன்புணர்வுகளில் ஈடுபட்டனர் என்பதற்கான குற்றச்சாட்டுகள் நிறையவே உள்ளன. எனினும் குற்றவாளிகள் பிடிபட்ட சம்பவங்கள் மிகவும் குறைவானவை. குற்றவாளிகள் சிக்கிய சம்பவங்களில் மிருசுவில் கொலைகள், விசுவமடு பாலியல் வன்புணர்வு ஆகியவை அடங்குகின்றன.

இந்த இரு சம்பவங்களிலும் இராணுவத்தை நம்பிச் சென்றவர்களே இராணுவத்தினரால் சூறையாடப்பட்டுள்ளனர். விசுவமடுச் சம்பவத்தில் மீள்குடியேற்றத்தின்போதே இரு பெண்களும் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகினர். போரின்போது அனைத்தையும் இழந்து இராமநாதன் இடம்பெயர் அகதி முகாமில் தஞ்சமடைந் திருந்துவிட்டு அரசும் இராணுவத்தினரும் வழங்கிய மீள் குடியேற்றத்துக்கான வாக்குறுதியை அடுத்து இந்தப் பெண்கள் தமது சொந்த ஊரான விசுவமடுவுக்குத் திரும்பிச் சென்று தற்காலிக கொட்டில்களை அமைத்து அதில் தங்கியிருந்து தமது காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இரவு 12 மணிக்கு அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்குள் புகுந்து இராணுவத்தினர் இந்தக் குற்றச் செயலைப் புரிந்திருக்கிறார்கள். இது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

விசுவமடு சம்பவம் தொடர்பான தீர்ப்பில் நீதிபதி தெரிவித்துள்ள கருத்துகள் மிகவும் முக்கியமானவை. பாலியல் குற்றம் என்பது ஓர் சர்வதேச குற்றம். அத்துடன் அது ஒரு போர்க்குற்றம், மனித நேயத்துக்கு எதிரான குற்றம் என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருப்பதுடன் மற்றொன்றையும் குறிப்பிட்டுள்ளார். கோரப் போர் நடைபெற்றபோது காப்பாற்றப்பட்ட பெண்ணின் கற்பைப் போரின் பின்னர் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருந்த இராணுவம் கூட்டாகச் சேர்ந்து சூறையாடியது பெரும் குற்றம் என்றும் சுட் டிக்காட்டியுள்ளார். மக்களையும் நாட்டையும் காப்பாற்றவேண்டிய இராணுவத்தினர் குற்றம் செய்துள்ளனர். பெண்களின் கற்பைச் சூறையாடியுள் ளார்கள்.

இலங்கை இராணுவத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் இத்தகைய குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கலைத்துறைச் சாதனைகளும் மக்கள் மனங்களை வெல்வனவே!

சிலர் சிறப்பானவர்களாகவே பிறக்கிறார்கள். சிலர் வாழும் காலத்தில் சிறப்பியல்புகளைத் தேடிக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் பெற்றிருக்கும் சிறப்பியல்பு அவர்கள் மீது திணிக்கப்பட்டதாக இருக்கின்றது.

மகாகவி ஷேக்ஸ்பியரின் இந்த விதமான வரைவிலக் கணத்தின் முதல் இரண்டு படிநிலைகளும் அண்மையில் காலமான தமிழ் நடிகை 'ஆச்சி' மனோரமாவுக்கு மிக வும் பொருத்தமானதே.

பிறப்பிலேயே அவர் நடிப்பின் சகல நிலைகளையும் கைவரப் பெற்றவராக இருந்துள்ளார். ஆனால் அது கலையுலகுக்குத் தெரியாமல் இருந்துள்ளது. வறுமையின் காரணமாக ஆறாம் வகுப்புடன் கல்வியை முடித்துக்கொண்ட மனோரமாவுக்கு 12 வயதில் 'யார் மகன்' என்ற நாடகத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்பை வழங்கிய திருவேங்கடத்தான் என்ற இயக்குநர், கோவிந்தம்மாள் என்ற இயற் பெயரையும், கோபிசாந்த என்ற வழங்கு பெயரையும் மாற்றி கலைத்துறைக்காக மனோரமா என்ற பெயரைச் சூட்டினார். நடிப் பாற்றலை இயற்கையாகவே பெற்றிருந்த அவர் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, பிற் காலத்தில் நடிப்பின் உச்ச நிலைக்கே சென்றிருந்தார் என்பதை இன்று தமிழ் உலகம் வியந்து பார்க் கின்றது.

சினிமாவிலும் சரி, மேடை நாடகம் மற்றும் சின்னத்திரையிலும் சரி, மனோரமா தாம் ஏற்கும் பாத்திரத்தின் மனவிம்பத்தை, அதன் உணர்ச்சிக் கோலங்களை தனது நளினமான உடல் உறுப்புக்கள், முகபாவங் களால் வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருந்தார். நகைச்சுவை நடிகையாகவே சினிமா உலகில் அறிமுகமாகிய அவர், அந்த வகையிலேயே முத்திரை பதித்திருந்த அவர், அம்மாவாக, ஆச்சியாக, பாட்டியாக ஏன் வில்லியாகவும் கூட பாத்திரமேற்று அந் தந்தப் பாத்திரங்களை சமூகத்தில் நடமாடும் உண்மை மனித வடிவங்களாக சித்திரித்து நிலை பெறச் செய்துள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், நடிகையர் திலகம் சாவித்திரி போன்றோர் பிரதான பாத்திரங்களேற்று அவற்றில் நகைச்சுவை மிளிரக்கூடியதாக நடித்துள்ள காட்சிகள் உண்டு. ஆனால் நகைச்சுவைப் பாத்திரத்தைக்கொண்டே பிரதான பாத்திரங்கள் வெளியிடக்கூடிய உணர்ச்சிகளை வெளிப்படுத்திய ஆற்றல் மிக்கவராய்த் திகழ்ந்தவர் மனோரமா. அதற்கு எடுத்துக்காட்டாக தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தில் அவர் ஏற்றிருந்த ஜில்ஜில் ரமாமணி என்ற பாத்திரத்தைக் குறிப்பிடலாம். தாம் விரும்பிய மனிதர், (கதையில்) தனக்கு மோசம் செய்துவிட்டார் என்ற நிலையில் அவர் வெளியிட்ட முகபாவங்கள், உணர்ச்சி கொப்பளிக்கும் உடல் மொழிகள் ஆச்சரியமூட்டுபவை.

ஒரு கட்டத்தில் கள்ளப்பாட் வேடம் தாங்கி ஓர் ஆண்மகன் போன்று உடைதரித்து "டப்பாங்கூத்து" ஆடும் காட்சி இன்றும் மறக்க முடியாததாய் இருக்கின்றது. இவ்வாறெல்லாம் ஆடுவதற்கு எங்கு கற்றுக் கொண்டீர்கள் என்று நடன இயக்குநர் ஒருவர் கேட்டபோது "நான் எங்கும் கற்கவில்லை, சொல்லிக் கொடுப்பதை அப்படியே செய்கிறேன். அவ்வளவுதான்" என்றாராம் மிக அடக்கத்துடன். அறிஞர் சி.என். அண்ணாதுரை, மு.கருணாநிதி, எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெயலலிதா மற்றும் என்.ரி.ராமராவ் ஆகிய ஐந்து முதல்வர்களுடன் நடித்த பெருமை அவருக்குண்டு.

1989 ஆம் ஆண்டு சிறந்த துணை நடிகைக்கான விருதும், 2002ஆம் ஆண்டு மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதும் பெற்ற மனோரமா சொந்தக்குரலிலும் பாடினார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மற்றும் சிங்களம் என ஆறு மொழிப் படங்களில் நடித்த பெருமையும் அவருக்குண்டு. மனோரமாவின் நடிப்பைப் பாராட்டி கலிபோர்னிய பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. ஆயிரத்துக்கும் அதிகமான படங்களில் நடித்தமைக்காக கின்னஸ் சாதனை புத்தகத்திலும் அவர் பெயர் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் திரையுலகில் புகழும் சிறப்பும் பெற்று விளங்கிய பலநடிகர்கள், நடிகைகள் இருந்துள்ளார்கள். ஆனால் மிக ஏழ்மையான சூழலில் பிறந்து மிக உன்னதமான ஒரு நடிகையாக, அதுவும் நகைச்சுவை நடிகையாக பேரும் புகழும் பெற்று மறைந்த ஒருவர் ஆச்சி மனோரமாவாகத்தான் இருக்க முடியும்.

தமிழகத்தின் சினிமாத்துறை வரலாற்றில் அவர் பொன்னென என்றும் மின்னிக்கொண்டே இருப்பார்.

மொத்தத்தில் கலைத்துறைச் சாதனைகளும் மக்கள் மனங்களை வெல்வனவே...!

# கோத்தாவின் வாக்குமூலம் விசாரணைகளுக்கு உதவுமா?

சேரலாதன்



சர்வதேசம் ஊடாகச் சரணடைவதற்கு விடுதலைப் புலிகள் முயன்றதை முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தற்போது ஒப்புக் கொண் டுள்ளார். இறுதிக் கட்டமாக இடம்பெற்ற போரின்போது புலிகள் சரணடைவதற்காகச் சென்றபோது கொலை செய்யப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதிலும் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடையச் சென்ற புலி உறுப்பினர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டும், கோரமான வேறு வகையிலும் கொலை செய்யப்பட்டதாகக் கடுமையான குற்றச்சாட்டுக்கள் எழுந்தமையும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக மழுப்பலான பதில்களே இதுவரை தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. ஐ.நா கூட இந்த விடயத்தில் கரிசனை காட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் போர்க்குற்ற விசாரணைகள் ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளதற்போதைய நிலையில், கோத்தபாய சில உண்மைகளைக் கூறுவதற்கு எத்தனித்துள்ளார்.

புலிகள் சுமார் மூன்று ஆண்டு காலம் இலங்கைக்கான நோர்வே நாட்டுத் தூதராகக் கடமையாற்றிய ஹாட்ரெம் மூலமாகவே தமது சரணடைவதற்கான விருப்பத்தைத் தெரிவித்ததாக கோத்தபாய கூறுவது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆகவே புலிகள் தன்னிச்சையான வகையில் சரணடைவதற்கு முயற்சி செய்யவில்லை என்பது இதன் மூலமாக நிரூபணமாகிறது.

இரண்டு தரப்பினருக்கிடையில் போர்நிகழும்போது எவராவது ஒரு தரப்பினர் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடைவதற்கு முயற்சி செய்தால், மறு தரப்பினர் அதை ஏற்றுக் கொள்வதுதான் மரபாக இருந்து வருகின்றது. மனித தர்மமும் இதைத்தான் சுட்டிக் காட்டுகின்றது. ஆனால் முன்னாள் பாதுகாப்புச் செயலர் புலிகள் சரணடைவதற்கான உலக நியதிகளைக் கடைப்பிடிக்கவில்லையெனக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. ஏனென்றால் கடுமையானதொரு போர் நடந்து அழிவுகளும் உச்சக் கட்டத்தில் இருக்கும்போது சர்வதேச நியதிகளை இம்மியும் பிசகாது சரணடைதல் என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாததொன்று.

முன்னர் வெள்ளைக் கொடியுடன் புலிகள் சரணடையச் சென்ற விவகாரத்தில், ஐ.நாவின் பங்களிப்புத் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக அப்போது ஐ.நாவில் உயர்பதவியில் இருந்த இந்தியரான நம்பியார் என்பவர் தொடர்பாக இதில் அதிகம் பேசப்பட்டது. இந்த நம்பியார், ஐ.நா. பொதுச்செயலர் பான் கி மூனின் சம்பந்தி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஐ.நா. பொதுச்செயலர் என்ற வகையில் பான் கிமூன் இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பாக அக்கறையின்றியே செயற்பட்டிருக்கின்றார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இவர் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டபோதிலும் அது எங்குள்ள குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை.

பான் கி மூன் தனது அதிகாரத்தை உரிய வகையில் பயன்படுத்தி மனச்சாட்சியுடன் நடந்திருந்தால் அநியாயமாக இடம்பெற்ற கொலைகள் பலவற்றைத் தடுத்திருக்க முடியும்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவரது வலது கரமாகத் திகழ்ந்தவர் அவரது சகோதரரான கோத்தபாய. அவர் பாதுகாப்புச் செயலர் பதவிக்கு அப்பால் சென்று கூடப் பல காரியங்களை ஆற்றியுள்ளார். இவற்றுக்கெல்லாம் அவரது அண்ணனான மகிந்தவின் ஆசீர்வாதம் நிறையவே கிடைத்தது. அரசுக்கு வேண்டாதவர்கள் என அடையாளம் காட்டப்பட்ட பலர் கொலை செய்யப்பட்டனர். பலர் காணாமல்போகச்செய்யப்பட்டனர். மகிந்த ஆட்சியில் இருக்கும் வரையில் இவை தொடர்பான மர்மங்கள் துலங்கப்படவில்லை என்பதோடு உரிய விசாரணைகள் இடம்பெற்று குற்றவாளிகளும் கைது செய்யப்படவில்லை. ஆனால் இன்று நிலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராசசிங்கம் ஆகியோரின் கொலைகளுடன் தொடர்புடையவர்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன், சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கொலைதொடர்பானமர்மங்களும் துலங்கியுள்ளன. ரவிராஜ், எக்னொலிகொட ஆகியோரின் கொலைகளுக்கு புலனாய்வுத் துறையினரே காரணமென்பதும் விசாரணைகள் மூலமாகத் தெரியவந்துள்ளது. நாட்டில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய பிரபல றகர் வீரர் தாஜுதினின் சாவு தொடர்பான விசாரணைகள் இறுதிக் கட்டத்தை எட்டி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விரைவில் இந்தச் சாவு தொடர்பான மர்மங்களும் துலங்கி விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில் விசாரணைகள் தொடர்ந்தால் ஏனைய கொலைகள் மற்றும் காணாமல் போகச் செய்யப்பட்டிருத்தல் தொடர்பான மர்மங்களும் வெளிக் கொணரப் பட்டு விடும்.

மகிந்த காலத்தில் இடம்பெற்ற மோசமான சம்பவங்களுக்குக் கோத்தாவை நோக்கியே விரல்கள் நீளுகின்றபோதிலும், அவர் அவற்றையெல்லாம் நிராகரித்து வருகின்றார். இறுதிப்போரின்போது சுமார் 40 ஆயிரம் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக சனல்4 தொலைக்காட்சி மற்றும் தருஸ்மன் அறிக்கை ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவின் தலைவரான பரணகம 7ஆயிரம் பேரே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கின்றார். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் காணப்படுகின்றபோதிலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமை நிரூபணமாகின்றது. ஆனால் இதைக்கூட மகிந்தவோ அல்லது கோத்தபாயவோ ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. மகிந்த ஒருபடி மேலே போய் எந்தவொரு குடிமக்களுக்கும் சிறு சேதாரம்கூட இல்லாமல் தாம் போரை நடத்தியதாக மனிதாபிமானம் பேசினார். நீதியான போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுமாயின் உண்மைகள் எல்லாமே வெளிக்கொணரப்பட்டு விடும்.

பொதுமக்கள் வகை தொகையின்றிக் கொல்லப்பட்டதையும், சரணடையச் சென்ற புலிகள் மனிதாபிமானமற்ற வகையில் கொன்றொழிக்கப்பட்டதையும் கூட போர்க்குற்ற விசாரணைகளின் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு குற்றவாளிகள் எவராக இருந்தாலும் தண்டனைகள் வழங்கப்படுமாயின், பாதிக்கப்பட்டவர்கள் ஓரளவு மன ஆறுதலைப் பெற்றுவிட முடியும். மேலும் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவதன் மூலமாக எதிர்காலத்தில் இத்தகைய குற்றங்கள் இடம்பெறாது தடுத்து விடவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிங்களமூலம்:- உப்புல் யோசப் பெர்னாண்டோ (மவ்பிம)
தமிழில்:- வீ.எஸ்.ரீ.

# ஏனிந்த வெப்பியாரம் மகிந்தவுக்கு?

இலங்கையில் விடுதலைப் புலிகளை நாங்கள் தோற்கடித்துள்ள போதிலும், சர்வதேசத்தில் விடுதலைப் புலிகளின் பரப்புரைப் போரைத்தோற்கடிப்பதில்தோல்வி கண்டுள்ளோம் என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஒரு சமயம் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார். முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் லண்டன் பயணத்தின் போதான அசம்பாவிதச்சம்பவத்தின்பின்னரே கோத்தபாய அவ்விதம் தெரிவித்திருந்தார்.மகிந்ததமதுலண்டனுக்கான பயணத்தின்போது, பிரபல்யமான ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தில் நிகழ்த்த ஒழுங்கு செய்யப்பட்ட அவரது உரை, பல்கலைக்கழக நிர்வாகத்தால் இரத்துச் செய்யப்பட்டமை மகிந்தவைப் பொறுத்த வரை ஓர் அவமதிப்பாகவே கணிக்கப்பட்டது. மகிந்தவின் லண்டன் பயணத்துக்கு அங்குள்ள புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் காட்டிய எதிர்ப்பே மகிந்தவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக உரை இரத்துச் செய்யப்பட மூல காரணமாக அமைந்தது. தமது அந்தப் பயணத்தின்போது பிரிட்டன் பிரதமர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைச் சந்திக்க அவர் வாய்ப்பளிக்குமாறு கோரியிருந்த போதிலும் அது நிராகரிக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சி நிரலின்படியான தமது சந்திப்புக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பல இரத்துச் செய்யப்பட்டமையால் மகிந்த தாம் தங்கியிருந்த ஹோட்டல் அறையிலேயே பெரும்பாலான நேரத்தைக் கழிக்க நேர்ந்தது. தமக்கேற்படுத்தப்பட்ட அவமரியாதை காரணமாகக் கடும்கோபத்துடனேயே மகிந்த நாடு திரும்ப நேர்ந்தது.

மகிந்தவின் குறிப்பிட்ட அந்த லண்டன்பயணம், குறித்து அந்தவேளையில் 'மவ்பிம' பத்திரிகைகீழ்க்கண்டவாறு பிரசுரித்திருந்தது.

"புலம்பெயர்தமிழ்அமைப்புக்களது எதிர்ப்பைச்சம்பாதிக்கநேரிடுமென மகிந்த தமது பயணத்தின் முன்னரே ஊகித்து தமது லண்டனுக்கான பயணத்தைத் தற்காலிகமாக நிறுத்தியிருந்தால் அதனால் அவருக்கு வெட்கமேதும் இல்லை. பிரிட்டன் அரசும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் பேரவையும்கூட வெட்கப்பட்டிருக்க நேர்ந்திருக்காது.உண்மையில்பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகத்தின் ஆலோசகர்களே அதற்காக வெட்கப்பட வேண்டும். விடுதலைப்புலிகளது சர்வதேச பயங்கரவாதம் கொடிகட்டிப் பறக்கும் பிரிட்டனை, இலங்கைத் தூதரக அதிகாரிகள் கிளிநொச்சியென்றோ அல்லது நந்திக்கடல் என்றோதான் கருதி மகிந்தவின் லண்டன் பயணத்துக்கு பச்சைக் கொடி காட்டியிருந்தனர். பல்குழல் பீரங்கித் தாக்குதல்களால் விடுதலைப் புலிகளது கோட்டையான கிளிநொச்சியையோ, நந்திக்கடலையோ படையினர் கைப்பற்றியிருக்கலாம். ஆனால் விடுதலைப்புலிகள் பலமான நிலையில் இருக்கும் லண்டனிலோ, ஐரோப்பாவிலோ விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டுமானால் 'நண்பர்களையும் செல்வாக்குள்ளவர்களையும் எப்படிக் கவர்வது (How to win friends and influence people) என்ற ஆங்கில நூலைத் தம்முடன் எடுத்துச் சென்றாக வேண்டும்.இந்திய அமைதிப்படையினரை இந்தியாவுக்குத்திருப்பிஅனுப்புவது குறித்து இந்திய அரசுடன் பேச அவ்வேளைய வெளியுறவு அமைச் சர் ரஞ்சன் விஜேரத்னவை இந்தியாவுக்கு அனுப்ப அவ்வேளைய பிரேமதாச அரசு தீர்மானித்த சமயம் அனுர பண்டாரநாயக்கா மேற்கண்ட விதத்தில் ரஞ்சன் விஜேரத்னவுக்கு ஆலோசனை கூறியிருந்தார்."



மகிந்தவைப் போன்றே மைத்திரிபாலசிறிசேனவும் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு லண்டனுக்குப் பயணம் மேற்கொண்டவேளை புலம் பெயர் தமிழர் அமைப்புக்களது எதிர்ப்புக்கு அவரும்கூட முகம் கொடுக்க நேர்ந்தது. ஆனாலும் கூட பிரிட்டன் பிரதமர் மற்றும் பிரிட்டிஷ் மகாராணியை அவரால் சந்தித்துப் பேச முடிந்தது. பிரிட்டிஷ் மகாராணியை அவர் சந்தித்த வேளை பக்கிங்காம் மாளிகைக்கு முன்பாக புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதைக் கண்ட எலிசபெத் மகாராணி, புதிதாகப்பதவியேற்றுள்ள உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கிப் பார்க்க வேண்டுமென்று உணராமலா இவர்கள் உங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்? என மைத்திரிபாலவிடம் வினவினாராம். மகிந்தவின் லண்டன் பயணத்துக்கும் மைத்திரிபாலவின் லண்டன் பயணத்துக்கும் இடையேயான வேறுபாடு இதுவே.


அண்மையில் மைத்திரிபால ஐ.நா. பொதுச்சபைமாநாட்டில்பங்கேற்க நியூயோர்க்குக்குச் சென்றமை போன்று முன்னர் மகிந்தவும் ஐ.நா. பொதுச் சபை மாநாடுகளில் பங்கேற்றிருந்தார். 2010 ஆம் ஆண்டின் ஐ.நா. பொதுச்சபை மாநாட்டில் கலந்து கொள்ள மஹிந்த நியூயோர்க் சென்றமை குறித்து அந்த வேளையில் 'மவ்பிம' பத்திரிகை வெளிப்படுத்திய விமர்சனக்கருத்து வெளிப்பாடு கீழ்க்காணும் வகையில் அமைந்திருந்தது.

ஜனாதிபதிப் பதவியேற்ற பின்னர் 2006 ஆம் ஆண்டின்ஐ.நா. பொதுச் சபை மாநாட்டில் பங்கேற்க மகிந்த நியூயோர்க்சென்றிருந்தார். குறித்த மாநாடுகளில்பங்கேற்கச்செல்லும் உலக நாடுகளின் தலைவர்கள் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவது வழமையானதொன்று. 2006 இல் மாநாட்டுக்குச் சென்ற மகிந்த அவ்வேளைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை உத்தியோகபூர்வ விருந்து வைபவமொன்றில் ஒரு சில நிமிடங்கள் சந்தித்து உரையாடும் வாய்ப்பைப் பெற்றார். ஆயினும் அது இலங்கையில் பெரியதொரு சாதனை[illegible] வாகப் பரப்புரை செய்ய[illegible] அதேவேளை 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கான பொதுச் சபைமாநாடுகளுக்குச்சென்றிருந்த மகிந்தவுக்கு அவ்வேளைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இலங்கையில் தமது தரப்புக்கான வாக்குவங்கியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அமெரிக்காவுடன் முரண்படும் விதத்தில் செயற்பட மகிந்த அரசு முற்பட்டமையே அதற்கான காரணம். இலங்கையின் உள்ளக அரசியலில் அமெரிக்க அரசு தலையிடுவதாக ஜனாதிபதி மகிந்த முதற்கொண்டு அவரது சகபாடிகள் விமல் வீரவன்ச போன்றோர் எழுந்தமானமாகக் குற்றம் சுமத்தி விமர்சித்தமை காரணமாகவே அமெரிக்காவும் மகிந்த அரசை புறமொதுக்கிச் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொண்டது என்பதே உண்மை. இத்தகைய அமெரிக்க எதிர்ப்புப் போக்குக் காரணமாக மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்க அரசின் உயர்மட்டத் தலைவர்கள் கூட இலங்கையுடனான தமது சுமுகமான தொடர்புகளையும், சந்திப்புக்களையும் தவிர்த்து இலங்கை அரசை அலட்சியப்படுத்தும் போக்கைக் கைக்கொண்டமைக்கான உதாரணங்கள் நிறையவே உள்ளன.

இலங்கை அமெரிக்காவுடன் கொண்டுள்ளராஜதந்திர உறவை விட பிரிட்டனுடன் கொண்டுள்ள உறவு மிக நெருக்கமானதாகும். மகிந்தவின் ஐ.நா.பொதுச் சபை மாநாட்டுக்கான பயணங்களின் போது பிரிட்டன் பிரதமரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு மகிந்தவுக்குத் தவிர்க்கப்பட்டது.

அதேவேளை மகிந்தவின் ஐ.நா பொதுச்சபை மாநாட்டுப் பயணம் ஒன்றுக்காகச் செலவிடப்பட்ட தொகை 1500 மில்லியன் ரூபா ஆகும் என ஐக்கியதேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இது வேறு எவருடைய பணமும் அல்ல, இந்த நாட்டு மக்களது பணமே எனவும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டி விமர்சித்துள்ளது. இவ்விதம் நாட்டுக்கு எவ்வித பலாபலன்களையும் பெற்றுத்தராத மகிந்தவின் ஐ.நா. பொதுச்சபை மாநாடுகளுக்கான பயணங்களுக்கு இவ்வளவு பெரிய தொகை நிதியைச் செலவிட்டமை [illegible] 'மவ்பிம' பத்திரிகை அந்த வேளையில் மகிந்த அரசை விமர்சித்திருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால இந்த முறையே முதல்முறையாக ஐ.நா. பொதுச்சபை மாநாட்டில் பங்குபற்ற நியூயோர்க் சென்றிருந்தார். அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன்ஹெரி, மைத்திரிபாலவைச் சந்திக்க அவர் தங்கியிருந்த விடுதிக்கே வந்திருந்தார். மாநாட்டில் கலந்து கொண்ட அரச தலைவர்களுக்கு வழங்கப்பட்ட விருந்துபசார நிகழ்வில் வைத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஜனாதிபதி மைத்திரிபாலவைத்தனியாகச்சந்தித்துப் பேசியுள்ளார். பிரபல நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் ஒபாமா, புடின், மோடி மற்றும் ஐ.நா பொதுச்



செயலாளர் பான்கிமூன் ஆகியோர் அமர்ந்திருந்த மேசையில் அமர்ந்து அவர்களுடன் விருந்துண்டு கலந்துரையாடும் வாய்ப்பு மைத்திரிபாலவுக்குக் கிட்டியிருந்தது. 'ஒபாமா உங்களுடன் உரையாட ஆவலாக இருந்ததாக நான் கேள்விப்பட்டேன்' என பான்கிமூன், மைத்திரிபாலவின் காதுக்குள் இரகசியமாகக் கூறியதாகவும் செய்தி வெளியாகியிருந்தது.

மகிந்தவினதும் மைத்திரிபாலவினதும் ஐ.நா பொதுச்சபை மாநாட்டுக்கான பயணத்தின் வேறுபாடு இதுவே.

லண்டனிலும், நியூயோர்க்நகரிலும் தமக்குத் தவறிப்போன மதிப்பும் கௌரவமும், தமது சுதந்திரக்கட்சியின் முன்னாள் செயலாளர் மைத்திரிபாலவுக்குத் தற்போது வாய்த்தமை குறித்து மகிந்த வெப்பியாரம் அடைவாரானால் அதனைத் தவறு எனக்கொள்ள இயலாது.

நாடு திரும்பிய பின்னர் மைத்திரிபால நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தெரிவித்த கருத்துக்குறித்துமகிந்தவெளியிட்ட அறிக்கையில், ஐ.நா. மனிதஉரிமைகள்சபையில் அமெரிக்கா, இலங்கை அரசுடன் இணைந்து முன்வைத்த யோசனை, இலங்கைக்கு இராஜதந்திர ரீதியில் ஒரு வெற்றி என்பதைத் தம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது எனத்தெரிவித்திருந்தமை அவரது வெப்பியாரத்தை வெளிப்படுத்துகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அமெரிக்கா முன்வைத்து நிறைவேற்றிய தீர்மானம் கலப்பு நீதிமன்ற யோசனையை வற்புறுத்தாததால் போர்க்குற்றம் புரிந்த இராணுவத்தினர் தண்டிக்கப்படப் போவதில்லை. எனவே இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் ஆதரவுடன் இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்றுக்கான தீர்மானத்தை முன்வைக்க வேண்டும் என தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளார். இதிலிருந்து அமெரிக்காவின் பிரேரணை மூலம் மைத்திரிபால அரசு இராஜதந்திர ரீதியில் வெற்றி கண்டுள்ளது என்பது இந்த மகிந்தவுக்குப் புரியவில்லையா.

மொத்தத்தில் தமது ஆட்சிக் காலத்தில் தாம் மேற் கொண்ட செயற்பாடுகள் மற்றும் வெளிப் படுத்திய கருத்துக்கள் தற் போது மகிந்தவுக்கு மறந்து போயுள்ளன என்பதே உண்மை.

உண்மையில் தமது ஆட்சிக் காலத்தில் தமது பிரபல்யத்தை உச்சப்படுத்த தம்மைச் சூழ்ந்து ஆதரவுக் கோசம் எழுப்பிய சிங்கள மக்கள், தம்மை போரை வென்றெடுத்து நாட்டைக் காப்பாற்றிய வீரர் எனத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடிய சிங்கள மக்கள், தற்போது நாட்டின் போர் வீரர்களைக்காப்பாற்றிய தலைவர் என மைத்திரிபாலவைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடுவதைக் காண, தாம் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்த ஒருவராக ஆகிவிடக்கூடும் என்ற அச்சம் மகிந்தவைப் பீடித் துள்ளது என்பதே இன்றைய யதார்த்தம். தாம் உருவாக்கிப் பாதுகாத்து வந்த நாட்டுப் பற்றாளன் என்ற தமது பிரதிபிம்பத்தை மைத்திரிபால அழித்துச் சிதைத்து விடுவாரோ என்ற அச்சமே மகிந்தவைத் தற்போது பிடித்தாட்டுகிறது. அத்தகையதொரு நிலையில் சுதந்திரக் கட்சிக்கோ ஐ.ம.சு கூட்டணிக்கோ மகிந்தவால் பயனேதும் இல்லாது போய்விடும் என்பதும் கசப்பான உண்மையே. மத சம்பந்தமான துறவை விட, வெப்பியாரத்தால் மனம் புழுங்குவது பாரமும் வலிமையும் மிக்கது என முச்சக்கர வண்டி ஒன்றின் பின்புறத்தில்சிந்திக்கவைக்கும் வாக்கியம் இடம் பெற்றுள்ளது. மகிந்தவைத் தற்போது இந்த உணர்வே பீடித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 3 | 2 | 1 | | | |
| | 1 | 8 | 6 | | | | | |
| | 9 | | | | | | 1 | 7 |
| | | | | 8 | | 3 | | |
| 4 | | | 1 | | 7 | | | 5 |
| | | 5 | | 9 | | | | |
| 6 | 2 | | | | | | 3 | |
| | | | | | 2 | 8 | 6 | |
| | | | 5 | 1 | 6 | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 3 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரை யான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வேண்டுதல் ஒரு பலவீனமாகும்

எமக்குப் பல அனுபவங்களைப் பெற்றுத்தருவதற்காகவே இந்த உலகம் படைக்கப்பட்டுள்ளது. இங்கிருக்கும் ஒவ்வொரு பொருளும் எம்மால் அனுபவிக் கப்பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அது வேண்டும், இது வேண்டும் என எவரிடமும் கேட்காதே. வேண்டுதல் ஒரு பலவீனமாகும். இந்த வேண்டுதல்தான் எம்மைப் பிச்சைக்காரர்களாக்குகிறது. நாம் அனைவரும் ராஜகுமாரர்கள். பிச்சைக்காரர்கள் அல்ல. இயற்கை என்றும், விதி என்றும் எதுவும் கிடையாது. கடவுள் என்ன நினைக்கிறாரோ அதுவே நடக்கும். கோபத்தில் ஒருவரை ஒரு அடி அடித்துவிடுவது எளிது. ஆனால் எழும் கையைத் தாழ்த்தி மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாய் இருப்பது கடினமான செயல். இந்தக் கடினமான செயலைத்தான் நீ பழகிக்கொள்ள வேண்டும். ஏதாவது தவறு செய்துவிட்டால், ஐயோ! நான் தீயவன் ஆகிவிட்டேனே! என்று வருத்தப்பட வேண்டாம். நீ நல்லவன்தான்.

## தூக்கம் வருவதற்கான ஆலோசனைகள்



ஒவ்வொரு மனிதனும் தினமும் ஆறு முதல் எட்டு மணி நேரம் வரை ஆழ்ந்து சுகமாகத் தூங்க வேண்டும் என்று நேற்றைய உதயனில் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இன்று தூக்கத்தைப் பற்றிப் பார்ப்போம்.

காபன் உள்ள தேநீர், மது, புகையிலை என்பவை எமது நரம்பு மண்டலத்தைத் தூண்டி விடு வதால் இரவு தூங்க நெடுநேரம் ஆகிவிடும். மசாஜ், யோகாசனம் மற்றும் தியானம் போன்றவை மனதையும் உடலையும் ஓய்வு நிலைக்குக் கொண்டு வந்து புதுப்பிக்கும். உங்களுக்கு இதில் எது பிடித்ததோ அதைச் செய்து வாருங்கள். இரவு உணவை, தூங்கச் செல்வதற்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்கு முன்பே முடித்துக் கொள்ளவும். சோறு நல் லது, ஏனென்றால் அதிகம் சாப்பிட்டாலும் எளி தில் ஜீரணம் ஆகும்.

நெஞ்செரிவு ஏற்படாமல் இருக்க இடக்கைப் பக்கமாகவே படுக்கவும். மல்லாந்தோ வலகைப்பக்கமாக படுத்தால் நெஞ் செரிவு ஏற்பட்டு தூக்கம் கலையும். எப்போதும் குப்புறப்படுக்காதீர்கள். தினமும் உடற் பயிற்சி துரித நடைப் பயிற்சி, ஏரோபிக் உடற்பயிற்சி இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றவும். அருகில் உள்ள இடங்களுக்குத் துரிதமாக நடந்து சென்று வருவது நல்லது. கனமான தலையணைகளைத் தவிர்க்கவும். உள்ளங்கால்களை நாமே அமுக்கிவிட்டுக் கொண்டாலும் நரம்பு மண்டலம் அமைதியாகி உடனடியாகத் தூக்கம் வரும். மனதை வருத்தும் கவலைகளை நினை வுக்குக் கொண்டு வராதீர் கள். கண் களை மூடிக் கொண்டு நீங்கள் வசிக்கும் வீதியை கற் பனையில் பாருங்கள். அந்த வீதி முழுவதும் மூடுபனி படர்ந்துள்ளது போலவும், அந்த வெண் புகைக்குள் நீங்கள் நுழைந்து வீதியில் செல்வதாக வும் கற்பனை செய்யுங்கள். தூக்கம் வரும். பகலில் உங்கள் சௌகரியத்தைப் பொறுத்து இருபது அல்லது முப்பது நிமிடங்கள் தூங்கலாம். இதனால் பகலில் மிகுந்த விழிப்புடன் உங்கள் பணிகளைச் செய்வீர்கள். பல ஆண்டுகளாகத் தூக்கமின்மை யால் அவதிப்படுபவர்கள் மதியமும், இரவும் கெட் டித் தயிர் சிறிது உப்பு சேர்த்துச் சாப்பிட்டு வந்தால், தூக்கமின்மை குணமாகும்.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 30 |
| கத்தரி | 70 | 50 | 70 | 60 | 50–60 | 50 | 80 | 30–40 |
| கரட் | 70 | 120 | 60–140 | 60 | 40–100 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 50 | 30 |
| பயிற்றை | 80 | 60 | 100 | 160 | 80–100 | 120 | 100 | 100 |
| பாகல் | 200 | 120 | 200 | 120 | 160–180 | 80 | 110 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 100 | 60 | 120 | 70–80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 110 | 120 | 90–100 | 120 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 160 | 120 | 60–70 | 140 | 100 | 90 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 | 40 | 60 | 50 | 30 |
| தக்காளி | 100 | 60 | 100 | 100 | 60–80 | 100 | 80 | 70 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 40 | 50–60 | 40 | 60 | 30 |
| கீரை | 25 | 40 | 40 | 10 | 25–30 | 30 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 20 | 20–30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 150 | 120 | 160 | 120 | 200 | 120–130 |
| புடோல் | 50 | 60 | 60 | 40 | 40–50 | 80 | 60 | 40 |
| கோவா | 80 | 80 | 60 | 70 | 50–60 | 80 | 100 | 40 |
| வெண்டி | 70 | 40 | 80 | 50 | 70–80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 160 | 160–180 | 200 | 160 | 170 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 100 | 60–80 | 80 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 55 | 50 | 60 | 50–60 | 45–50 | 35–40 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 130 | 100 | 110 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 120 | 140 | 220 | 120 | 400 | 160 | 270 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20–30 | 20 | 15 | 08–10 |
| [illegible]மிளகாய் | 100 | 120 | 120 | 120 | 80–100 | 100 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 80–90 |
| முருங்கைக்காய் | 50 | 70 | 60 | 30 | 70–80 | 60 | 120 | 70 |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 800 | 800 | 400 | 500 |
| நண்டு | 300 | 400 | 400 | 400 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 600 | 600 | 600 | – |
| பாரை | 500 | 500 | 500 | 450 | 600 | 400 |
| சுறா | 600 | 600 | 600 | 600 | 600 | 450 |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 600 | 300 |
| விளை | 600 | 400 | 400 | 450 | – | 300 |
| முரல் | 350 | 350 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 200 | 200 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 500 | – | 450 |
| ஒரா | 350 | 400 | 350 | 450 | – | 300 |
| திரளி | 250 | 250 | 250 | 400 | 100 | 200 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 100 | 250 |
| சூடை | 150 | 200 | 100 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 250 | 400 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 300 | 130 |
| பாலை | 300 | 200 | – | 450 | – | – |
| வாழை | 100 | 150 | | 350 | 200 | [illegible] |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 50 | [illegible] |
| மதனம் | 200 | 250 | 200 | 280 | – | 300 |

## நாளை

**புரட்டாதி-27**
**புதன்கிழமை**
**14.10.2015**

திதி: பிரதமை
கா.07.27 வரை
நட்சத்திரம்:
சுவாதி
சுபநேரம்:
04.32-06.02வரை
இராகு காலம்:
12.02-01.32 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம் 9

**எட்டாம் எண்ணில் பிறந்தவர்களின் பலன்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன. இன்று 9 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் பற்றிப் பார்ப்போம்.**

எண்களின் கடைசி எண்ணாக விளங்குவது ஒன்பதாம் எண்ணாகும். ஒன்பதாம் எண்ணும் மற்ற எண்களைப் போலவே தனித்தன்மை வாய்ந்ததாகவே உள்ளது. நவரசங்கள், நவதானியங்கள், நவரத்தினங்கள் என ஒன்பதாம் எண்ணுக்கும் தனிச்சிறப்புகள் உள்ளன. ஏன் உடலில் வாசல்கள் கூட ஒன்பது தான். ஒன்பதாம் எண் செவ்வாயின் ஆதிக்கத்துக்குட்பட்டதாகும். எந்த மாதத்திலும் 9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். சாதகக் கட்டத்தில் ஒன்பதாம் இடம் பாக்கிய ஸ்தானத்தைக் குறிக்கும். எனவே ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்களைப் பாக்கியசாலிகள் எனலாம்.

**குணநலன்கள்**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் பெரும்பாலும் எல்லா விடயங்களிலும் பொது அறிவு நிரம்பப் பெற்றிருப்பார்கள். கலா ரசிகர்களாகவும், விநோதப் பிரியர்களாகவும் இருப்பார்கள். எந்த விடயத்தைப் பற்றிப் பேசினாலும் தமக்குத் தெரிந்த விடயம் போலவே காட்டிக் கொள்வார்கள். பிறர் கூறும் விடயங்களை அப்படியே அங்கீகரிக்காமல் தனக்கென ஒரு கொள்கையை வைத்திருப்பார்கள். எதையுமே தனக்குப் பிடித்த மாதிரித் தான் செய்ய வேண்டுமென்ற பிடிவாத குணம் இருக்கும். வெகுளியாகவும் கபடம் அற்றும் காணப்படும் இவர்கள் எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்திராமல் மனம் திறந்து பேசுவார்கள். வாதப் பிரதிவாதங்களில் திறமையோடு வாதித்து தமது அபிப்பிராயத்தை அங்கு நிலைநாட்டி எதிரிகளை வெற்றி கொள்ளும் ஆற்றல் இருக்கும்.

தன்னிடத்தில் அன்பும் பாசமும் கொண்டவர்களுக்கு எந்த விதமான துன்பங்கள் நேர்ந்தாலும் அவற்றைத் துணிச்சலுடன் எதிர்த்து அவர்களுக்கு உதவி செய்வார்கள். தனது அந்தஸ்துக்கும் புகழுக்கும் பழுது ஏற்படாத பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார்கள். மன அமைதியை இழக்கக் கூடிய சூழ்நிலைகள் வந்தாலும் அதைப் பிறருக்குத் தெரியாதவாறு மறைத்துக் கொள்வார்கள். ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் என்பதால் இயற்கையிலேயே அஞ்சா நெஞ்சமும் தைரியமும் படைத்தவர்களாக இருப்பார்கள். இவர்கள் காரியவாதிகள். ஆதலால் வீண் பழிச் சொற்களுக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். இவர்களது சுயேட்சையான சுபாவத்தையும், அகங்காரக் குணத்தையும் கண்டு, இவர்களை நேசிப்பவர்கள் கூட சில சமயம் வெறுப்படைந்து விடுவார்கள். பெரியவர்களிடத்தில் மரியாதையும், சிறியவர்களை அடக்கியாளும் குணமும் இருக்கும். மற்றவர்களின் குற்றம் குறைகளைக் கண்டு பிடித்து அம்பலமாக்குவதில் தனிக் கவனம் செலுத்துவார்கள். இவர்களைத் துணையாக கொண்டால் எந்தக் காரியத்திலும் எதையும் சாதித்த வெற்றி பெறமுடியும்.

**உடல் நிலை ஆரோக்கியம்**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் நடுத்தரமான உயரமும், கம்பீரமான தோற்றமும் கொண்டவர்களாக இருப்பார்கள். நிமிர்ந்த நடையும், கனிந்த பார்வையும், சுருட்டையான தலைமுடியும் இருக்கும். பார்ப்பதற்கு வெகுளியாகக் காணப்பட்டாலும் எதையும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். நீண்ட மூக்கும் அடர்த்தியான பல் வரிசையும் கொண்டவர்கள். ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் செவ்வாயின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்களாதலால் இவர்களுக்குப் பெரும்பாலும் உடலில் காயங்கள், குருதிக் கசிவுகள் போன்றவை ஏற்படக்கூடும். உஷ்ணம் சம்பந்தப்பட்ட பாதிப்புகளாலும், அம்மை, மஞ்சள் காமாலை போன்ற நோய்களாலும் மருத்துவ செலவுகள் உண்டாகும். முடிந்தவரை மது, மாமிசம் போன்றவற்றைத் தவிர்த்தால் உடல் நிலை சிறப்பாக அமையும்.

**குடும்ப வாழ்க்கை**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்களுக்குக் காதல் திருமணம் நடைபெறக்கூடிய வாய்ப்புகள் அதிகம். அதில் பாதிப் பேருக்கு சுகமான சுபிட்சமான வாழ்க்கையும், வாழ்க்கைத் துணையால் முன்னேற்றங்கள் போன்றவை அமைந்தாலும் பாதிப்பேருக்கு குடும்ப வாழ்க்கையில் சிக்கல்களும் குழப்பங்களும் உண்டாகின்றன. இதனால் விரக்தியான மனோநிலைகளும் ஏற்படுகிறது. இதனால் எதையும் சிந்தித்து சரியான முறையில் அனுசரித்து நடந்தால் மட்டுமே நற்பலனைப் பெற முடியும். ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு தாயின் ஆதரவு அவ்வளவாகக் கிடைப்பதில்லை. உடன் பிறந்தவர்கள் மீது இவர்களுக்குப் பாசம் அதிகம் இருந்தாலும் அவர்களால் ஒரு பிரயோசனமும் உண்டாவதில்லை. இவர்கள் எதிலும் முன்யோசனையுடன் திட்டங்களைத் தீட்டிச் செயற்பட்டால் குடும்ப வாழ்வில் முன்னேற்றமும், மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும்.

**பொருளாதார நிலை**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் சகல வசதிகளையும் பெற்று சுக வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள். இவர்களுக்குத் தேவைக்கேற்ப பணவசதி ஏற்படுமே தவிர சேமிக்கும் அளவுக்கு இருக்காது. வரவுக்கேற்ற செலவுகளும் உண்டாகும். வாழ்க்கையின் முற்பாதியில் பொருளாதார நிலையில் சங்கடங்கள் இருந்தாலும் பிற்பாதியில் வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்வார்கள். மனைவி வழியில் ஒரு சிலருக்கே பொருளுதவிகள் கிடைக்கும். வரவுக்குத் தகுந்த மாதிரி செலவு செய்யக்கூடிய வாழ்க்கை இணை அமைந்த போதிலும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் தங்களுக்குத் தேவையற்ற கடன்களை ஏற்படுத்திக் கொள்வார்கள். பெரும்பாலும் தங்களுடைய கௌரவத்தையும், அந்தஸ்தையும் உயர்த்திக் கொள்ள எப்பாடுபட்டாவது சம்பாதித்து முன்னேறி விடுவார்கள்.

**தொழில்**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் எந்தத் தொழிலை ஏற்றுக் கொண்டாலும் அதைத் திறம்பட நிர்வாகிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். இவர்களுக்குப் பெரும்பாலும் அரசில் அதிகாரம் செய்யக்கூடிய உயர் பதவிகள் கிடைக்கும். பலர் ஆயுதங்களைப் பயன்படுத்தி பணிசெய்யக் கூடிய இராணுவம், பொலிஸ் துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள். மற்றும் தீயுடனும், மின்சாரத்துடனும் தொடர்பு கொண்ட துறைகளிலும் பணிபுரிவார்கள். போர்க்கலைகள், மல்யுத்தம், மலையேறுதல், விளையாட்டுத் துறைகளில் பயிற்றுவிக்கும் பணி போன்றவற்றிலும் ஈடுபடுவார்கள். மிகப்பெரிய பணியாக இருந்தாலும் துணிச்சலுடன் செய்வித்து அனைவரின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்று விடுவார்கள். சிலர் மருத்துவத் துறையில் அறுவைச் சிகிச்சை நிபுணராக விளங்குவார்கள்.

**நண்பர்கள், பகைவர்கள்**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் வீரத்தின் சின்னமாக விளங்குகிறார்கள். இவர்களுக்கு அதிகாரத் தோரணையும், பிறருக்கு அடி பணியாத குணமும் இருக்கும். ஆயினும் பிறருக்கு உதவி செய்யக்கூடிய குணமும் உண்டு. இவர் களது அதிகார குணம் மற்றவர்களுக்கு எவ்வளவு தான் உதவி செய்தாலும் போற்றுவதற்குப் பதில் தூற்றுவதற்குரியதாக இருக்கும். என்றாலும் இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் இவர்கள் அவ்வளவு எளிதில் மயங்கி விடுவதில்லை. இவர்களுக்கு 1,2,3 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் நண்பர் களாக இருப்பார்கள். 4,5,7 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் இவர்களுடன் ஒத்துப் போக மாட்டார்கள்.

**செவ்வாய்க்குரிய காலம்**

மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலும், ஒக்ரோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலும் செவ்வாய்க்குரிய காலமாகும். இந்த எண்ணில் உள்ளவர்கள் இந்தத் திகதிகளுக்கு இடையே பிறந்திருந்தால் மிகவும் அதிர்ஷ்டசாலியாக இருப்பார்கள். இரவில் வலிமை கொண்டவன் செவ்வாய். செவ்வாய்க்குரிய நாள் செவ்வாய்க்கிழமையாகும். குறுகிய கால அளவில் ஒருநாள் செவ்வாய்க்குரிய காலமாகும். செவ்வாய் ஓரையில் இயந்திரங்கள், நெருப்பு சம்பந்தப்பட்ட காரியங்களைச் செய்யலாம். சுபகாரியங்களைத் தவிர்ப்பது நல்லது.

**செவ்வாய்க்குரிய திசை**

செவ்வாய்க்குரிய திசை தெற்கு. சமையல் அறை, கசாப்புக் கடை, போர்க்களம் போன்றவை செவ்வாய்க்குரிய இடங்களாகும்.

**செவ்வாய்க்குரிய கல்**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் செவ்வாயின் ஆதிக்கத்துக்குரியவர்கள். ஆதலால் அவர்கள் அணிய வேண்டிய கல் பவளமாகும். மிகச் சிறந்த பவளம் கிளியின் மூக்கு நிறத்தைப் போன்று இருக்கும். பவளத்துக்கு அடுத்து ப்ளட் ஸ்டோன் என்ற கல்லையும் அணிந்து கொள்ளலாம்.

**பரிகாரம்**

ஒன்பதாம் எண்ணில் பிறந்தவர்கள் செவ்வாயின் ஆதிக்கம் கொண்டவர்களாதலால் முருகப் பெருமானை வழிபாடு செய்வது மிகவும் உகந்ததாகும். சஷ்டி விரதங்களும் மேற் கொள்ளலாம். கந்தசஷ்டிக்கவசத்தை தினமும் படிப்பதால் நற்பலன்கள் உண்டாகும்.

**அதிர்ஷ்டம் தருபவை**

அதிர்ஷ்டத் திகதி–9,18,27,
அதிர்ஷ்ட நிறம் –சிவப்பு
அதிர்ஷ்டத் திசை–தெற்கு
அதிர்ஷ்டக் கிழமை –செவ்வாய்
அதிர்ஷ்டக் கல்–பவளம்
அதிர்ஷ்ட தெய்வம் –முருகன்.

# பெண் என்பவள்...



பெண் என்பவள் ஆணின் ஆதார சக்தியாக எவ்விதம் இயங்குகிறாள்?

இப்படி, ஓர் ஆணிடம் கேட்டால் ஒரு விதமான பதிலையும், ஒரு பெண்ணிடம் கேட்டால் வேறு ஒருவிதமான பதிலையும் பெறமுடியும். பெண்களின் வழிவந்த சமூக இயக்கம் என்பது காலந்தோறும் மறுதலிக்கப்பட்ட ஒன்றாகும். பெண்ணின் இயக்கம் எப்பொழுதும் ஆணைச் சார்ந்தும், அவனது நிழலிலேயே தனது பாதுகாப்பை உணரும் வகையிலும் உருவாக்கப்பட்டது. இது யதார்த்தமே அன்றி, உண்மை அல்ல. பெண் எல்லாச் சமூகத்திலும் ஆதார சுருதியாகப் போற்றப்பட்டிருக்கிறாள் என்பதை பல்வேறு தொன்மங்கள் வெளிப்படுத்துகின்றன. பெண்ணைச் சுற்றிலும் பின்னப்படும் பாதுகாப்பு வளையங்கள் கூட, அவள் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்பதை அடியொற்றியதே. நிலம் எவ்வாறு ஒரு குடியானவனுக்கு ஆதாரமாகத் திகழ்கிறதோ, அதுபோல நாகரிகமடைந்த எந்த ஒரு சமூகத்தின் வளமைக்கும் மேம்பாட்டுக்கும் பெண்ணின் சக்தி முதன்மைக் காரணமாக விளங்குகின்றது. அதனால்தான் பெண்ணை மனித சமூகத்தின் ஆதார சக்தி என்கிறார்கள். ஒரு பெண் தனக்கும், சுற்றுப்புறத்தில் தன்னைச் சார்ந்திருக்கும் ஆண்கள், குழந்தைகள், தாவரங்கள், கால்நடைகள் என அனைத்து உயிர்களுக்கும் தேவையான யாவற்றையும், தன்னியல்பில் தானே செய்பவளாக இருக்கிறாள். ஒரு குழந்தை பசிக்கு அழுகிறதா, தூக்கத்துக்கு அழுகிறதா அல்லது உடல் நோவினால் அழுகிறதா என்பதைத் தாயே அறிவாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தெனாலியின் தந்திரம்

ஒரு முறை ராஜகுருவை தெனாலிராமன் அவமானப்படுத்தி விட்டான் என்ற குற்றச்சாட்டு அரசவைக்குக் கொண்டு வரப்பட்டது. தெனாலிராமனின் எந்தச் சமாதானத்தையும் அரசர் கேட்கத் தயாராக இல்லை. ராமனுக்குத் தண்டனையை அளித்து விட்டார். ராமன் மீது பொறாமை கொண்ட ராஜகுருவும் மன்னனைத் தூண்டி விட்டார். ராஜகுருவை அவமதித்தமை மன்னனையே அவமதித்ததாகும். எனவே அந்தக் குற்றத்துக்கு மன்னிப்பே கிடையாது என்று கூற ராஜகுருவையே தண்டனையளிக்கும்படி கேட்டுக் கொண்டார் மன்னர். ராஜகுரு தண்டனையைக் கூறினார். 'கழுத்து வரை தெனாலிராமனை மண்ணில் புதைத்து விட்டு யானையின் காலால் தலையை இடறச் செய்து கொல்ல வேண்டும்' என்று ராஜகுரு தண்டனையளித்தார். மன்னரும் 'அப் படியே செய்யுங்கள்' என்று ஆணை பிறப்பித்தார். ஆணையை சிரமேற்கொண்ட காவலர்கள் தெனாலிராமனை இழுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றனர். வழியில் இராமன் அவர்களோடு பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். ஆனால் ராஜகுரு காவலர்களை எச்சரித்து தெனாலிராமன் ஏதேனும் பேசித் தப்பிவிடுவான். அதனால் எதுவும் பேசாதீர்கள் என்று கூறியிருந்தார். இந்த எச்சரிக்கை காரணமாக காவலர்கள் எதுவும் பேசாமல் நடந்தனர். ஊரின் எல்லையில் காடு இருந்தது. அங்கே ஒற்றையடிப் பாதை வழியே தெனாலிராமனை காவலர்கள் அழைத்துச் சென்றனர். மக்கள் நடமாட்டமில்லாத அமைதியாக இருந்த இடத்தில் ஒரு பெரிய பள்ளம் தோண்டினார்கள். தெனாலிராமனை அந்தப் பள்ளத்தில் இறக்கி கழுத்தளவு மண்ணால் மூடி விட்டு யானையைக் கொண்டு வர அரண்மனைக்குச் சென்று விட் டார்கள். தெனாலிராமன் தப்பிச் செல்ல வழியறியாது திகைத்து மண்ணுக்குள் தவித்துக் கொண்டிருந்தான். சற்று தூரத்தில் ஒற்றையடிப் பாதை வழியாக யாரோ வருவது தெரிந்தது. 'அய்யா!' தெனாலிராமன் பெருங் குரலெடுத்துக் கூவி அழைத்தான். அந்த மனிதன் ராமனின் குரல் கேட்டு மெதுவாக அச்சத்துடன் அருகே வந்தான். அவனைப் பார்த்த ராமன் 'பயப்படாதீர்கள். அருகில் வாருங்கள்.' என அழைத்தான். வந்தவன் தனது முதுகில் இருந்த துணி மூட்டையைக் கீழே இறக்கி வைத்து விட்டு ராமனின் முகத்தருகே அமர்ந்தான். 'யாரையா உம்மை மண்ணுக்குள் புதைத்தது?' என்றான்.

ராமன் வந்தவனின் முதுகைப் பார்த்தான். அவன் துணி துவைப்பவன். மூட்டை சுமந்து சுமந்து அவன் முதுகு வளைந்து கூனலாகியிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டான். சட்டென சமயோசிதமாய்ப் பேசினான் ராமன். 'அய்யா! நானும் உம்மைப் போல கூனலாக இருந்தேன். ஒரு பெரியவர் என்னிடம் ஒரு நாள் முழுவதும் மண்ணுக்குள் புதைந்திருந்தால் கூன் நிமிர்ந்து விடும் என்று கூறினார். நான் காலை முதல் மண்ணுக்குள்ளேயே இருக்கிறேன். என்னைத் தூக்கி விடும் எனது கூன் நிமிர்ந்து விட்டதா என்று பார்க்க ஆசையாக இருக்கிறது' என்றான். கூனனும் ராமனை வெளியே எடுத்து விட்டான் ராமன் தனது கூனல் நிமிர்ந்து விட்டதாக மகிழ்ச்சி கொள்வது போல நடித்தான். அதை உண்மையென நம்பிய கூனனாகிய துணி துவைப்பவன் தன்னையும் மண்ணில் புதைத்து , தனது கூனலும் நிமிர வழி செய்யும் படி வேண்டிக் கொண்டான். தெனாலி ராமனும் அவனைக் குழிக்குள் இறக்கி கழுத்துவரை மண்ணால் மூடிவிட்டுத் தனது வீடு நோக்கிச் சென்றான். யானையுடன் வந்த காவலர்கள் தாங்கள் விட்டுச் சென்ற இடத்தில் ராமனுக்குப் பதிலாக வேறொருவன் இருப்பதைப் பார்த்துத் திகைத்தனர். அந்தக் கூனனை அழைத்துக் கொண்டு மன்னரிடம் சென்று ராமனின் தந்திரத்தைக் கூறினர். ராமனின் திறமையைக் கண்டு அவனை மன்னித்து விடுதலை செய்தார் மன்னர்.





சிறுவர் மற்றும் இளவல் பக்கத்துக்கு வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

# வாழத் தெரிந்துகொள்ளுங்கள்



ஒதுங்கி ஒதுங்கி வாழ்வதுதான் வாழ்வா? தேக்க முற்ற விதத்தில் நாளை என்னும் கனவில் வாழ்வதுதான் வாழ்வா? எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி வைப்பது தான் வாழ்வா? இல்லை, எப்போதும் செயல் புரிந்து கொண்டிருப்பது தான் வாழ்க்கை, நதி போல ஓடிக் கொண்டிருப்பதே வாழ்க்கை. பலர் வாழ்க்கையை பதுங்கிக்கொள்ளும் இடமாகவே வைத்திருக்கின்றனர். ஓடிக்கொண்டிருப்பதில் தான் உத்வேகமும், உற்சாகமும் இருக்கும். புத்துணர்ச்சியும் புது வேகமும் இருக்கும். செயல்படத் தயங்குகிறவர்கள் அவைகளையெல்லாம் அலைச்சல்களாக நினைத்து அடங்கியிருக்கிறார்கள். எதிலும் ஆர்வமில்லை, எதையும் தேடிப் போக மனமில்லை, அதுவாக வரட்டும் பார்க்கலாம் என்று அமர்ந்திருந்தால், அப்படி எதுவும் வந்துவிடாது, எதற்கும் சோம்பல், எதைச் செய்யவும் ஆர்வமின்மை இவைகளுக்கெல்லாம் காரணம் மனத்தளர்வு. அப்படி என்ன தான் கிடைக்கப் போகிறது என்ற சலிப்பு, இப்படி தன்னம்பிக்கையில்லாமல் முன்னோக்கி நடக்காமல் பின்னோக்கி நடப்பவர்கள் விழித்துக் கொள்ளுங்கள், எதுவும் தானாக வருவதில்லை, எதையும் நாம்தான் கொண்டு வர வேண்டும் என்பதை நம்புங்கள். வாழ்வு என்பது ஒரு துடிப்பு, வாழத் துடிக்கிறவனே வாழக் கற்றுக்கொள்கிறான், எதிலும் எதிர் நீச்சல் போடுகிறான். உங்களுக்குள்ளே ஒரு துடிப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள், வாழ வேண்டும், முன்னேற வேண்டும் என்ற துடிப்பு ஏற்படும்போது தயக்கம், சோம்பல் எல்லாம் காணாமல் போய் விடும். செயல்களில் எளிதானது, கடினமானது என்று எதுவும் கிடையாது, நாம் அதை எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதில்தான் இருக்கிறது, எனவே சோர்வு, அலைச்சல் என்று எடுத்துக் கொள்ளாமல் ஓடிக்கொண்டிருங்கள்.

வெற்றியில் கிடைக்கும் மகிழ்ச்சியை விட அந்த வெற்றியை நோக்கி ஓடுவதில்தான் அதிக மகிழ்ச்சி இருக்கிறது. மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் ஒரு செயலைச் செய்ய வேண்டுமானால், அடுத்தவர்களின் தூண்டுதல்களினால் இல்லாமல் எமக்குள்ளிருந்து ஏற்படும் உந்துதலினால் செயல்பட வேண்டும். உள்ளுணர்வுகளின் தூண்டுதல்களை போன்ற வல்லமை வெளியே வேறு எங்கிருந்தும் கிடைப்பதில்லை, எந்தத் திடமான முடிவும் நம்மிலிருந்துதான் ஆரம்பிக்கப் படவேண்டும்.



வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களெல்லாம், நம்மை உருவாக்கவே ஏற்படுகின்றன. அதில் சோர்ந்து போகாமல் அதிலிருந்து புதிய பாடத்தை, புதிய வழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு ஒரு வழியல்ல பல வழிகள் உள்ளன. நாம் காணும் துன்பங்கள்தான் நமக்குப் புது வழியைக் காட்டித்தருகின்றன. அதே துன்பத்தில் துவண்டு போனோமானால் எல்லா வாசல் களும் அடைக்கப்பட்டு விடும். அங்கேதான் பல தற்கொலைகளும் நிகழுகின்றன. எனவே துவண்டு விடாமல், எமது உள்ளுணர்வுகளால் உலகை வெல்வோம். விலகியிருந்து பார்க்கும்போது எல்லாமே, சிக்கல் நிறைந்ததாகவே தெரியும். துணிவோடு புகுந்து சென்றால் வானமும் தொட்டுவிடும் தூரத்தில்தான் இருக்கும். எனவே எதற்கும் தயக்கம் வேண்டாம். அஞ்சாமல் புறப்படுங்கள்.

வாழ்வை நேசியுங்கள், உங்களை நேசியுங்கள், வாழ்க்கை உங்கள் உள்ளங்கைக்குள் அடங்கி நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவைகளில் மத்தியும் மாகாணமும் பிரியமுடியாது

ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக் .13
சுகாதாரம் கல்வி உள்ளிட்ட விடயங்களில் மாகாண சபையும் மத்திய அரசும் பிரிந்து செயற்பட முடியாது. எனவே அரசின் கொள்கையின் அடிப்படையில் சகல தரப்பினரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நீர்கொழும்பு பொது வைத்திய சாலையில் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலவசக் கல்வி, இலவச சுகாதாரம் என்பனவற்றுக்கு அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது. இவற்றுக்கு அரசும் அதிகளவு நிதியை ஒதுக்கியுள்ளது போன்று நாட்டு மக்களுக்குச் சிறந்த சுகாதார வசதியும் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியும் வழங்க வேண்டியது அரசின் நோக்கம்– என்றார்.

மற்றொரு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அடுத்த மூன்று வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள தேசிய மர நடுகை திட்டத்தின் ஊடாக தற்போது நாட்டில் 29 வீதமாக இருக்கும் வன அடர்த்தியை 32 வீதமாக அதிகரிக்கப்படும் என்றும் இதற்கு அரசியல்வாதிகள் உட்பட எல்லோரினதும் ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

மரம் ஒன்றை வெட்டுவது ஒரு மனித உயிரை கொல்வதற்கு சமனானது என்றபோதும், இந்த நாட்டில் உள்ள பல்வேறு வியாபாரிகள் பணம் குறித்து மட்டுமே சிந்தித்து நாடு மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்து எவ்வித கரிசனையும் இன்றிச் சுற்றாடலை அழித்து தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களுக்குச் சவாலாக அமையும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் கடுமையான சட்டங்கள் பிரயோகிக்கப்படும்.

இயற்கையைப் பாதுகாப்பது ஒவ்வொருவரினதும்கடமையும்பொறுப்புமாகும்.கடந்த சில வருட காலப் பகுதியில் இலங்கையில் வனவளங்கள் மிகவேகமாக அழிவுக்குட்படுத்தப்பட்டுள்ளது. வன வளங்களின் குறிப்பிட்ட அளவாவது பாதுகாக்கப்பட்டிருப்பது போர் நடைபெற்ற வடக்கு–கிழக்குப் பகுதிகளிலேயாகும்.

அபிவிருத்தியும் தொழில்நுட்பம் உலகுக்கு பல்வேறு விடயங்களைக் கொண்டு வந்துள்ளபோதும் மறுபக்கத்தில் இயற்கையை அழிவுக்குட்படுத்துவதற்கு அவை வழிவகுத்துள்ளது. இயற்கை வளங்களை பாதுகாப்பது மனிதர்கள் உட்பட ஏனைய ஜீவராசிகளின் இருப்புக்கு மிக அவசியமான விடயமாகும் என்பதோடு, சூழலை அழிப்பது என்பது உலகில் உள்ள உயிரினங்களை அழிப்பதற்கு சமன் – என்றார். (த–4)

## வயதானவர்களைக் கூட நாங்கள் நம்பமுடியாத காலகட்டம் இது

மகளிர் அமைப்பின் தலைவி சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஒக் .13
அப்பப்பாவை கூட நம்ப முடியாத காலகட்டம் தற்போது எங்களுடைய பெண் சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ளது. நாங்கள் 90ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து அனுபவித்ததை விட தற்போது இந்த இளம் சமுதாயம் சீரழிவதை எங்களால் தாங்க முடியாமல் உள்ளது என்று தெரிவித்தார் பூந்தளிர் மகளிர் அமைப்பின் தலைவி யூலியஸ் செல்வமலர்.

யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மீள்குடியேற்றம், குடும்பத்தைத் தலைமைத்துவமாக கொண்ட பெண்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடலின்போது கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்.
நாங்கள் 1990 ஆண்டு இடம்பெயர்ந்து 26 வருடமாக நலன்புரி நிலையங்களில் எங்களுடைய காலங்களைக் களித்துக் கொண்டிருக்கின்றோம். அதிலும் என்போன்றவர்களும் மற்றும் இளம் பெண்களும் தங்களுடைய கணவனை இழந்து நலன்புரி நிலையங்களிலும் வேறு இடங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தப் போலியான சமுதாயத்தின் மத்தியில் நிறைய கொடூரமான விடயங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். அதைவிட இப்போது 5 வயது பெண்பிள்ளைக்குக் கூட எங்களுடைய சமுதாயத்தில் வாழ்வதற்கு பாதுகாப்பு இல்லை. பெற்ற பிள்ளை தகப்பனுடன் நம்பி நடமாட முயாத காலநிலையில் நாங்கள் இப்போது வாழ்ந்து வருகின்றோம். போர்க்காலச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட சம்பவங்கள் மிக குறைவாகவே இருந்தன. ஆனால் இப்போது போர் முடிவுற்றுச் சுமுகமான நிலையிலே எமது சமுதாயம் நிறையப் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

ஒரு பிள்ளையை ஓட்டோவில் படிக்க அனுப்பினால் அந்த பிள்ளை இரண்டு நாள்கள் ஓட்டோவில் போகும் மூன்றாம் நாள் பிள்ளையின் நிலைப்பாடு மோசமானதாகத் தான் வரும். வயதுபோன ஐயாவிடம் பிள்ளையைப் பாடசாலையில் இறக்கி விடுங்கள் என்றால் ஐயா வேறு இடத்திற்குக் கொண்டு செல்கின்றார். இப்போது அப்பப்பாவைக் கூட நம்ப முடியாத காலகட்டம். எனவே அரச அதிகாரிகளிடம் நாங்கள் கேட்டு கொள்வது எங்களுடைய காலம் முடிவடைந்து விட்டது. இனி வளர்ந்து வருகின்ற எங்களுடைய சிறுவர்களுடைய காலங்களிலாவது அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தி குற்றவாளிகளுக்கான தண்டனைகளை உடனடியாக வழங்க வேண்டும்– என்றார். (த–21–ரி5)

## விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய பொருள்களை ஏற்றுமதி செய்ய விரும்புபவர்களுக்கான விசேட கருத்தரங்கு யாழ். வணிகர் கழகத்தில் நாளை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள் ளது. இந்தக் கருத்தரங்கில் சந்தைப்படுத்தல் உத்தி தொடர்பான தெளிவூட்டு தலை ஏற்றுமதி தொடர்பான அரச அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கி உட்பட ஏனைய வங்கி அதிகாரிகளும் வழங்கவுள்ளதாக யாழ். வணிகர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (த–ரி5)

## தாஜூதீனின் சாவு தொடர்பில் மௌனம் சாதிக்கிறது சி.ஐ.டி.

கொழும்பு, ஒக் .13
றக்பி விளையாட்டு அணியின் முன்னாள் தலைவரான வசிம் தாஜுதீனின் கொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் பற்றிய தகவல்களை வெளியிடக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ( சி.ஐ.டி.) மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

தாஜுதீனின் கருகிய உடல் கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி கொழும்பு – நாரஹேன்பிட்டி, கிருல வீதியிலுள்ள சாலிக்கா மைதானத்தில் நின்ற அவரது காருக்குள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அது திட்டமிட்ட ஒரு கொலை எனத் தெரிந்தும் நாரஹேன்பிட்டி பொலிஸார் அது தொடர்பில் பூரண விசாரணையை மேற்கொள்ளவில்லை.

ராஜபக்ஷ அரசில் ஏதோவொரு காரணத்துக்காக மூடி மறைக்கப்பட்ட இந்தச் சம்பவம் 2015இல் அந்த அரசின் தோல்வியையடுத்து கிளறி எடுக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. வசிம் தாஜுதீனின் ஜனாஸாவும் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய தோண்டி எடுக்கப்பட்டு பரிசோதனையின் பின்னர் மீண்டும் புதைக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தாஜுதீனின் தொலைபேசியின் பதிவுகள்தொடர்பில்கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தயாரித்திருந்த அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், அன்று முதல் இன்றுவரை அந்தத் தொலைபேசியிலிருந்த பதிவுகள் தொடர்பான விவரங்களையோ அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவுகளையோ குற்ற விசாரணைத் திணைக்களம் வெளியிட மறுத்து வருகின்றது.

எனினும், இவ்வழக்கு இம்மாதம் 22ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும்வரை தொலைபேசிப் பதிவுகள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படமாட்டாதென குற்றப்புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த–சி)

## வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு ஹெரோயின் வழங்கியவர் கைது

கொழும்பு, ஒக் .13
வெலிக்கடைச் சிறைச்சாலைக் கைதிகளுக்கு நீண்ட காலமாக ஹெரோயின் விநியோகித்து வந்த தெமட்டகொட குடு லஹிரு' எனும் நபர் நேற்றுமுன்தினம் கைதுசெய் யப்பட்டதாகவும் அச்சமயம் அவரிடமிருந்த 20 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாகவும் வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொட பிரதேசவாசியான 29 வயதான இவர் பெருமளவில் ஹெரோயினை விநியோகித்து வந் தவர் எனவும், இதற்கு முன்பும் பல தடவைகள் கைது செய்யப்பட்டவர் எனவும், இவர் மீது ஏற்கனவே கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக் கொன்று நிலுவையில் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (த)

## இலங்கையில் இதுவரை 2,173 பேருக்கு எய்ட்ஸ்

கொழும்பு, ஒக் .13
இலங்கையில் இதுவரை 2 ஆயிரத்து 173 எய்ட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 73 பேர் சிறுவர்கள் எனவும் காலி வைத்தியசாலையின் பால் வினை நோய் விசேட நிபுணர் வைத்தியர் திருமதி தர்ஷணி விஜே விக்கிரம தெரிவித்துள்ளார்.

காலி கடவத்சத்தர பிரதேச சபையில் நடைபெற்ற மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்ட போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

உத்தியோகபூர்வமாக வெளியாகியுள்ள தகவல்களின்படி 2,173 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ள போதிலும் வைத் தியபரிசோதனைகளுக்கு உட்படுத்தப் படாதவர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்தால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடு மெனவும் அது மூவாயிரத்தைத் தாண்டக்கூடு மெனவும் அவர் கூறினார். மேல் மாகாணத்தி லேயே அதிகளவு நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வைத்தியர் தர்ஷணி விஜே [illegible] விடயமென சுட்டிக்காட்டினார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அமைப்பாளர்கள் நியமனம்

கொழும்பு, ஒக் .13
தற்போதுள்ள பலவீனமான தொகுதி அமைப்பாளர்களை நீக்கிவிட்டுப் புதியவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மேற்கொண்டுள்ளதாக அந்தக் கட்சியின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சியைப் புனரமைப்பதற்காக அந்தக் கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழு நியமித்துள்ள புனர்நிர்மாணக்குழு அண்மையில் கட்சி யின் தலைமையகத்தில் கூடியபோது இவ்வி டயம் தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டதாகவும் அதன்படி தற்போதுள்ள பலவீனமான தொகுதி அமைப்பாளர்களை நீக்கிவிட்டுத் திறமை வாய்ந்த புதியவர்களை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

புதிய நியமனங்கள் தொடர்பான அறிக்கை விரைவில் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி யுமான மைத்திரிபால சிறிசேனவுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிமுதல் கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகள் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

**வாடகைக்குத் தேவை**
யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:
077 349 5801 (C/18777) (10.17)

**வாடகைக்குத் தேவை**
சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் விரும்பத்தக்கது.
(65460)(10.17) தொடர்பு: 077 0781 818

**வீடு வாடகைக்குத் தேவை**
சிறிய குடும்பம் ஒன்றிற்கு வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய வீடு யாழ் மாநகரசபை எல்லைக்குள் தேவை.
தொடர்பு : 077 200 2425










**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 06.10.2015 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நல்லாசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை செல்வி
**இராசதுரை மாலினி**
அவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பல சிறப்புக்களைப் பெற வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்
மு/அளிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம், யோகபுரம்.
(65252)(10.17)

# கிளாலியில் வயற் காணிகளை கடற்படை அபகரிக்க முயற்சி

### *காணி அளவிடும் பணிக்குக் கடும் எதிர்ப்பு*

கிளிநொச்சி, ஒக். 13

விதைக்கப்பட்டிருந்த வயல் நிலக் காணிகளை அளப்பதற்காகச் சென்ற நில அளவைத்திணைக்களத்தினர் மக்களின் எதிர்ப்பை அடுத்து அளவீடு செய்யாமல் வெளியேறினார்கள்.

கிளாலி யாகப்பர் தேவாலயத்துக்கு மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணிகளை கிளாலிக் கடற்படையினர் முகாம் அமைக்கும் நோக்கோடு நேற்று நில அளவைத் திணைக் களத்தினருடன் கிராம அலுவலர் முன்னிலையில் அளவீடு செய்ய முற்பட்டுள்ளனர்.

இதனை எதிர்த்த கிராம மக்கள் பங்குத்தந்தையுடன் இணைந்து எதிர்ப்பைத் தெரிவித்தனர். காணி கோயிலுக்கு என வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காணியை அளவீடு செய்ய விடமாட்டோம் எனத் தெரிவித்தனர்.

அங்கு வருகை தந்திருந்த கிளாலிக் கடற்படை அதிகாரி பங்குத்தந்தையுடன் உரையாடினார். ஆயருடன் கலந்துரையாடி ஆயர் சம்மதம் தெரிவித்தால் நீங்கள் காணியை அளவீடு செய்யலாம் எனப் பங்குத் தந்தை கடற்படை அதிகாரியிடம் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக் கொண்ட கடற்படை அதிகாரி ஆயரிடம் உரையாடி முடிவைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்து அளவீட்டுப் பணிகளை நிறுத்திச் சென்றார்.

இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கு பெருமளவானமக்கள்கலந்துகொள்கின்றமை இந்த ஆலயத்தின் சிறப்பம்சமாகும். வருகின்றவர்கள் தங்கி இருப்பதற்காகவே ஆலயத்துக்குக் காணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

கடந்த வருடம் இந்த வயல் நிலங்களை விதைப்பதற்கு தடை காணப்பட்டதாகவும், இந்தமுறை விதைக்கப்பட்ட காணிகளையே அளவீடு செய்ய அதிகாரிகள் வருகை தந்ததும் குறிப்பிடத்தக்கது. (த-ரி3)

# வழக்குகளைத் துரிதப்படுத்த புதிய சட்டம் அறிமுகமாகும்

### *நீதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 13

வழக்கு விசாரணைகள் நீண்ட காலங்களுக்கு தாமதமாவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைப்பதற்காக வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கான புதிய சட்டவரைவொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் சிவில் வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கான புதியசட்டவரைவொன்று விரைவில் வரவுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வழக்குகள் தாமதமாவதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாகவும் இந்த நிலை நீடித்தால் அவர்களுக்கு அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கை சிதறிப்போய்விடும் என்பதால் இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (த-சி)

# மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை; விரைவில் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக் .13

காலி கடலில் நங்கூரமிட்டிருந்த சர்ச்சைக்குரிய அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக்களஞ்சியசாலைதொடர்பில் எதிர்வரும்சிலதினங்களுக்குள் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள் ளது.

ஆயுதக்களஞ்சியசாலைதொடர்பில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை பாதுகாப்பு அமைச்சிற்கு கிடைத்துள்ளது என்று அமைச்சின் செயலாளர் கருணா ரட்ன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்ட விசேட குழுவால் இந்த வாரத்துக்குள் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகின்றார்.

உரியதிட்டங்களுக்குஅமையகளஞ்சியசாலை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என கடற்படையினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகஅவர் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

# இரண்டு மீனவர்கள் கரை திரும்பவில்லை

கரணவாய், ஒக். 13

பருத்தித்துறைப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச்சென்றஇருவர்கரைதிரும்பவில்லை என அவர்களின் உறவினர்களால் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த செ.செல்வநிசாந்தன் (வயது 27), பருத்தித்துறை இன்பர்சிட்டியைச் சேர்ந்த பு.ரூபதாஸ் (வயது 46) ஆகிய இருவருமே இவ்வாறு கடற்றொழிலுக்குச்சென்றுஇதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இவர்கள் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-108)

# கைப்பற்றப்பட்ட தங்க நகைகளை உரியவர்களிடம் வழங்கப் பணிப்பு

### *வல்லிபுரக் கோயில் திருவிழாவில் திருட்டில் ஈடுபட்டவர்களிடமிருந்து*

கரணவாய், ஒக். 13

வல்லிபுரக் கோயில் திருவிழாவில் திருடப்பட்டுக்கைப்பற்றப்பட்ட நகைகளை உரியவர்களிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா. கணேசராசா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழாவின்போது பக்தர்களிடமிருந்து களவாடப்பட்ட 60 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டதுடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 5 பெண்கள் உட்பட 7 பேர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பின்னர் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைநேற்றுப்பருத்தித்துறைநீதிமன்றில் இடம்பெற்றது. இதன்போது குறித்த சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்குமாறு அவர்கள் சார்பான சட்டத்தரணியால் விண்ணப்பிக்கப்பட்டது.

அந்த பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மாவட்ட நீதிவான் அவர்களைத்தொடர்ந்து 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதோடு கைப்பற்றப்பட்ட தங்க நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டார். (த-108)

# பூநகரியில் காணி அளவீட்டை எதிர்த்து மக்கள் போராட்டம்

### *நாளை நடத்தத் தீர்மானம்*

கிளிநொச்சி, ஒக். 13

பூநகரிப் பழைய வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள 16 தனியாருக்குச் சொந்தமான 27 ஏக்கர் காணிகளை அப்பகுதியிலுள்ள இராணுவத்தினர் தமது தேவைகளுக்காகச் சுவீகரிப்பதற்காக அளவீடு செய்வதை எதிர்த்து அப்பகுதி மக்கள்போராட்டத்தில்ஈடுபடவுள்ளனர்.

இந்தப் போராட்டம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது தமது சொந்தக் காணிகளைத் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என வலியுறுத்தி அப்பகுதி மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

பூநகரி பழைய வைத்தியசாலைப் பகுதியிலுள்ள மக்களது காணிகளை இராணுவத்தினர் அளவீடு செய்து பெற்றுக்கொள்வது தொடர்பில் பிரதேச செயலர் உட்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-426)


17 ஆம் ஆண்டு நினைவு அகவையில்



அமரர் சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

மலர்வு 22.10.1978

உதிர்வு 13.10.1998

பிள்ளை முகம் பாராமல்
பூ விரியும் சோலையிலே!
பூத்த மகள் நீயம்மா!!
புன்னகையின் சாரலிலே!
பொங்குமெழில் சேயம்மா!!

திங்கள் முகத்தாமரையே!
தேன் சொரியும் தேவதையே!!
பங்கமிலாப் பால்நிலவே!
பாசமலர்ப் பூங்கொடியே!!

பொற்சிலையே! பூந்தளிரே!!
பூத்தமலர்க் கொடிய ழகே!
போதவிழும் மல்லிகையே!!
பூச்சரமே! சித்திரமே!!

பிள்ளைமுகம் பாராமல்
இல்லையொரு சுகமிங்கே!!
பேசுமொழி கேளாமல்
இல்லையொரு துயரிங்கே!!

வாடுகிறோம் துயர்மிகுந்து!
வாழுகிறோம் உமை நினைந்து!!
உறவுகள்

(e18416) (14,16,17)



கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்
பு.காந்தரூபன் அவர்களின் மாமன்
கணபதி முருகுப்பிள்ளை
அவர்கள் நேற்று (12.10.2015)
காலமானதையிட்டு அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.



முகாமையாளரும், ஊழியர்களும்.
இலங்கை வங்கி, மானிப்பாய்.

(65459)


# எக்னெலிகொட வெலிகந்தவில் அடக்கம் செய்யப்பட்டாரா?

கொழும்பு, ஒக். 13

பிரபல ஊடகவியலாளர் பிரகித் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் வெலிகந்த பிரதேசத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது வலுப்பெற்றுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இராஜகிரிய பகுதியில் வைத்து பிரபல ஊடகவியலாளர் பிரகித் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

இதன்போது கடத்திச் செல்லப்பட்டிருந்த அவர் முதலாவதாக கிரிதல புலனாய்வுப் பிரிவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுச் சில நாள்கள் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டதன் பின்னர் வெலிகந்த பிரதேச இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வு பிரிவினால் இதுவரையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள புலனாய்வாளர்களிடம் முன்னெடுக்கப்பட்டிருந்த விசாரணைகளின் மூலம் குறித்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சந்தேக நபர்களை கிரிதல இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று முன்னெடுக்கப்பட்டிருந்த விசாரணைகளின் மூலம் குறித்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே பிரபல ஊடகவியலாளர் பிரகித் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் வெலிகந்த் பிரதேசத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சிரேஸ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவ அதிகாரிகள் 11 பேர் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணப்பெண் கடத்தல்; மேலும் ஒருவர் கைது

வடமராட்சி, ஒக். 13

உடுப்பிட்டி பகுதியில் மணப்பெண் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவரை நேற்று மாலை வரணிப் பகுதியில்வைத்துக்கைதுசெய்ததாகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையில்மேலும்இருமோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டதாகவும்வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். வடமராட்சி உடுப்பிட்டி பகுதியில் திருமணம் நடக்கவிருந்த நிலையில் மணப்பெண்ணின் வீட்டுக்குள் ஆயுதங்களுடன்அத்துமீறிபுகுந்த கும்பல்மணப்பெண்ணைக்கடத்திச் சென்றதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டுவிசாரணைகளை மேற்கொண்டபொலிஸார்எட்டுசந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். இதில் இவர்கள் கடத்தலுக்குப் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கும் மோட்டார்சைக்கிள்கள் இரண்டையும் பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றியிருந்தனர். இந்த நிலையில் நேற்றும் விசாரணைகளை தொடர்ந்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவரை நேற்று மாலை வரணிப் பகுதியில் வைத்து கைது செய்ததாகவும், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் இரு மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப் பட்டதாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

(த-109)

# இந்த வருடத்தில் 4,500 காச நோயாளர்

கொழும்பு, ஒக். 13

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4,500 காச நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அநேகமான நோயாளர்கள் மேல்மாகாணத்தின்கொழும்புமற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே இனங்காணப்பட்டுள்ளதாக காச நோய் மற்றும் ஒழிப்புத் திட்டத்தின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.


சுவாச நோய்களைப்பரிசோதனை செய்வதற்கு நாடு முழுவதும் சுமார் 160 நிலை யங்கள் அமைக் கப்பட்டுள்ளதாக வும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிலையங்களுக்கு சென்று மக்களால் பரிசோதனைகளை செய்து கொள்ள முடியம் என காச நோய் மற்றும் ஒழிப்புத் திட்டத்தின் உதவிப் பணிப்பாளர்மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையங்களுக்கு செல்ல முடியாத பட்சத்தில் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதனை நடவடிக்கைகளைமேற்கொள்ள முடியும் எனவும் காச நோய் மற்றும் ஒழிப்பு திட்டத்தின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (த)

## மரண அறிவித்தல்

### செல்லையா ஜெயராசா



கரவெட்டிகிழக்கு, கிழவி தோட்டத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஜெயராசா 12.10.2015 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லையா (கரவெட்டி செல்லையா) சின்னமணி தம்பதியிரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் தேவமாலினி (லண்டன்), மோகனராஜ் (கரவெட்டி), கோபாலநந்தினி (அமெரிக்கா), ஆகியோரின் அன்புத் தந்தையும் நிவேதிகா, திவின், ஆயுஷன்,ரிஸ்திகா,அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் நிமலன் (லண்டன்), ரேவதி(ஆசிரியை யா/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை), சிவபோகரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனும், செல்வராசா (சுவிஸ்), ஜெயராணி (வவுனியா) செல்வராணி (முரசுமோட்டை), சுவேந்திரன்(லண்டன்), ரவீந்திரன் (பிரான்ஸ்), சுவேந்திரகுமாரி(முரசுமோட்டை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜநாயகம்(ஓய்வுநிலை அதிபர்), இராஜகோபால் (கனடா),சிவநேசம்(கனடா), தேவந்திரம்(ஓய்வுநிலை அதிபர்), இராஜலஷ்மி(சுவிஸ்), விஜயா(லண்டன்), கலைமகள்( பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2015) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை,உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
021 321 0369

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிரன் செல்லையா (பெரியண்ணை)



கொக்குவில் மேற்கு, பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் செல்லையா (பெரியண்ணை நேற்று (12.10. 2015) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான விசுவர்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அமுதா மற்றும் சிவானந்தன், விஜயா (பிரான்ஸ்), கீதா, கவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரசேகரன், ரவிக்குமார் (பிரான்ஸ்), சுதகலா, ஸ்ரீகரன் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கர்ஜினிகா (பிரான்ஸ்), சாருஜா, சுகியான்ஸ், சாஜகான்ஸ் காலஞ்சென்ற அகிலஜன் மற்றும் வைஸ்ணவி, சரண்யா, இந்துஜன், அகில், ரஷ்வின் (பிரான்ஸ்), லருஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2015) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(65462)(10.17)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### விசாகரத்தினஐயர் சிவனேசம்மா



தொண்டைமானாறு செல்வச்சந்நிதியைப் பிறப்பிடமாக கொண்ட விசாகரத்தினஐயர் சிவனேசம்மா 10.10.2015 கனடா மொன்றியலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாகரத்தினஐயரின் (பிரதம பூசகர்- செல்வச்சந்நிதி ஆலயம்) அன்பு மனைவியும், வி.நாகேந்திரன் (கனடா), வி.தெய்வேந்திரஐயர் (பிரதமகுரு-செல்வச்சந்நிதி தொண்டைமானாறு), காலஞ் சென்ற கு.தேவாம்பிகை மற்றும் வி. இராசேந்திரம் (கனடா), வி.விஜேந்திரன் (கனடா), பா.விம லாம்பிகை (கனடா), வி.யோகேந்திரம் (கனடா), வி.லோகேந் திரன் (கனடா) ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2015 புதன்கிழமை கனடா மொன்றியலில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.தெய்வேந்திரஐயர்
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

(65457) (10.17)

### கந்தையா கருணாகரன்



(USHA Sales executive and quality controller)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் பொற்கலந்தம்பையை நிரந்தர வசிப்பிடமாக வும், கொல்லங்கலட்டி மற்றும் புத்தளத்தில் வசித்தவருமாகிய கந்தையா கருணாகரன் நேற்று (12.10.2015) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- கனகபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கதிரவேலு (Railway Guarator)- சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெய ராணியின் அன்புக் கணவரும், அகிலா (ஜேர்மன்), குமரன், நகுலா (ஆசிரியை, நீல பெம்ம சாலிய வெவ), அகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேஷ்குமார் (ஜேர்மன்), ரீட்டா ஆகியோரின் பாசமிகு மாமனும், கிருஷ்ணா, தேவேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும், கனகாங்கி, காலஞ்சென்றவர்களான கிருபாகரன், தனகரன் மற்றும் தவகரன், மோகனாங்கி, தினகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற செல்வமாணிக்கம் மற்றும் காராளசிங்கம், காலஞ்சென்ற மணிமேகலை மற்றும் அற்புதராணி, செல்வராணி, ரவீந்திரன், யோகேந்திரன், காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் தவராணி ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் (பொற்கலந்தம்பை, வித்தகபுரம்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கொப்பிலாவிடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்கலந்தம்பை,
வித்தகபுரம், தெல்லிப்பழை.
(65463) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.
0777667749, 0775100789

### ராஜ்மோகன் நந்தினி



இராமநாதன் லேன் இருபாலையைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜ்மோகன் நந்தினி நேற்று (12.10.2015) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான தருமலிங்கம்-நல்லம்மா தம்பதியரின் மகளும், யோகராசா- சுசிலாதேவி தம்பதியரின் மருமகளும், ராஜ்மோகனின் அன்பு மனைவியும், கிருஷண், ஹரிசன் ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியசீலனின் பாசமிகு சகோதரியும், ராகினி, கணேஸ்- சுகிதா, பாலன்-ரேகா, மதன்- சுமிதா, குலன்-ஜெனி ஆகியோரின் மைத்துனியும், சிம்பு, பர்வி, சனோ, கபில் ஆகியோரின் பெரிய தாயும், கார்த்திகா, கார்த்திகன், வித்யா, தமினா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜ்மோகன் (கணவர்)
0041799052243 (சுவிஸ்)
0041799566281 (வீடு)
சீலன் (அண்ணா)
0041763450944 (சுவிஸ்)
இலங்கை 021 2230812 (வீடு) (65464) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதிகள் உணவு

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதி நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்சவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறைச்சாலைகளில் உள்ள தமிழ்க் கைதிகள், தங்களை நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருப்பதை வெளிப்படுத்தும் முகமாக இன்று (நேற்று) உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார்கள். கடந்த காலங்களில் இடம்பெற்றதைப் போன்று, இந்த உண்ணாவிரதத்தை சிறைச்சாலை அதிகாரிகள் கடுமையான முறையில் கையாளக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

விசாரணைகளின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள துரதிர்ஷ்டவசமான மனிதர்களின் இந்தப் பிரச்சினையானது, ஒரு மனிதாபிமான விடயமாகும். எனவே, இரக்கத்துடனும், அனுதாபத்துடனும் இந்த விடயம் அணுகப்படவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்தப் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுப்போம் என்று உறுதியளிக்கப்பட்டால், திருப்தியடைவார்கள் என்று நான் நம்புகிறேன் என்று முதலமைச்சர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆலோசனை

மேலும் முதலமைச்சர் இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்படக் கூடிய முன் வைத்துள்ளார்.

என்ன காரணத்துக்காக இவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அவர்கள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களை வகைப்படுத்திப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கலாம். இதனை ஒரு வார காலப் பகுதியில் செய்து முடிக்கலாம்.

தகவல் தெரிவிக்கவில்லை என்பது போன்ற சிறிய குற்றங்கள் செய்தார்கள் என்பதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கலாம். அல்லது அவர்களை உடனடியாகப் பிணையில் செல்ல அனுமதிக்கலாம்.

வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் உள்ள, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வருவதாக சந்தேகிக்கப்படுகின்ற அனைத்துக் கைதிகளுக்கும், உரிய வகையில் பிணை வழங்கலாம்.

நீண்ட காலமாக வழக்குத் தாக்கல் செய்யாமல், வெறும் சந்தேகத்தின் அடிப்படையில், ஆட்களைத் தடுத்து வைத்திருப்பது என்பது அவர்களுடைய மனித உரிமைகளை மீறுகின்ற செயலாகும்.

சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் பொலிஸாருக்கும் குறிப்பிட்ட காலப் பகுதியில் குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்யுமாறு அவசர ஆணையிடலாம். நீண்ட காலமாக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால், நியாயமான முறையில் ஒரு மாதத்திலோ அல்லது இரண்டு மாதங்களிலோ அவர்களுக்கான குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்யலாம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஒரேயொரு சாட்சியத்தின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பவர்கள் மற்றும் அவ்வாறான வழக்கு நிலுவையில் உள்ளவர்களுக்குப் பிணை வழங்கலாம்.

இவ்வாறான ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்டிருப்பதை, சர்வதேசச் சட்டங்களும், சர்வதேச மற்றும் உள்ளூர் வழக்கறிஞர்களும், காலத்துக்குக் காலம் மீண்டும் மீண்டும் முகச் சுழிப்புடன் நோக்கியிருக்கின்றனர்.

தேவையான ஏனைய சாட்சியங்களுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பவர்களுக்குப் போதுமான சட்ட உதவிகளை வழங்கி, முன்னுரிமை அடிப்படையில் அவர்களுடைய வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வரலாம். இதற்கு காலக்கெடு ஒன்ற நிர்ணயிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுடைய வழக்குகளை நாளாந்த அடிப்படையில் விசாரணை செய்யுமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஊடாக நீதிபதிகளுக்குப் பணிப்புரை விடுக்கலாம். அதிகமாகத் தாமதப்படுத்தப்படுகின்ற வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்குப் பிணை வழங்குவதற்கான தெரிவை வழங்கலாம் – என்று தெரிவித்துள்ளார். (த-5-ரி2)

## கைதை

கூட்டியே அறிந்திருந்தார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை, பிள்ளையானிடம் விசாரணை நடத்தி அவரைக் கைது செய்வதற்கான உத்தரவுடன், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மட்டக்களப்பில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

ஆனால், பிள்ளையான் வீட்டில் இல்லை என்று அவரது குடும்பத்தினர் கூறியிருந்தனர். எனினும், பிள்ளையானின் தனிப்பட்ட வாகனம் அப்போது, அந்த வீட்டில் நின்றதால் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் சந்தேகம் கொண்டனர். இதையடுத்து. அவரது வீட்டைச் சுற்றிப் புலனாய்வு அதிகாரிகள் இரகசியமாக நிறுத்தப்பட்டனர்.

இதேவேளை, மட்டக் களப்பில் உள்ள பிள்ளையானின் சகோதரரின் இல்லத்தையும், குற்றப் புலனாய்வு அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை இரவு சோதனையிட்டனர். எனினும், பிள்ளையான் சிக்கவில்லை. தாம் கைது செய்யப்படவுள்ள தகவலை அவர், புலனாய்வு அதிகாரிகள் சிலர் மூலம் முன்கூட்டியே அறிந்தே, இறுதி நேரத்தில் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படும் காட்சிகள் ஊடகங்களில் வெளியாவதைத் தவிர்க்கவே அவர் தலைமறைவாகியதாகவும், தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், பிள்ளையானைக் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு வருமாறு, அவரது குடும்பத்தினரிடம், அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் மாலை 5.25 மணியளவில், பிள்ளை யான் சட்டத்தரணி ஒருவருடன், விசாரணைக்காகக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்துக்கு சென்றார். அவரிடம், குறுகிய நேர விசாரணை நடத்தப்பட்டதையடுத்து, உடனடியாகவே கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நேற்றுமுன்தினம் இரவிரவாக விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை மட்டுமன்றி, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சுட்டுக் கொலை செய்வதற்குப் பயன்படுத்திய துப்பாக்கியும் பிள்ளையானுடையது. அத்துடன் வேறு பல படுகொலைச் சம்பவங்கள் குறித்தும், பிள்ளையானிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன எனக் கொழும்பு செய்திகள் மேலும் தெரிவித்தன. (த-வ)

## விசாரணை

செயற்பாடு தொடர்பில் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதிகள், தமது விடயத்தை மேலும் இழுத்தடிக்கும் வகையில் முதலமைச்சரின் கோரிக்கை அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

தாம் பொதுமன்னிப்புக் கோரியே போராட்டம் நடத்துகின்றோமே தவிர, வழக்கு விசாரணையைக் கோரி அல்ல என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். முதலமைச்சர், ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பி வைப்பதற்கு முன்னர் தம்முடன் கலந்துரையாடி இருந்தால் தமது விடயங்களை அவருக்குத் தெரியப்படுத்தியிருப்போம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ரகுபதி சர்மாவின் விடயத்தை உதாரணமாக எடுத்துக் காட்டிய தமிழ் அரசியல் கைதிகள், 16 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின்னர் அவரது மனைவி விடுவிக்கப்பட்டதும், ரகுபதி சர்மாவுக்கு 300 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையையும் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே நீண்ட காலம் சிறை வாழ்வைக் கழித்து மீண்டும் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடக் கூடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனாலேயே, பொதுமன்னிப்புக் கோருவதாகத் தமிழ் அரசியல் கைதிகள் குறிப்பிட்டதாக, அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (த-5)

## கைதிகள்

கைதிகள் நேற்று முதல் முன்னெடுத்துள்ளனர். நாடு முழுவதிலும் உள்ள சகல சிறைச்சாலைகளிலும் உள்ள 217 அரசியல் கைதிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு ஆதரவாக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துவதற்காக, அரசியல் கைதிகளின் உறவினர்களும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். கொழும்பு கோட்டையில் நாளை மாலை முதலாவது கவன வீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இதன் தொடர்ச்சியாக, வடக்கு – கிழக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## சமஷ்டித்

நிறைவேற்றுவதற்கு நாங்கள் எமது ஆதரவை வழங்குவோம். இது நாட்டின் அடிப்படை நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுத்தப்படும் என நாங்கள் நினைக்கிறோம். அத்துடன் நாட்டில் பாதிக்கப்பட்டு வாழும் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களினதும் சிறந்த நலன்களை உள்ளடக்கியுள்ளதாக நாங்கள் கருதுகிறோம்.

இந்த மக்களுக்குப் புதியதொரு விடிவு என்பது தேவை. இந்தத் தீர்மானமானது முற்றுமுழுதாக இதயசுத்தியுடனும், அர்ப்பணிப்புடனும் நடைமுறைப்படுத்தப்படும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு விடிவைப் பெற்றுக் கொடுக்கும்.

கேள்வி: இவ்வாறான விவகாரங்களை ஆராய்வதற்காகவும், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் சில ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டன. ஆனால் இவ்வாறான உள்ளகப் பொறிமுறைகள் தோல்வியையே அடைந்துள்ளன. ஆகவே, நீங்கள் எவ்வாறு இப்புதிய பொறிமுறையை ஏற்றுக்கொள்கிறீர்கள்?

பதில்: கடந்த காலங்களின் இவ்வாறான உள்ளக ஆணைக்குழுக்கள் தமது நடவடிக்கைகளைத் திருப்தியாகச் செயற்படுத்தவில்லை. இவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தம்மால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஒருபோதும் நிறைவேற்றவில்லை. கடந்த காலங்களில் தாம் விட்ட தவறுகளைக் கற்றுக்கொண்டு தமது தவறுகளைத் திருத்துவதற்கான ஒரு வாய்ப்பாக தற்போதைய தீர்மானத்தை வேறுபட்ட வடிவத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு முன்வரும் என நம்பிக்கை மட்டுமே கொள்ள முடியும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் புதிய தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் அரசு இந்த விடயத்தில் மேலும் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்பதே எனது கருத்தாகும்.

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் முற்றுமுழுதாக அனைத்துலக விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவளிக்காத ஐ.நா தீர்மானம் தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஐ.நா தீர்மானம் தொடர்பில் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனவா?

பதில்: பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் மக்கள் அதிருப்தி கொள்ள முடியும். இது ஒரு விவகாரமல்ல. நாட்டினதும் பாதிக்கப்பட்ட மக்களினதும் சிறந்த நலன்களை அடைந்து கொள்வதற்காக எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதே மிக முக்கியமான விடயமாகும். ஆகவே நாங்கள் இவற்றைக் கருத்திற் கொண்டே செயற்பட வேண்டும். நிறைய எதிர் பார்த்து தற்போது அதனால் அதிருப்தியடைந்துள்ள தனிப்பட்டவர்களின் கருத்துக்களை நாங்கள் கவனத்தில் எடுக்கத் தேவையில்லை. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் ஒருவர் அதிக கவனம் கொள்ள வேண்டும் என நான் நினைக்கவில்லை– என்றார். (த-வ)

## அமெரிக்கத்

செயற்படும் நாடுகளின் அழுத்தங்களுக்கு உலக அமைப்புகள் அடி பணியும் நிலையை உருவாக்கியுள்ளது.

இலங்கையின் சட்டபூர்வமான தேசிய ஆயுதப் படையினர், குற்றவாளிகளா இல்லையா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு பொதுநலவாய நீதிபதிகள் அடங்கிய பொறிமுறையிடம் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த விசாரணை செயற்பாடுகளில் வெளிநாட்டு நீதித்துறையினர் ஈடுபடுத்தப்படுவர். அரசமைப்பின் தற்போதைய பிரிவுகளின் அடிப்படையில் நோக்கும் போது இது அதற்கு முரணானது.

மேலும் இது பயங்கரவாதத்தைத் தோற்கடித்த படையினருக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாகும். குறிப்பிட்ட தீர்மானம் இலங்கையில் ஏற்கனவே காணப்படுகின்ற நல்லிணக்கம் சமாதான சகவாழ்வு, இன ஐக்கியம் என்பவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இதன் காரணமாக குறிப்பிட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதைக் கைவிடுமாறு அரசைக் கோருகின்றோம் என அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர் .(த-வ)

## சிறைகளில்

இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து ஆணையாளர் கோரிக்கையை எழுத்துமூலம் வழங்குமாறு கேட்டு அதனைப் பெற்றுக் கொண்டுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு உடனடியாகவே கொண்டுசெல்வதாக அவர் உறுதியளித்துள்ளார்.

மகசின் சிறைச்சாலையில் 97 தடுப்புக் கைதிகளும் 33 சிறைத் தண்டனைக் கைதிகளும், அநுராதபுரம் சிறைச்சாலையில் 33 தடுப்புக் கைதிகளும் 10 சிறைத் தண்டனைக் கைதிகளும், கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் 13 தடுப்புக் கைதிகளும், சிறைத் தண்டனைக் கைதிகளும், மொனராகலையில் 3 தடுப்புக் கைதிகளும், மட்டக்களப்பில் 5 தடுப்புக் கைதிகளும், பொலநறுவையில் ஒரு தடுப்புக் கைதி மற்றும் ஒரு சிறைக் கைதியும், யாழ்ப்பாணத்தில் 3 தடுப்புக் கைதிகளும்,

நீர் கொழும்பில் 2 தடுப்புக் கைதிகளும், ஒரு சிறைத் தண்டனைக் கைதியும், திருகோணமலையில் ஒரு தடுப்புக் கைதியும், களுத்துறையில் ஒரு தடுப்புக் கைதி, ஒரு சிறைத் தண்டனைக் கைதியும், சீ.ஆர்.பி சிறைச்சாலையில் 4 தடுப்புக் கைதிகளும், மகர சிறைச்சாலையில் ஒரு தடுப்புக் கைதி, ஒரு தண்டனைக் கைதியும், பூசா சிறைச்சாலையில் 4 தடுப்புக் கைதிகளும் இந்தச் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (த-5)

## தென்னாபிரிக்கா

பின்னர், அமைக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவே அரசின் உயர் மட்டக் குழு அங்கு செல்லவுள் ளது.

இலங்கையில் உருவாக்கப்படவுள்ள இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில், மதத் தலைவர்களைக் கொண்ட ஒரு கருணைச் சபையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகளை வழங்குவதற்கான ஒரு குழுவும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு உட்பட்டே காணாமற்போனோரைக் கண்டுபிடிப்பதற்கான நிரந்தர அலுவலகமும் அமைக்கப்படவுள்ளது.

காணாமற்போனோர் குறித்த அலுவலகத்துக்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆலோசனையும் பெறப்படவுள்ளது. இது குறித்த பேச்சுக்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவையும், அதன் கீழ் அமைக்கப்படும் பொறிமுறைகளையும் உருவாக்குவது தொடர்பான சட்டவரைவுகள், அடுத்த ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்துக்கு முன்னதாக, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (த-வ)

## ஞானசாரரை

ளது.

இஸ்லாமியர்களின் புனித குரானை அவமதித்தமை மற்றும் ஜாதிக பல சேனா அமைப்பு நடத்திய ஊடக சந்திப்பின்போது தாக்குதல் நடத்தியமை உட்பட்ட குற்றங்களுக்காகக் கலகொட அத்த ஞானசார தேரர் உட்பட 8 பேருக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஞானசார தேரர் உள்ளிட்ட மூவரும் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. இதையடுத்தே, அவர்களைக் கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வீடியோக்களை ஒரு வருட காலமாகியும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, அறிக்கை சமர்ப்பிக்காதது குறித்தும் பொலிஸாருக்கு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த வழக்கு விசாரணைகள் நவம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-சி)

## அரசியல்

வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலையை வலியுறுத்தி, உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள நிலையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக நீதி அமைச்சுக்குத் தற்போது எந்தப் பொறுப்பும் இல்லை. இந்த விவகாரம் தற்போது சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் கையிலேயே உள்ளது.

இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக அரச மட்டத்தில் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. அரச மட்டத்திலேயே இதற்குத் தீர்வு காணப்படவேண்டும். நீதிமன்றம் இந்த விடயத்தில் தலையிட முடியாது. அதேவேளை தடுப்புக் காவலிலோ – சிறைச்சாலைகளிலோ அரசியல் கைதிகள் என்று எவரும் கிடையாது. தமிழ் அரசியல் கைதிகள் என்று இங்கு யாரும் இல்லை.

கொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டோரே சிறைகளில் கைதிகளாக உள்ளனர். இந்த விவகாரம் சட்ட ரீதியாகவே அணுகப்படவேண்டும். ஐ.நா. அறிக்கையிலும் இந்த விடயம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே அரச மட்டத்தில் இது ஆராயப்படும் – என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் லஞ்சம் கோரிய அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற விடாதீர்கள்

## வெளிவிவகார அமைச்சிடம் இந்தியத் தூதுவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13

கிளிநொச்சியில் இந்திய வீட்டுத் திட்டப் பணிக்காகப் பாலியல் லஞ்சம் கோரிய சம்பவம் தொடர்பில், விசாரணைகளை எதிர்கொள்ளும் அதிகாரிகள் எவரையும், விசாரணைகள் முடியும் வரையில் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக்கூடாது என்று, இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் கோரியுள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில், இந்திய வீடமைப்புத் திட்ட உதவியைப் பெறும் பயனாளிகளிடம், திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளரான செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பாலியல் இலஞ்சம் கோருவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. அத்துடன் இது தொடர்பிலான முறைப்பாடும், கிளிநொச்சியிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் வழங்கப்பட்டது.

மேலும், இது தொடர்பிலான விசாரணைகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகம், இந்தியத்தூதரகம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த விவகாரம் தொடர்பிலான அறிக்கை புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது புதுடில்லியில், வெளிவிவகார தீர்மானங்களை மேற்கொள்ளும் சவுத் புளொக்குக்கு கடுமையான கோபத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் அது இந்த விவகாரத்தைத் தீவிரமாகவும் எடுத்துக் கொண்டுள்ளது. இந்திய வெளிவிவகாரச் செயலரும் இந்த விடயத்தில் கரிசனை எடுத்துக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை எதிர்கொள்ளும் அதிகாரிகள் எவரையும், விசாரணைகள் முடியும் வரையில் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது என்று, இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, வெளிவிவகார அமைச்சிடம் கோரியுள்ளார்.

'அதிகாரிகள் தப்பிச் செல்வதை நாங்கள் விரும்பவில்லை. எனவே வெளிவிவகார அமைச்சு மற்றும் அவர்களின் குடிவரவு அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்துள்ளோம் என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த விசாரணைகளை மேற்கொள்ள எந்தக் காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை என்றும், எனினும், விசாரணைகள் விரைவாகவும், முழுமையாகவும் நடத்தப்படும் என்றும் மற்றொரு இந்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இத்தகையதொரு குற்றச்சாட்டு முதல் முறையாக எழுந்திருப்பதாகவும், இது புதுடில்லியின் மோடி அரசை பெரிதும் சீற்றத்துக்குள்ளாக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)



தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் டென்மார்க் நகரில் உணர்வுபூர்வமாக நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில், இரண்டாம் லெப். மாலதி மற்றும் குமரப்பா – புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைளின் திருவுருவப் படங்களுக்கு ஈகைச்சுடரேற்றி அகவணக்கமும் செலுத்தப்பட்டுள்ளது. (த-5)

# ஊடகவியலாளர்களுக்கு நலன்புரித் திட்டங்கள்

## அமைச்சர் கயந்த கருணாதிலக தகவல்



கொழும்பு, ஒக்.13

ஊடகவியலாளர்களுக்கான விசேட நலன்புரித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கான வீடமைப்புத்திட்டம் தொடர்பில் அமைச்சரவைக்குத் தாம் சமர்ப்பித்த பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர், இறக்குமதித் தீர்வையுடனான மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 60ஆவது நிறைவு விழா கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியுள்ளதாவது:–

இலங்கையின் பத்திரிகை வரலாற்றை நோக்கும்போது உலகில் பத்திரிகை வெளி வந்து நூறு வருடங்களுக்குப் பின்னரே இலங்கையில் பத்திரிகை வெளிவந்தது. அப்போதும் முறையான ஊடக அமைப்பொன்று செயற்பட்டதில்லை.

அத்தகைய சூழலில் எமது நாட்டின் சில ஊடகவியலாளர்களின் முயற்சியில் இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டுச் செயற்படுத் தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். சிற்றம்பலம் கார்டினர், டி.பி. தனபால, ரெஜி மைக்கல், ஈ.எம். காரியக்கரவன போன்றோர் இதில் எப்போதும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

இதில் காரியக்கரவனவின் பெயர் குறிப்பிடத்தக்கது. அவர் பல பதவிகளை ஊடகத்துறையில் வகித்துள்ளார். அவரது மூன்று பரம்பரை ஊடகத்துறைக்கு அர்ப்பணிப்புள்ள சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவர் எழுதியுள்ள நூல்கள் வளர்ந்து வரும் இளைய ஊடகவியலாளர்களுக்குச் சிறந்த கையேடாக அமைகிறது.

கடந்த தசாப்தமானது ஊடகத்துறை பெரும் வளர்ச்சி பெற்றுள்ள காலமாகும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சமூக இணையத் தளங்கள் என அவை தொடர்ந்துள்ளன.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் எதிர்கொள்ள நேர்ந்த அசௌகரியங்கள் அனைவரும் அறிந்ததே. கடந்த ஜனவரி 8ஆம் திகதி இந்த நாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்ற போது நாட்டில் ஊடக சுதந்திரம் பெரும் சவாலை எதிர்நோக்கியிருந்தது என்பதை சகலரும் அறிவர். ஊடக சுதந்திரம் அதல பாதாளத்தில் தள்ளப்பட்டுக் கறுப்புக்கறை படிந்ததாகக் காணப்பட்ட யுகம் அது. தற்போது ஊடகங்களோடு எப்போதும் சுமுகமான தொடர்பைக் கொண்டிருந்த ஜனாதிபதி நாட்டின் தலைவராக உள்ளார்.

இப்போது வெள்ளை வான் விவகாரம் நாட்டில் கிடையாது. ஊடகவியலாளர் தாக்கப்படுவதில்லை. அல்லது படுகொலை செய்யப்படுவதில்லை. அச்சுறுத்தல் தாங்காமல் ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்கின்றனர் என்ற செய்திக்கும் இடமில்லை. பேனையைச் சுதந்திரமாக உபயோகிக்கும் சூழல் நாட்டில் நிலவுவதால் வெளிநாடுகளிலிருந்தவர்கள் மீள நாடு திரும்புவதையே காண முடிகிறது. ஊடக அமைச்சரிடமிருந்து தொலைபேசி மூலம் ஏதாவது அழுத்தம் கொடுக்கப்படுவதாகக் கூட அறிய முடியவில்லை. அத்தகைய சூழல் நாட்டில் நிலவுகிறது.

நாம் ஊடகவியலாளர்களுக்கான நலன் புரித்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம். ஊடகவியலாளர்களது கனவுகளில் வீடு முக்கியமானது. சில ஊடகவியலாளர்கள் விடுதிகளிலும், விகாரைகளிலும் தங்கியிருந்து பணி புரிவதைக் காணமுடிகிறது. அவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் திட்டம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அமைச்சரவையில் இது தொடர்பான பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அடுத்தகட்ட நடவடிக்கைகளை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். அதேபோன்று இறக்குமதி வரியற்ற ரீதியில் மோட்டார் சைக்கிள்களை வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அரசு இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(த-வ)

# அலுகோசு பதவிக்கான நேர்முகத் தேர்வு இன்று

## 24 விண்ணப்பதாரிகள் அழைப்பு

கொழும்பு, ஒக். 13

இரண்டு அலுகோசு (கைதிகளைத் தூக்கில் இடுபவர்) பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை இன்று நடைபெறவுள்ளதாகவும், அப்பதவிக்கு மொத்தமாக 24 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹண புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்குவரும்போது மனநலமருத்துவ நிபுணர் ஒருவரின் சான்றிதழுடன் வரவேண்டுமென அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், நேர்முகப் பரீட்சை அரச பரிபாலனத் திணைக்களத்தினதும் சிறைச்சாலைகள் புனர்நிர்மாணத் திணைக்களத்தினதும் உயரதிகாரிகள் இருவரால் நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பதவியைத் தங்களுக்குப் பெற்றுத்தருமாறு கோரி இரு பெண்களும், சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரும் கடிதங்கள் அனுப்பியுள்ளதாகவும், இந்தப் பதவிக்குப் பெண்கள் பொருத்தமில்லை என்பதால் அவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் சமுர்த்தி உத்தியோகத்தர் முறையாக விண்ணப்பம் செய்திராதபடியால் அவரது விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ரோஹண புஷ்புகுமார எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் இப்பதவிகள் இரண்டும் நிரப்பப்படுமெனவும் தெரிவித்தார்.

(த)

# போர்ட் சிற்றி அறிக்கை விரைவில் வெளியாகும்

கொழும்பு, ஒக். 13

சர்ச்சைக்குரிய கொழும்புத் துறைமுக நகரம் (போர்ட் சிற்றி) பற்றிய தீர்மானம் குறித்த அறிக்கை, புதிய சுற்றாடல் பாதிப்பு பற்றிய ஆய்வின் அடிப்படையில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தயாரித்துவரும் இந்த அறிக்கை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன் இந்தத் துறைமுக நகரம் பற்றிய ஆய்வை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பத்து உறுப்பினர்களைக்கொண்ட குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அந்தத் திணைக்கத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் சம்பந்தமாக அண்மையில் இலங்கைப் பயணத்தை மேற் கொண்ட விசேட சீனத் தூதுவருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதனைத் தொடர்ந்து அந்தத் திட்டம் தொடர்பான நிதி சம்பந்தமாக ஆராயநிதியமைச்சருக்கும் ஏனைய உயரதிகாரிகளுக்கும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுமெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்கு 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகுமெனவும் இதற்காகச் சுமார் 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடுகளாக எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் சுமார் 85 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்குமெனவும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

(த)

# சர்வதேச நாடுகளை ஏமாற்றும் இலங்கை

## கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஒக்.13

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளை இலங்கை ஏமாற்றி வருகிறது என தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தமிழக மீனவர்களை இந்திய மத்திய அரசு பாதுகாக்கவேண்டும். கைதாகும் மீனவர்களை விரும்பும்போதுதான் இலங்கை அரசு விடுதலை செய்கின்றது.

தமிழக மீனவர்கள் குறித்து முதல்வர் எழுதும் கடிதத்தை இந்திய, இலங்கை அரசுகள் கண்டு கொள்வதில்லை. ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து மறு நாளே, அதற்கு இலங்கை ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளை இலங்கை ஏமாற்றி வருகிறது என அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

(த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்



கரணவாய், ஒக். 13

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் மின் னொ ளியில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும், இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்து பாசையூர்சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-108)

# சென்.சேவியர், வல்வை அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி





யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்குஇடையே நடத்திவரும் தொடரின் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கிடையிலான ஆட்டங்கள் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. குறித்த தொடரின் இரண்டாவது சுற்றில் விளையாட சென். சேவியர் அணி, வல்வை அணி ஆகியவை தகுதி பெற்றுள்ளன.

**வல்வை எதிர் இளைஞர்**

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலா வதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்திய வல்வை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**சென்.சேவியர் எதிர் ஆதிசக்தி**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆதிசக்தி அணியை எதிர்த்து சென்.சேவியர் அணி மோதிக் கொண்து. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் இந்த ஆட்டமும் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. சமநிலைத் தவிரிப்பு உதைகளில் சென்.சேவியர் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23-108)

# வீழ்ந்தது அராலி ஜேம்ஸ் கிண்ணம் நியூஸ்ராரிடம்



யாழ்ப்பாணம், ஒக். 13

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் துணைவி நியூஸ்ரார் அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஏ.எல். கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அராலி ஜேம்ஸ் அணியை எதிர்த்து துணைவி நியூஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரதும் கால்களுக்குள் பந்து மிதிபட்டுத் திரிந்ததுதான் மிச்சம் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல்பாதி.

இரண்டாம் பாதியிலும் கிட்டத்தட்ட இதே நிலைமைதான். நீண்ட போராட்டத்தின் பின்னர் ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் துணைவி நியூஸ்ரார் அணியின் பிரபாஸ்கரன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்ய நியூஸ்ராரின் ஆதிக்கம் ஆரம்பமானது. 32ஆவது நிமிடத்தில் நியூஸ்ராரின் கிருஸ்ணகுமார் இரண்டாவது கோலையும் பதிவுசெய்ய அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. ஆட்டம் நிறைவடைய ஒரு நிமிடம் இருக்கையில் நியூஸ்ரார் அணி தனக்குக் கிடைத்த தண்டனை உதையையும் கோலாக்க முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

(ம-23)

## தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் அருணோதயா வீரன் புதிய சாதனை

வலி வடக்கு, ஒக். 13

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெற்றுவரும் தடகளத் தொடரில் ஓர் அங்கமான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரன் என்.நெப்தெலி ஜொய்சன் கடந்த பதின்மூன்று வருட சாதனையை முறி யடித்து தேசிய மட்டத்தில் புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற தடகளத்தொடரில் மாதம்பை சேனநாயக்க மத்திய மகா வித்தியாலய வீரன் மதுரங்கா பெர்னாந்துவினால் 4 மீற்றர் உயரம் பாய்ந்து நிலைநாட்டப்பட்ட சாதனையை நடப்பு வருடத்தில் ஜொய்சன் 4.21 மீற்றர் உயரம் பாயந்து முறியடித்துள்ளார். (ம-86)

## கிண்ணத்தை தனதாக்கியது புங்குடுதீவு ம.வித்தியாலயம்



யாழ்ப்பாணம், ஒக். 13

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புங்குடுதீவு ஈஸ்வரன் விளையாட்டுக்கழகம் மறைந்த புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் சதாசிவம் கணேஸ்வரன் ஞாபகார்த்தமாக நடத்தும் தீவக பாட சாலைகளுக்கு இடையிலான விலகல் முறையிலான உதைபந் தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணியை எதிர்த்து புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாகப் புங்குடுதீவு மகா வித்தியாலய அணியின் அனிஸ்ரன்ராஜ் தெரிவானார்.

(ம-23)

## கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்.ஜேம்ஸ்



யாழ்ப்பாணம், ஒக். 13

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புங்குடுதீவு ஈஸ்வரன் விளையாட்டுக்கழகம் மறைந்த புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் சதாசிவம் கணேஸ்வரன் ஞாபகார்த்தமாக நடந்தும் தீவக கழக அணிகளுக்கு இடையிலான விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஊர்காவற்துறை சென்.ஜேம்ஸ் அணியை எதிர்த்து புங்குடுதீவு நண்பர்கள் அணி மோதிக் கொண்டது. இதில் ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் அணியின் பிரசாந்தும் சிறந்த [illegible] ராஜாவும் தெரிவானார்கள். (ம-23)

இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 15வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் மகாஜனக் கல்லூரியின் மாணவி ச.செரீனா 1.49மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மைலோ கிண்ணத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் வடமராட்சி லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கான ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன. வடமராட்சி லீக்கிலிருந்து 20 அணிகள் இதில் பங்குபற்றுகின்றன. (ம-23-108)

# அஸ்வினுக்கு ஏற்பட்ட காயமே தோல்விக்கு முக்கிய காரணமாம்

ஆட்டத்தின் பாதியில் காயம் காரணமாகஅஸ்வின்வெளியேறியமையே இந்திய அணியின் தோல்விக்கான முக்கிய காரணம் என்று தெரிவித்துள்ளார் அணித்தலைவர் டோனி.

இந்தியா– தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதல் ஒரு நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் கான்பூரில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 250 ஓட்டங்களையே எட்டுவதற்கு கஷ்டப்படும் என்ற நிலையில் இருந்தது. ஆனால் தனது 4ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அஸ்வின் காயம் காரணமாகப் பாதியிலேயே வெளியேறியதால் அவரது எஞ்சிய 6 பந்துப்பரிமாற்றங்களைப் பொறுத்த மட்டில் இந்திய அணிக்குப் பின்னடைவு ஏற்பட்டது.

இதனால் தென்னாபிரிக்கா நெருக்கடிகளில் இருந்து விடுபட்டு 300 ஓட்டங்களைக் கடந்தது.

குறித்த தோல்வி தொடர்பாக டோனி கருத்துவெளியிட்டபோது; 'நாங்கள் வெற்றியை நெருங்கி வந்தோம். கண்டிப்பாக இந்த ஆட்டத்தை நாங்கள் வென்றிருக்க வேண்டும். அருமையான வாய்ப்பு இருந்தும் நாங்கள் தவறாகச் சென்று விட்டோம். தோல்விக்கான மிகமுக்கிய காரணம் அஸ்வினின் வெளியேற்றம். ஆட்டத்தின் பாதியில் மிகுந்த நம்பிக்கையான பந்து வீச்சாளர் வெளியேறுவதென்பது மிகவும் பின்னடைவை ஏற்படுத்தும். அஸ்வின் முழுமையாகப் பத்துப் பந்துப்பரிமாற்றங்களை வீசியிருந்தால் நிச்சயம் தென்னாபிரிக்காவை 260–275 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியிருக்க வாய்ப்புக்கள் இருந்தன. ரோகித் சர்மாவின் போர்ம் அபாரமாக உள்ளது. நிச்சயம் தொடர் முழுவதும் அவர் தனது போர்மை தொடர வேண்டும்–என்றார். (ம)



# அன்ரனிஸை வீழ்த்தியது யங்கென்றிஸ்

யாழ்ப்பாணம், ஒக். 13
வடமாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திப் பேரவை நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அந்தோனியார்புரம் மைதானத்தில் இடம்பெற்றது. அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதிய இந்த ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப்பெற்றமையால் சமநிலை தவிர்ப்புஉதைகள் வரை ஆட்டம் நீடித்தது.இதில்இளவாலையங்கென்றிஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

# தேசியத்தில் தங்கம் வென்ற சென்.அன்ரனிஸ் அணியினருக்கு இன்று கல்லூரியில் கௌரவம்

யாழ்ப்பாணம், ஒக். 13
இலங்கைப்பாடசாலைகளுக்குஇடையிலானதேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணியினர் இன்று கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த கௌரவிப்பு நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இரவீந்திரனும், சிறப்புவிருந்தினராகவடமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமாரும், கௌரவ விருந்தினர்களாக மரியன்னை பேராலய பங்குத் தந்தை அருட்பணி ஆர்.எஸ் சகாயநாயகம், வேலணை கல்வி வலயப் பணிப்பாளர் ரி.யோண்குயின்ரஸ், வடமாகாண உதவிப் பணிப்பாளர் சத்தியபாலன், ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சத்தியசீலன் ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம–23)

# வவுனியா மத்திய ம.வி.க்கு மேலும் இரு பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 13
தேசியமட்டத் தடகளப் போட்டியில் பெண்களுக்கான குண்டெறிதல் பிரிவிலும், தட்டெறிதல் பிரிவிலும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால மாணவி தர்சிகா பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 21வயதுக்கு உட்பட்ட தட்டெறிதல் போட்டியில் 29.75 மீற்றர் தூரத்துக்கு தட்டெறிந்து வெண்கலப் பதக்கத்தையும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற 21 வயதுக்குஉட்பட்டபெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் 9.85மீற்றர் தூரத்துக்குக்குண்டெறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். தர்சிகா இதுவரை தேசிய மட்டத்தில் 26 பதக்கங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம–23)

# கரப்பந்தாட்டச் சங்கத்தின் கௌரவிப்பு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ்.மாவட்டகரப்பந்தாட்டச்சங்கம் தனது மூத்த வீரர்கள் மற்றும் சிறந்த கரப்பந்தாட்ட நடுவர், சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து கௌரவித்துள்ளது.

அண்மையில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில்கரப்பந்தாட்டத்தில்சிறந்துவிளங்கிய மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டக் கழகத்தின் முன்னாள் வீரர் ஜோர்ச், அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தின்முன்னாள் வீரர் கமலநாதன் ஆகியோர் மூத்த வீரர்கள் என்ற அடிப்படையிலும் சிறந்தகரப்பந்தாட்ட நடுவராக செ.மகிந்தனும், சிறந்த வீரராக ஆவரங்கால் இந்து விளையாட்டு கழகத்தின் பி.தார்மிகனும் கௌரவிக்கப்பட்டனர். (ம–23)

# மகாஜனா மற்றொரு சாதனை



மாங்குளம் ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலானதேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளின் ஓர் அங்கமான 19வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மகாஜனாவைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.டிலக்சன் 4.42மீற்றர் உயரத்துக்குக் கோலூன்றிப் பாய்ந்து புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

நேற்றுத்திங்கட்கிழமைதியகம மகிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில், 2012ஆம் ஆண்டு கண்டி வளல ரட்ணாயக்க கல்லூரியைச்சேர்ந்தஎம்.ஏச்.ஐ.சந்துருவான் 4.31மீற்றர் பாய்ந்து ஏற்படுத்திய சாதனையை முறியடித்து எஸ்.டிலக்ஷன் 4.42மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை படைத்துத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ம–422)



*பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் இன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகிறது. ஆட்டம் இலங்கை நேரப்படி முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும். இந்த ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியிலிருந்து ஸ்ரீவ் பின் காயம் காரணமாக விலகியுள்ளமை அந்த அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.* (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தர்மபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று கிளி.தர்மபுரம் மத்தியகல்லூரி அணிக்கும் கிளி.முழங்காவில் மகா வித்தியாலய அணிக்கும் இடையில் இரண்டு நாள்கள் கொண்ட டெஸ்ட் ஆட்டம் (தர்ம முழக்கம்) ஆரம்பமானது. இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும், சிறப்பு விருந்தினராக கிளி நொச்சி கல்விவலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.விஸ்ணுவும் கலந்து கொண்டனர். (ம-422)

## ஹாட்லிக்கு தங்கம்



யாழ்ப்பாணம், ஒக். 13

பியகமவில் இடம்பெற்ற இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பாலச்சந்திரன் ஆனந்த் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவினருக்கான தட்டெறிதல் நிகழ்வில் 44.52 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-108)

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி இரத்தினசிங்கம்



தோற்றம் 24.3.1934 — மறைவு 11.10.2015

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி இரத்தினசிங்கம் 11.10.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சந்திரசேனா காலஞ்சென்றவர்களான கணநாதன், துரைசிங்கம், மங்களேஸ்வரி ஆகியோர்களின் அன்புச் சகோதரியும் இராஜசிங்கம்(சுவிஸ்), விமலகுமாரி(ஆசிரியை - யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), ஈசன் (சுவிஸ்), ஜெயம்(லண்டன்), சுகந்தன்(சுவிஸ்), சீலன் (உரிமையாளர் - இரத்தினம் கிறீம் கவுஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாவதி(சுவிஸ்), தயானந்தம், பாமினி(சுவிஸ்), கீதாஞ்சலி (லண்டன்), கோமளா(சுவிஸ்), காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னார் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
உடுவில்.
(65452)(14.16.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## வெளிவந்துவிட்டது

**2016 ஆம் ஆண்டுக்கான**
**புதிய வெளியீடு**
கணிதம், தமிழ், சுற்றாடல் - 2016
தரம் 1 முதல்5 வரை
ஆக்கம் :- **ந.சந்திரகுமார்**
(மட்டக்களப்பு)
**அன்னை புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.
**021 222 9881**
(C/18924)(10.17)

## A⁻, O⁻ சிறுநீரகம் தேவை

A⁻ குருதிவகையைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவருக்கு A⁻,O⁻ குருதி வகையுடையவர்களின் சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
**(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)**
தொடர்:
**077 623 5454**
(65454)(10.17)

## LEAN Builders Pvt.Ltd

**Design-Construction-Management-Engineering Services**

கீழ்வரும் பதவிகளுக்கு பயிலுநர்களிடமிருந்தும் அனுபவமுள்ளவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் விண்ணப்பப் படிவத்தினை நிழற்படத்துடன் சகல ஆவணப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும். ஓய்வு பெற்றவர்களின் விண்ணப்பங்களும் வரவேற்கப்படுகின்றன.

1. Draughtsman
2. Technical Officer
3. Quantity Surveyor
4. Accounting Assistant

(65455)(10.17)

**Lean Builders (pvt) Ltd**
**15, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P: 021 2219947, 0773400669**
Email: leanbuilders.jaffna@gmail.com



## கமில்டன் மிக அருகில்

நடப்பு வருடத்தின் உலக கார்பந்தயத் தொடர் வழக்கம்போல 19 சுற்றுகளாக நடந்து வருகிறது. இதன் 15 ஆவது சுற்று ரஷ்யாவில் நேற்று நடந்தது. பந்தயதூரமான 309.732 கிலோ மீற்றரை வெறும் 1 மணித்தியாலயம் 37 நிமிடங்களில் கடந்த கமில்டன் முதலாவது இடத்தை கைப்பற்றினார். தவிர நிறைவடைந்த முதல் 15 சுற்றுக்களின் அடிப்படையிலும் கமில்டன் வலுவான ஆதிக்கத்தை செலுத்துகிறார். இதனால் அவர் கிண்ணத்தை தக்கவைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்றும் கருதப்படுகிறது.

15 சுற்றுக்களின் முடிவில் கமில்டன்302புள்ளிகளுடன் முதலிடத்திலும் வெட்டல் 236புள்ளிகளுடன்இரண்டாவது இடத்திலும், ஜேர்மனியின் ரஸ்பேர்க் 229 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். தொடரின்16 ஆவதுசுற்றுஅமெரிக்காவில் எதிர்வரும் 26ஆம் திகதி நடக்கவிருக்கிறது. (ம)

## வெளிவந்துவிட்டது

**தீபாவளி வாழ்த்துமடல்கள்**
**புத்தம் புதிய டிசைன்களில்**
போஸ்காட் பெரிது, சிறிது, சினிமா, சுவாமி, இருமடிப்பு காட் கட்டிங் காட், சுவாமி, சினிமா, பூக்கள், சீநெறிகள் என்பன வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
**அன்னை புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.
**021 222 9881**
(C/18771)(10.17)

## TEACHER WANTED

ஆங்கிலப் பாடசாலையில் ( UKG, Primary )
கற்பிக்கக்கூடிய ஆசிரியை எமது கிளிநொச்சி பாடசாலைக்கு தேவை. சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
**ELTC ஆங்கிலப்பாடசாலை 077 074 3131**

## விற்பனை முகவர் தேவை

பாடசாலைக்கான வெளியீடுகளை நேரடியாக விற்பனை செய்வதற்கு வலிகாமம், வடமராட்சி, கிளிநொச்சி, முல்லைத் தீவு மன்னார், வவுனியா ஆகிய இடங்களிற்கு முகவர் தேவை.
**ELTC வெளியீட்டகம்**
**மீசாலை. 077 074 3131**


## குறைந்தளவான கட்டணங்களுடன் சுயதொழில் வாய்ப்புகளை கொண்ட கற்கைநெறிகள்

**New Gateway Tech இடமிருந்து....**



AUTODESK AUTOCAD

**கட்டட நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் துறைகளில் மிக முக்கியமான மென்பொருள்**

விரும்பிய நேரசூசியுடன் ஆரம்பத்திலிருந்து மென்பொருளை முழுமையாக கையாளக்கூடிய நிலை வரை பயிற்சிகள் வழங்கப்படும். **AutoCAD for Beginners** மற்றும் ஏற்கனவே மென்பொருள் பற்றி அறிந்தவர்கள் பயிலக்கூடிய வகையில் **Advanced AutoCAD** கற்கை நெறிகளும் நடைபெறுகின்றன.

NGT GATEWAY
No. 39, College Road, Neeraviyadi, Jaffna.

**Address : 39, College Road, Neeraviyadi, Jaffna.**
**Telephone : 021 493 6666 / 0716 362 362**
(10.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.